# TNPSC Group II & IV

# நடப்பு நிகழ்வுகள்

## KANCHI VALLUVAN IAS ACADEMY

## RAPID REVISION CURRENT AFFAIRS

## 2024- 25

Special thanks by- **Naveen Kumar**

**Main office -**
No 19, St Mary's School St,
Vasantha Bazaar (Near Railway Station), Gummidipoondi - 601201.
**Branches**
Kanchipuram, Chennai.
www.kanchivalluvan.com
9442678741

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு | 3 |
| 2. | தமிழக அகழாய்வு | 14 |
| 3. | தமிழக குழுக்கள் | 16 |
| 4. | தமிழக அரசின் திட்டங்கள் | 18 |
| 5. | இந்தியாவின் முதன்மைகள் | 29 |
| 6. | நியமனங்கள் | 44 |
| 7. | புவியியல் சார்ந்த நடப்பு நிகழ்வுகள் | 50 |
| 8. | பொருளாதாரம் | 51 |
| 9. | பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி | 52 |
| 10. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 55 |
| 11. | அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் | 61 |
| 12. | சர்வதேச அமைப்புகள் | 64 |
| 13. | சர்வதேச செய்திகள் | 66 |
| 14. | புகழ்பெற்ற நபர்கள் | 68 |
| 15. | நூல்கள் மற்றும் நூலாசிரியர்கள் | 70 |
| 16. | விருதுகள் | 71 |
| 17. | விளையாட்டு | 80 |
| 18. | மத்திய நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) | 85 |
| 19. | தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2025–26 | 96 |
| 20. | அரசியலமைப்பு சார்ந்த நடப்பு நிகழ்வுகள் | 98 |
| 21. | போர் பயிற்சிகள் | 101 |
| 22. | மார்ச் முதல் மே வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் | 105 |
| 23. | சர்வதேச அமைப்புகள் | 108 |
| 24. | முக்கிய தினங்கள் | 109 |

# 1. தமிழ்நாடு

**தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி நூல்கள் அனைத்தும் நாட்டுடைமை யாக்கப்பட்டது**

- 15 வயதில் மாணவ நேசன் என்ற கையெழுத்து ஏடு தொடங்கி 18 வயதில் பேரறிஞர் அண்ணாவின் திராவிட நாடுகளில் இளமைப்பலி என்று அவரது முதற்கட்டுரை வரை வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது
- தனது 23ஆம் வயதில் ராஜகுமாரி திரைப்படத்திற்கு முதன்முதலாக வசனம் எழுதினார்
- ஒ எம் பியூட்டி முதன் முதலில் முரசொலி எனும் துண்டு இதழ் வெளியிட்டை 1942 ஆம் ஆண்டு வெளியிட்டார். 1960 ஆம் ஆண்டு அதனை நாளிதழாக மாற்றினார்.
- ஐந்து முறை தமிழக முதல்வராக பணியாற்றியுள்ளார்

**மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்குத் திரும்பும் பெண் காவலர்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்களது சொந்த மாவட்டத்திலேயே பணி மாறுதல் வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

- தமிழக காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு ஓராண்டு மகப்பேறு விடுமுறை அளிக்கப்படுகிறது
- இந்த விடுமுறை முடிந்து பணிக்கு திரும்பும்போது குழந்தைகளை பராமரிப்பதில் பல சிரமங்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்
- மகப்பேறு விடுமுறை முடிந்து பணிக்கு திரும்பும் பெண் காவலர்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்களது பனி மூப்புக்கு விளக்க அளித்துஇ அவர்களுடைய பெற்றோர் அல்லது கணவர் வீட்டினர் வசிக்கும் மாவட்டத்திற்கு பணி மாறுதல் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது

**நியாயவிலை கடைகளில் பொருட்களை பாக்கெட்டுகளில் விநியோகிக்கும் திட்டம்**

- தொடக்கம் – 1 ஆகஸ்ட் 2024
- இந்த திட்டம் முதல் கட்டமாக சேலம் மாவட்டம் சீரங்கப் பாளையம் நியாய விலை கடையில் தொடங்கப்பட்டது.
- அனைவருக்கும் சரிவிகித உணவு ஊட்டச்சத்தை உறுதி செய்யும் பொருட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி சர்க்கரை கோதுமை துவரம் பருப்பு பாமாயில் ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு நியாய விலை கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன
- இவ்வாறு விநியோகம் செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களை சிலர் முறைகேடாக கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதாக தொடர்ந்து புகார்கள் எழுந்தன இதை தடுக்கும் விதமாக உணவுப் பொருட்களை பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்ய அரசுத் திட்டமிட்டு அதற்கான பணியை தொடங்கியுள்ளது

**தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீடு**

- நாணயத்தை வெளியிட்டவர் ராஜ்நாத் சிங் (மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்)
- கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டின் ஐந்து முறை முதல்வராக இருந்தார்
- கருணாநிதி பெயரில் சென்னையில் பன்னோக்கு மருத்துவமனை மதுரையில் நூற்றாண்டு நூலகம் கிளாம்பாக்கத்தில் பேருந்து முனையம் போன்றவை அவரது நூற்றாண்டில் உருவாக்கப்பட்டுள்ளன
- நாணயத்தின் சிறப்பம்சங்கள்

1. வட்ட வடிவில் 44 மில்லி மீட்டர் சுற்றளவு 35 கிராம் எடையும் கொண்டதாகும்
2. 200 எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நாணயங்கள் நான்கு வகையான உலோகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன
3. வெள்ளி 50 சதவீதம் தாமிரம் 40மூ நிக்கல் மற்றும் துத்தநாகம் தலா 5மூ சேர்த்து உருவாக்கப்பட்டது
4. நாணயத்தின் முகப்பு பக்கத்தில் அசோகச் சக்கரம் சிங்கம் இந்தியா ஆகிய வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன
5. முன்பக்கத்தில் கலைஞர் எம் கருணாநிதி பிறந்த நூற்றாண்டு என ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“சிவகங்கை பயணிகள் கப்பல்” சேவை மீண்டும் தொடக்கம்**

- நாகை இலங்கை இடையே சிவகங்கை என்ற கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் தொடங்கப்பட்டது.
- கடந்த அக்டோபர் 14ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த கப்பல் ஆனது சில நாட்களில் சேவை நிறுத்தப்பட்டது.
- மீண்டும் இந்த சேவையானது தற்போது தொடங்கப் பட்டுள்ளது.

**வந்தே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்**

- சென்னை – காட்பாடி இடையிலான சோதனை ஓட்டம் நடைபெறுவதாக இருந்தது ஆனால் சென்னை யிலிருந்து வாலாஜா ரோடு ரயில் நிலையத்தோடு சென்னை திரும்பியது.
- இந்த ரயில் பெட்டிகள் சென்னையில் உள்ள ஐ சி எஃபில் தயாரிக்கப்பட்டன.

**இந்திய கடலோர காவல் படையின் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம்**

- மீனவர்களை மீட்பது உட்பட கடலோர காவல் படையின் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சென்னையில் திறக்கப்பட்டுள்ளது.
- திறந்து வைத்தவர் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜநாத் சிங்.

**கூட்டுறவு செயலி (Kootiravu Mobile Application)**

- மருந்தகம் உட்பட கூட்டுறவு துறை சாா்ந்த திட்டங்களை அறிய பிரத்தேக செயலி தொடங்கப்பட்டுள்ளது.
- கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் சேவைகளை பொதுமக்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் கூட்டுறவு என்ற செயலியை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது.
- இந்த செயலியை தொடங்கி வைத்தவர் – கே.ஆர். பெரிய கருப்பன்.

**தமிழ்நாட்டின் புதிய நகராட்சிகள் 2024**

- தமிழக அரசு ஸ்ரீபெரும்புதூர் மற்றும் மாமல்லபுரம் பேரூராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தி உள்ளது.
- இதனுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- தற்போது தமிழ்நாட்டில் 25 மாநகராட்சிகள்இ 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் ஆகியவை நகராட்சி நிர்வாகத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**கர்ப்பிணிகளை கண்காணிக்க “102” மருத்துவ சேவை எண் அறிமுகம்**

- தமிழகத்தில் கர்ப்பிணிகளை கண்காணிக்கும் வகையில் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் 102 மருத்துவ சேவையின் மையம் தொடங்கப்பட்டுள்ளது.
- தொடங்கி வைத்தவர் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன்.
- தமிழகத்தில் ஒரு லட்சம் பிரசவத்தில்இ 45.5 ஆக உயிரிழப்பு உள்ளது.
- உயிரிழப்பை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன அதன் படி கர்ப்பம் தரித்து நான்கு மாதங்கள் வரை உள்ள மூன்று லட்சம் பேர் கண்காணிக்கப்பட உள்ளனர் மேலும் அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும்.

**செங்கல்பட்டு மாவட்டத்தில் 400 கோடியில் புதிய ஆலை அமைக்க அமெரிக்க நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம் செய்துள்ளது**

- எலக்ட்ரோலைசர் மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்வதற்கான ஆலையை அமெரிக்க நிறுவனமான ஓமியம் செங்கல்பட்டில் அமைக்கிறது.
- இதற்கான ஒப்பந்தம் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமானது.
- தமிழ்நாடு உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குகிறது.
- 39,000 க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவுக்கு தொழிற்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்கள் என இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.
- மேலும் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததுடன் கூகுள் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன.

**உயர்வுக்குப் படி திட்டம்**




**சென்னையில் உலகளாவிய திறன் மையம்**

- இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் மேற்கொள்ளப்பட்டது

**நீதிபதி கோகுல்தாஸ் ஆணையம்**

- கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக காவல்துறையினரிடம் ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையிலான ஒரு நபர் ஆணையம் விசாரணை செய்ய அமைக்கப்பட்டது.

**இந்தியாவிலேயே முதன் முதலாக துனை முதல்வர் என்ற பதவியை வகித்தவர் அனுராஷ் நாராயணன்**

- இவர் பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் (1934 முதல் 1953 வரை இவர் துணை முதல்வராக இருந்தார்).
- துனை முதல்வர் பதவி என்பது அரசியலமைப்பில் குறிப்பிடபடவில்லை.
- தமிழ்நாட்டில் முதன் முதலாக துனை முதல்வர் பதவி உருவாக்கப்பட்ட ஆண்டு – 29 மே 2009.
- தமிழ்நாட்டின் முதல் துணை முதல்வர் மு.க. ஸ்டாலின்.
- தமிழ்நாட்டின் தற்போதைய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.

**சிறந்த சுற்றுலா கிராமம்**

- உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இந்த விருது வழங்கப்பட்டது
- கீழடி –பாரம்பரிய பிரிவில் சிறந்த சுற்றுலா கிராமமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது
- மேல்காங்கம்பட்டி ஆன்மீகம் மற்றும் ஆரோக்கியம் பிரிவில் சிறந்த சுற்றுலா கிராமமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**TN & Alert**

தமிழகத்தில் மழை வெள்ளம் போன்ற முன்னெச்சரிக்கை தகவல்களை மக்களுக்கு வழங்க தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ள செயிலி

- சரியான நேரத்தில் மக்களுக்கு வானிலை முன்னெச்சரிக்கை தகவரல்களை வழங்க தேவையான உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பெய்யும் மழையின் அளவு அப்போதே தெரிந்தால் தான், அணைகளில் நீர் திறப்பு மேலாண்மை, வெள்ள முன்னெச்சரிக்கை தகவல்களை வழங்க முடியும்.
- இந்த தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்காக TN&ALert என்ற கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

**தமிழகததில் பேறுகால உயிரிழப்பு விகிதம் (MMR Ratio); (1 இலட்சம் பிரசவவங்களுக்கு) – 45.5**

- பேறுகால உயிரிழப்புகள் (MMR)

1. இந்தியாவின் MMR விகிதம் – 97
2. இந்தியாவில் MMR விகிதம் அதிகமாக உள்ள மாநிலம் – அசாம் (170)
3. இந்தியாவில் MMR விகிதம் குறைவாக உள்ள மாநிலம் – கேரளா (19)
4. தமிழ்நாட்டின் MMR விகிதம் – 45.5

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்க்கு ஐ.நா அமைப்பின் United Nation Interagency task force Award என்ற விருது வழங்கப்பட்டது

**மக்களை தேடி மருத்துவம்**

- தொடக்கம் – 25 ஆக்ஸ்ட் 2021
- இடம் – சமனப்பள்ளி (கிருஷ்ணகிரி)

- நோக்கம் – 45 வயதிற்க்கு மேற்பட்ட நபர்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு சென்று தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவது.

**Cystar**

1. சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்ப கழகமானது இந்தியாவின் இணையவெளி பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துவதற்காக இணைய வெளிப்பாதுகாப்பு நம்பிக்கை மற்றும் நம்பகத் தன்மைக்கான மையத்தினை (ஊலளவயச) நிறுவியுள்ளது.

**தமிழகத்தில் ஆரம்ப கால குழந்தை வளர்ச்சிக்காக தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ள செயலி பெற்றோர் பராமரிப்பு செயலி.**

- ❖ இந்த பெற்றோர் பயன்பாட்டு செயலியினால் சுகாதாரச் செய்திகள், கர்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து செய்திகள், கர்ப்பம் மற்றும் பிரசவ காலம் பற்றிய செய்திகள், பிரசவத்திற்க்கு பின் கவணிப்பு மற்றும் பிறந்த குழந்தையின் வளர்ச்சியை பற்றிய கண்கானிப்பு, குழந்தை பராமரிப்பு பற்றி தெரிந்து கொள்ளுதல் தாய்பாலின் முக்கியத்துவத்தை அறிதல் போன்ற அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.
- ❖ கர்பம் மற்றும் பிரசவ காலத்தில் ஏற்படும் சிக்கல்களை கண்டறிந்து உடனடியாக பரிந்துரை செய்து தாயின் உயிரை காப்பதற்கும் இந்த செயலி வழிவகை செய்யும்

**மகிழ் முற்றம்**

- ❖ திட்டத்தின் நோக்கம்

1. குழுவாக இனைந்து செயல்படுதல், சமூக மணப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவை மாணவர் குழு அமைப்பின் முதன்மையான நோக்கம்
2. அரசுப் பள்ளிகளிலும் மாணவர் குழு அமைப்பை மகிழ் முற்றம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
3. இந்த குழு கூட்டமைப்பின் கீழ் பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறிஞ்சி, முல்லை உள்ளிட்ட 5 குழுக்களாக பிரிக்கப்படுவர்.
4. இந்த குழுவில் 1 முதல் பிளஸ் 2 வரை உள்ள அனைத்து மாணவர்கள்களும் இடம்பெறுவர்
5. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவர்கள் இந்த 5 குழுக்களில் இடம்பெறும் வகையில் பிரிக்கப்பட்டு அவர்களுக்கான குழு எமிஸ் தளத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**தமிழ்நாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியல் இரண்டாமிடம் வகிக்கிறது**

- மூன்றாம் இடத்தில் குஜராத் மாநிலம் உள்ளது
- 2023–24 நிதி ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு 9.21%
- 2023 – 24 நிதியாண்டு
- தமிழ்நாட்டின் பணவீக்கம் – 5.37% (இந்தியா 5.38%)
- தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி – 23,93,364கோடி
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 8.23%
- தமிழ்நாட்டின் மாநிலத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி ஏற்பாய் 23%
- தமிழ்நாடு 2021 முதல் 2024 என மூன்று ஆண்டுகளில் சராசரி வளர்ச்சி விகிதம் 8.08%

**பாதம் பாதுகாப்போம் திட்டம்**

- சர்க்கரை நோயாளிகளுக்கான பாதம் பாதுகாப்போம் திட்டத்தை தமிழகத்தின் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அரசு மருத்துவமனைகள் தொடங்குவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது
- பாதம் பாதுகாப்போம் திட்டம் சர்க்கரை நோய் பாத பாதிப்புகளை தவிர்ப்பதற்கும் கால் இழப்புகளை ஏற்படுவதை தடுப்பதற்கும் வழிவகை செய்கிறது
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் இத்திட்டம் கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த பாத மருத்துவ சேவைகளை 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது
- நாட்டிலேயே இது போன்ற முன்னெடுப்பை அரசு மேற்கொள்வது இதுவே முதல் முறை

**தமிழகத்தின் வரைவு வாக்காளர் பட்டியல்**

- வெளியீடு – தமிழக தேர்தல் ஆணையம்
- மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை – 6 கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588
- ஆண்கள் – 3 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரத்து 791.
- பெண்கள் – கோடியே 19 லட்சத்து 30 ஆயிரத்து 833

- மூன்றாம் பாலினத்தவர் – 8964
- அதிக வாக்காளர்கள் கொண்ட பேரவை தொகுதி – சோழிங்கநல்லூர் (6.76 இலட்சம்)
- குறைந்த வாக்காளர் கொண்ட தொகுதி – கீழ்வேளூர்( நாகை மாவட்டம்)

**தமிழகத்தில் மகப்பேறு, குழந்தை இறப்பை பூஜ்ஜியத்துக்கு கொண்டுவர 4 புதிய திட்டங்கள்**

தமிழகத்தில் மகப்பேறு, குழந்தை இறப்பை பூஜ்ஜியத்துக்கு கொண்டு வருவதற்காக 4 புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன

- தமிழகத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் பிறவி குறைபாடுகளைக் கண்டறிய 1,000 அரசு மருத்துவமனைகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பச்சிளங் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் நலனை கண்காணிக்கசிறப்பு மையங்கள் 400 இடங்களில் தொடங்கப்படுள்ளன.
- ஆரம்பகால குழந்தை வளர்ச்சிக்கான 'பெற்றோர் பயன்பாட்டு செயலி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு குழந்தைநலத் திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் 1,000 பிறப்புகளுக்கு 10.2 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் 8ஆக் குறைந்துள்ளதாக சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு
- மகப்பேறு மரணம் 1 லட்சம் மகப் பேறுக்கு தமிழகம் 40.2 ஆக உள்ளது.
- இந்த இரண்டு இறப்பு விகிதங்களும் பூஜ்ஜியம் நிலைக்கு செல்வதற்கு இந்த 4 புதிய திட்டங்களும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**கலைஞர் நூற்றாண்டு பூங்கா**

- திறக்கப்பட்ட இடம் – சென்னை
- திறந்து வைத்தவர் – தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின்
- கலைஞர் நூலகம் அமைந்துள்ள இடம் – மதுரை
- கலைஞர் நூலகம் மற்றும் கலைஞர் அறிவியல் மையம் கோவையில் அமைக்கப்பட்டு வருகிறது.
- தொழிற்சாலைப் பணியாளர்கள் அதிகமுள்ள மாநிலங்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கும் மாநிலம் – தமிழ்நாடு

**நீலகிரி வரையாடுகள் தினம்** – அக்டோபர் 7

- நீலகிரி வரையாடுகள் திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட நாள் – 12 அக்டோபர் 2023
- நீலகிரி வரையாடு தினமானது ஈ.ஆர்.சி டேவிதார் (நீலகிரி வரையாடுகள் குறித்து தனது வாழ்நாள் முழுவதும் ஆய்வு மேற்கொண்டவர்) இவரது பிறந்த நாளில் தான் நீலகிரி வரையாடுகள் தினம் கொண்டாடப்படுகிறது

**தமிழகத்தில் மலையேற்றம் செய்வதற்கு இணையதளம் மூலம் முன்பதிவு செய்யும் புதிய திட்டம்**

- தொடங்கி வைத்தவர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்
- தமிழ்நாட்டில் மலையேற்றத்திற்காக 40 பாதைகளை தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்துள்ளது
- மலையேற்றம் செய்வதில் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்த தனி இணையதளம் உருவாக்கப் பட்டுள்ளது – www.trektamilnadu.com

**பதினோராவது உலகத் தமிழர் பொருளாதாரம் மாநாடு**

**நடைபெற்ற இடம் – மலேசிய தலைநகர் கோலாலம்பூர்**

- உலகத் தமிழர் பொருளாதாரம் மாநாடு முதல் முறையாக 2009 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது
- பன்னிரண்டாவது உலகத் தமிழர் பொருளாதாரம் மாநாடு 2025 ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் நடைபெற உள்ளது

**இந்தியாவின் முதல் அனைத்து பெண்கள் மகளிர் காவல் நிலையம்**

1. கோழிக்கோடு கேரளா (இது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது)
2. தமிழ்நாட்டின் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் 1992 ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் ஏற்படுத்தப்பட்டது.
3. 1992 இல் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்
4. 2003ல் இந்தியாவிலேயே முதல் மகளிர் போலீஸ் கமாண்டோ பிரிவை தமிழ்நாடு நிறுவியது.
5. 2005 ஆம் ஆண்டில், தமிழ்நாடு 1,078 பெண் பணியாளர்களைக் கொண்ட பிரத்யேக மகளிர் போலீஸ் பட்டாலியனை நிறுவியது.

1976 ஆம் ஆண்டில், ஜி. திலகவதி, தமிழ்நாட்டிலிருந்து இந்தியக் காவல் சேவை (ஐபிஎஸ்) அதிகாரியான முதல் பெண்மணி ஆனார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்தந்தை பெரியார் பெயரில் நூலகம் மற்றும் அறிவியல் மையம் அமைப்பதற்காக கோவை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டினார்

- கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி மதுரையில் மாபெரும் நூலகம் அமைக்கப்பட்டது (6 தளங்கள் கொண்டிருந்தது)
- சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், இதனைத் தொடர்ந்து கோவையில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
- 2026 ஜனவரியில் இந்த நூலகம் திறக்கப்படும்.

### "நீராடுங் கடலுடுத்த" என்ற பாடல்

- 1901 மே 24 அன்று பாலவனத்தம் பொ. பாண்டித்துரைதேவரால் மதுரையில் நான்காம் தமிழ் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- இதைத்தொடர்ந்து தஞ்சை தமிழ் சங்கம் சாமிநாதனார் தலைமையிலும், 1911 மே 14 அன்று கரந்தை தமிழ் சங்கம் நாவலர் நா.மு.வேங்கடசாமி நாட்டார் முன்னிலையிலும் தொடங்கப்பட்டன.
- கரந்தை தமிழ் சங்கத்தின் தலைவராக இருந்தவர் உமா மகேஸ்வரனார்.
- கரந்தை தமிழ் சங்கம் தொடங்கப்பெற்ற இரண்டாம் ஆண்டு முதல் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை இயற்றிய "நீராடுங் கடலுடுத்த" எனும் பாடல் சங்கத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் ஒலிக்க தொடங்கியது.
- இந்தப் பாடலை முதன் முதலில் மேடையில் பாடியவர் கூடலூர் வே.ராமசாமி
- 1967–ல் முதல்வராக பொறுப்பேற்ற அண்ணாதுரை தமிழ்நாட்டில் நடைபெறும் அரசு விழாக்கள் கல்லூரி பள்ளி விழாக்கள் அனைத்திலும் பாடக்கூடிய தமிழ்தாய் வாழ்த்து பாடல் ஒன்றை தேர்ந்தெடுப்பதற்காக தமிழறிஞர்களை கூட்டி ஆலோசனை நடத்தினார்.
- அண்ணா மறைந்த பிறகு முதலமைச்சராக பொறுப்பேற்ற கருணாநிதி அவர்கள் 1970 நவம்பர் 23 அன்று வெளியிட்ட அரசாணையில் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அரசு நிகழ்ச்சிகளில் தொடக்கத்தில் பாட வேண்டும் என அரசாணை வெளியிட்டார்.
- 2021 டிசம்பர் 17 அன்று தமிழ் தாய் வாழ்த்து மாநில அரசு பாடலாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்து உத்தரவிட்டார்
- தமிழ் தாய் வாழ்த்து பாடலை எழுதியவர் – மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை
- தமிழ் தாய் வாழ்த்து பாடலுக்கு இசை அமைத்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன்
- தமிழ் தாய் வாழ்த்து பாடலை பாடியவர் டி.எம். சௌந்தர்ராஜன் – பி.சுசீலா.

### சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் தமிழ் பெண் – ராஜம் கிருஷ்ணன்

- சிறுகதைகள் மூலமே இவரின் எழுத்து பயணம் தொடர்ந்தது பின்னால் நாவல் எழுத்தாக மாறியது.
- மித்ரா என்ற பெயரில் மொழிபெயர்ப்புகள் சிறுவர்களுக்கான படைப்புகள் என்று அனைத்து தளங்களிலும் காத்திரமாக இயங்கியவர்.
- கள ஆய்வு முறையிலான எழுத்து வடிவத்தை தமிழில் தொடங்கி வெற்றி பெற்ற எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்.
- " குறிஞ்சித்தேன்" (1960) – நீலகிரி மலைப் பகுதியில் வாழும் படுகர் இன மக்களின் வாழ்க்கை முறை குறித்து எழுதப்பட்ட நூல்.
- "கரிப்பு மணிகள்" (நாவல்) – தூத்துக்குடி மீனவர்கள் – குறிப்பாக பெண்களின் வாழ்க்கையை ஒப்பளத் தொழிலின் பின்னணியில் எழுதப்பட்டது.
- "அலைவாய்க் கரையில்" நாவல் (1978) – தூத்துக்குடி இடிந்த கரை மணப்பாடு அவற்றை சுற்றியுள்ள பகுதிகளில் அரிய வகை சுறா மீன்கள் அதிகம் கொண்டவை சுறாவின் துடுப்பும் வாழும் தூவி என அழைக்கப்படும் இவை மிகவும் விலை உயர்ந்தவை அப்பகுதியில் வாழ்ந்த மீனவர் வறுமை நிலையை பயன்படுத்திக்கொண்டு கழிவு பொருள் என்ற பெயரில் தூவியைப் பெற்று தேவாலயங்கள் ஏற்றுமதி செய்து பணமாக்கிக் கொண்டதால் மீனவர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை ராஜம் கிருஷ்ணன் எழுதியுள்ளார்.
- "வேருக்கு நீர்" (நாவல்) – உண்மையான சத்தியாகிரகம் காந்தியடிகள் கூறிய அகிம்சை வழி கை கூடாத கனவா என்ற சிந்தனை வசப்பட்டு அவர்கள் மேற்கொண்ட சுய ஆய்வே இவருக்கு நீர் நாவலாக வெளியிடப்பட்டது (1973ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது).

- “தோட்டக்காரி” அடித்தட்டு பெண்கள் மட்டுமல்லாமல் தன்னைப் போன்று எழுத்து ஆய்வுக் குலம் என்று இருக்கும் ஒரு பெண்ணை கதாநாயகி ஆக்கி அவர் படைத்த நூல்

**தமிழ்நாட்டில் சர்க்கரை நோயாளிகளுக்காக தொடங்கப்பட்ட ‘பாதம் பாதுகாப்போம் என்ற திட்டம் தமிழக் அரசின் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது**

**மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்**

- தொடக்கம் – 5 ஆகஸ்ட் 2021
- தொடங்கப்பட்ட இடம் – சாமனப்பள்ளி கிருஷ்ணகிரி மாவட்டம்
- திட்டத்தின் நோக்கம் – 45 வயதிற்கு மேற்பட்ட தொற்ற நோய் உடையவர்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவ சிகிச்சை அளிப்பது

**முதல்வர் படைப்பகம் – கொளத்தூர் தொகுதியில் தொடக்கம்**

1. தமிழக முதல்வர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி
2. முதல்வர் படைப்பகத்தில் போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் படிக்கும் சூழலை ஏற்படுத்தவும் புற்று தொழில் தொடங்குவோர் குறைந்த கட்டணத்தில் தங்கள் அலுவலகமாக பயன்படுத்திக் கொள்ளவும் முதல்வரின் தொகுதியான குளத்தூரில் முதல்வர் படைப்பகம் என்ற பகிர்ந்த பணியிட மையம் (co&working space) அமைக்கப்பட்டுள்ளது.

**கள ஆய்வில் முதல்வர் திட்டம்**

**1 பிப்ரவரி 2023**

- தொடங்கப்பட்ட இடம் வேலூர் மாவட்டம்
- நோக்கம் – துறை சார்ந்த அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் பொதுமக்களிடையே கொண்டு செல்வது

## Tamil Nadu wetland mission

- தொடக்கம் – 2022 ஆகஸ்ட்
- நோக்கம் – 5 ஆண்டுகளில் 100 சதுப்பு நிலங்களைக் கண்டறிந்து வரைபடமிடவும், வாழ்வாதார விருப்பங்களை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கவும்

**தேசிய சதுப்பு நில பாதுகாப்பு திட்டம் (NICE)**

- தொடக்கம் 1985 (மத்திய அரசால் தொடங்கப்பட்டது)
- இது நாட்டில் உள்ள ஈர நிலங்களை பாதுகாக்கவும் மற்றும் ஈர நிலங்கள் சீரழிவதை தடுப்பதற்காகவும் தொடங்கப்பட்டது.
- உலக ஈர நில நாள் அல்லது உலக சதுப்பு நில நாள் பிப்ரவரி 2.

இந்தியாவிலேயே அதிகமான ராம்சர் ஈர நிலங்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு– 20

இந்தியாவில் மொத்தம் 91 ராம்சர் ஈர நிலங்கள் உள்ளது



| S_no | Name of the Ramsar Site |
|---|---|
| 1 | Pallikaranai Marsh Reserve Forest |
| 2 | Karikili Bird Sanctuary |
| 3 | Vedanthangal Bird Sanctuary |
| 4 | Kazhuveli Bird Sanctuary |
| 5 | Pichavaram Mangrove |
| 6 | Karaivetti Bird Sanctuary |
| 7 | Vaduvur Bird Sanctuary |
| 8 | Udhayamarthandapuram Bird Sanctuary |
| 9 | Point Calimere Wildlife and Bird Sanctuary |
| 10 | Kanjirankulam Bird Sanctuary |
| 11 | Chitrangudi Bird Sanctuary |
| 12 | Gulf of Mannar Marine Biosphere Reserve |
| 13 | Koonthankulam Bird Sanctuary |
| 14 | Suchindram Theroor Wetland Complex |
| 15 | Vembannur Wetland Complex |
| 16 | Longwood Shola Reserve Forest |
| 17 | Nanjarayan Bird Sanctuary |
| 18 | Vellode Bird Sanctuary |

**வெப்பஅலையை ஒரு பெயரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது**

- வெப்பத்தினால் தமிழகத்தில் அதிக எண்ணிக்கை யிலான உயிரிழப்புகள் பதிவான நிலையில் தமிழ்நாடு அரசு வெப்ப அலையை ஒரு பேரிடராக அறிவித்து உள்ளது.
- இந்தியாவில் ஏற்கனவே சத்தீஸ்கர், ஒடிசா, கேரளா, ராஜஸ்தான், ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா, மற்றும் கர்நாடகா ஆகியன வெப்ப அலையின் மாநிலம், குறிப்பிட்ட பேரிடர்களாக அறிவித்துள்ளன.

**புத்தாய்வு மாணவர் திட்டம்**

- பழங்குடியினர் ஆராய்ச்சிக்காக தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள திட்டம்
- பழங்குடியின சமூகங்கள் தொடர்பான சில துறைகளில் பணிபுரியும் 45 ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட 70 மாணவர்களுக்கு ஆதரவளிப்பதை இது முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

**ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் 2.0**

- இரண்டாம் கட்டம் அரியலூரில் தொடங்கப்பட்டது
- ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து வழங்கீட்டு திட்டம். இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது

**UNESCO அமைப்பின் சிறப்பு விருது**

- ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், துக்காச்சி ஆபத்சகாயேஸ்வரர் கோயிலுக்கு அதன் தொன்மை மாறாமல் புதுப்பித்து குடமுழக்கு நடத்திப் பாதுகாத்தமைக்காக 2024ஆம் ஆண்டிற்கான சிறப்பு விருது வழங்கப்பட்டது.

**விழுதுகள் வாகனம் ஒப்புயர்வு மையம்**

- தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வு சேவைகள் வழங்க மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- இந்த மையங்களுக்கு வர இயலாத மாற்றுத் திறனாளிகளுக்காக 'விழுதுகள்' என்றும் முதல் மறுவாழ்வு சேவை வாகனத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.
- நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில் இந்த வாகனங்கள் பயணிக்கும். அங்கு உள்ள மாற்றுத்திறனாளிகளின் தேவைக்கேற்ப, இயன்முறை, கேட்டல், பேச்சு பயிற்சிஇ சிறப்புக் கல்வி ஆகிய மறுவாழ்வு சேவைகள் இந்த வாகனங்களில் வழங்கப்படும்.

**கலைஞர் கைவினைப் பொருட்கள் திட்டம்**

- சமூக நீதியின் அடிப்படையில் கலைஞர்கள் மற்றும் கைவினை கலைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கில் தமிழ்நாடு மாநில அரசாணது 'கலைஞர் கைவினைப் பொருட்கள் திட்டத்தினை' செயல்படுத்தப்பட உள்ளது.
- 25 வணிகங்கள்/ கைவினைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பிரிவினரும் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது குடும்ப அடிப்படையிலான பாரம்பரிய வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.
- மத்திய அரசு ஏற்கனவே கைவினை கலைஞர்களுக்காக பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டம் 17 செப்டம்பர் 2023 அன்று துவங்கியது.
- பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டமானது 18 விதமான கைவினை கலைஞர்கள் பயன்பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கலைஞர் கைவினைப் பொருட்கள் திட்டம் 25).

**SOP & Speedy disposal of cases**

- சென்னை உயர்நீதிமன்றம் ஆனது மிகவும் அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை தீர்ப்பதற்கு உதவும் ஒரு சீர்தர செயல்பாட்டு நடைமுறையை (Sop) உருவாக்கியுள்ளது.
- பல விவகாரங்களை குறிப்பிடுவதன் மூலம் நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதை தவிர்ப்பதையும் தேவையற்ற வழக்கு ஒத்திவைப்புகளை தடுப்பதையும் இது மிக நன்கு உறுதி செய்கிறது.

**தமிழக அரசு வெளியிட்ட SC/ST களுக்கான நலத்திட்டங்கள்**

1. தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் நல ஆணையம் அமைக்கப்பட்டது.
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினும் விவசாயி களுக்கு துரித மின் இணைப்பு திட்டத்தின் (tatkal Scheme) மின் இணைப்பு பெற 90% மானியம் வழங்கப்பட்டுள்ளது.
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினும் விவசாய தொழிலாளர்கள் நிலம் வாங்க மானியம் வழங்கப் பட்டுள்ளது.

4. அண்ணல் அம்பேத்கர் வணிக வாகையர் திட்டம் – பட்டியலிடப்பட்ட சாதியினர் பழங்குடியினர் பிரிவை சேர்ந்த தொழில் முனைவோரின் பெரும் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்டது

5. அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் – சாலைகள் மற்றும் திருவிளக்குகள் போன்ற வசதிகளை மேம்படுத்துவதற்கும், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்க செய்வதற் காகவும் செயல்படுத்தப்பட்டது.

6. தொல்குடி திட்டம் – பழங்குடியினர் குடியிருப்புகளில் உள்ள வுட் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தொடங்கப்பட்டது.

7. அண்ணல் அம்பேத்கர் அயலக திட்டம் – பட்டியல் மற்றும் பழங்குடியின பிரிவை சேர்ந்த மாணவர்கள் வெளிநாடு சென்று உயர்கல்வி பயில தொடங்கப்பட்ட திட்டம்.

**இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 என்ற திட்டத்தின் விபத்து காப்பீடு உயர்த்தப் பட்டுள்ளது.**

- இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின் கீழ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 2,00,000 வரையிலான சிகிச்சைக்கான காப்பீட்டு தொகையை தமிழ்நாடு உயர்த்தியுள்ளது.
- இன்னுயிர் காப்போம் திட்டம்

6. தொடக்கம் – 18 டிசம்பர் 2021
7. தொடங்கப்பட்ட இடம் – செங்கல்பட்டு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கல்லூரி

நோக்கம் – சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு முதல் 48 மணி நேரங்களுக்கான மருத்துவமனை சிகிச்சைக்கான காப்பீட்டு திட்டம்

**திருக்குறள் வாரம்**

- ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் குரல் வாரமாக கொண்டாடப்படும் என தமிழக முதல்வர் அறிவிப்பு.
- கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.
- கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. இந்த சிலையை தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் 1 ஜனவரி 2000 ல் திறந்து வைத்தார்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் திருக்குறளில் ஆர்வமும் புலமையும் மிக்க ஆசிரியர்கள் பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கி மாவட்டம் தோறும் தொடர் பயிலரங்குகள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

**ஐராவதம் மகாதேவன் பெயரில் சிந்துவெளி ஆய்வு இருக்கை**

- சிந்துவெளி பண்பாடு குறித்த தொடர் ஆய்வுக்கு பங்களித்த மறைந்த தொல்லியல் அறிவாளர் ஐராவதம் மகாதேவன் பெயரில் ஆய்வு இருக்கை அமைக்கப்படும் என தமிழக முதல்வர் அறிவிப்பு.
- இதற்காக தமிழக அரசு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது.
- இதன் மூலம் உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், கணினி வல்லுனர்கள் பலரும் பெரும் முயற்சிகளை செய்து வருகின்றனர் தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும் படி சிந்துவெளி எழுத்து முறையை தெளிவாக புரிந்து கொள்ள உதவும் வழி வகையை வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்புகளுக்கு 10 லட்சம் அமெரிக்க டாலர் வழங்கப்படும்.

**சிந்துவெளி நாகரிகமும் தமிழ்நாட்டின் இரும்புக் காலமும் சமகாலத்தவை**

- சிந்துவெளி நாகரிகமும் தமிழ்நாட்டின் இரும்புக்காலமும் சமகால தேவையாக இருப்பதாக தொல்லியல் அகழாய்வுகள் அறிவியல் கணக்கீடுகள் உறுதி செய்ததாக தமிழக முதல்வர் அறிவிப்பு
- சர் ஜான் மார்ஷல்

1. 20.09.1924 இல் சிந்துவெளி நாகரிகம் முதன்முதலில் உலகிற்கு அறிவிக்கப்பட்டது
2. இந்திய தொல்லியல் துறை இயக்குனர் ஜெனரலாக இருந்தவர் சர்ஜான் மார்ஷல் இதை அறிவித்தார்
3. ஆரியமும் சமஸ்கிருதமும்தான் இந்தியாவின் மூலம் என்ற கற்பனையை வரலாறாக சொல்லி வந்தனர்.
4. இதை மாற்றியது ஜான் மார்ஷலின் ஆய்வுகள். அங்கு பேசப்பட்டது திராவிட மொழியாக இருக்கலாம் என நூற்றாண்டுக்கு முன்பே மார்ஷல் சொன்னது இப்போது வலுப்பெற்றுள்ளது.

5. நன்கு கட்டமைக்கப்பட்ட வளர்ச்சி பெற்ற நாகரீகம் சிந்துவெளியில் இருந்ததை அங்கு கண்டெடுக்கப்பட்ட அடையாளங்கள் காட்டுகின்றன.

- **சிந்துவெளியில் திராவிட சின்னம்**

- சிந்துவெளியில் காளைகள் இருந்தன இது திராவிட சின்னம்
- பழந்தமிழ் இலக்கியத்தில் ஏறு தழுவுதல் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன இதுபோன்ற சான்றுகளை வைத்து சங்க கால மூதாதையர்கள் இருந்த இடம் சிந்துவெளி என நிரூபிக்கப்பட்டுள்ளது
- சிந்துவெளி நாகரிகம் பற்றி ஜான் மார்ஷல் தனது கண்டுபிடிப்பை எழுதியதும் பெரியார் ஈ.வெ.ரா, 'விடுதலை' நாளிதழில் அதைப்பற்றி கட்டுரைகளை வெளியிட்டும் பேசியும் உள்ளார்.
- 1948 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் அண்ணாதுரை அவர்கள் சிந்துவெளி நாகரிகத்தை வெளிக்கொண்டு வந்த ஜான் மார்ஷனை பாராட்டி இருக்கிறார்.
- முன்னாள் முதல்வர் கருணாநிதி செம்மொழி மாநாட்டின் இலச்சினையில் சிந்துவெளி முத்திரையை வெளியிட்டார்.
- 2024 ஆம் ஆண்டு சிந்துவெளி கண்டுபிடிக்கப்பட்டு நூற்றாண்டு கருத்துகளை நடைபெற்றது.

### எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி

- சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடத்தப்படும் அகழ்வாராய்ச்சி உலகெங்கும் கவனத்தை ஈர்த்துள்ளது.
- இப்போது எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சியில் நடைபெற்று வருகிறது.
- சிந்துவெளி நாகரிகத்தில் வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட முத்திரைகளில் இடம்பெற்ற குறியீடுகள் தமிழ்நாட்டு அகழாய்வுகளில் கிடைக்கக் கூடிய குறியீடுகளும் ஒப்பிட்டு பார்க்கப்பட்டன.
- தமிழ்நாட்டில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட குறியீடுகளும் அதிகபட்சமாக 90 சதவீதம் ஒன்று போல் உள்ளன.

### 2024 ஆம் ஆண்டு உடல் உறுப்பு தானம்

- இந்திய அளவில் தமிழகம் தொடர்ந்து உடல் உறுப்பு தானத்தில் முதலிடத்தில் உள்ளது
- தமிழகத்தில் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதி சடங்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று 2023 செப்டம்பர் 23ஆம் தேதி முதல்வர் அறி வித்தார்.

### தமிழகத்தில் பள்ளிப்படிப்பில் இடைநிற்றல் இல்லை

- தமிழகத்தில் நடுநிலைப்பள்ளி படிப்பு வரையில் மாணவர்கள் இடைநீற்றலே இல்லாமல் தொடர்ந்து படிப்பதாக மத்திய அரசின் ஆய்வறிக்கையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் பள்ளிப்படிப்பை தொடங்கிய 100 சிறுவர்களில் நடுநிலைப்பள்ளி படிப்பை முடித்தவர்கள் 2019ல் 99 பேர்களாக இருந்தனர்.
- தமிழகத்தில் காலை உணவுத் திட்டம், திறன்மிகு வகுப்பறைகள் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், வாசிப்பு பழக்கத்தை வளர்க்கும் திட்டம் போன்ற திட்டங்களால் தான் குழந்தைகள் பள்ளிக்கல்விகள் இடைநீற்றல் இல்லாமல் தொடர்ந்து ஆர்வத்துடன் படிப்பதில் ஊக்கமும் உற்சாகமும் அடைகின்றார்கள்.

### வறுமையை ஒழிக்க முதல்வரின் தாயுமானவர் திட்டம்

- 2019–21 ஆண்டுக்கான ஐந்தாம் கட்ட தேசிய குடும்ப நல ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் தமிழகத்தில் மக்கள் தொகைபன்முக பொறுமை குறியீடுகளில் கீழ் 2.2% மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது
- இது தேசிய சராசரியான 14.96% விட மிகக் குறைவு.
- மருத்துவம் வீட்டு வசதி மற்றும் கல்வி வாய்ப்புகளை ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம் முதல் கட்டமாக 5 லட்சம் மிகவும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை மேம்படுத்துவதை இந்த திட்டம் இலக்காக கொண்டுள்ளது

### இந்தியாவின் மருத்துவ தலைநகராக தமிழகம் திகழ்கிறது

✓ இந்தியாவின் மருத்துவ தலைநகராக தமிழகம் திகழ்ந்து வருவதாக பேரவையில் ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டது.

✓ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் தமிழகம் இந்தியாவின் முன்னணி மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

✓ உலகெங்கிலும் இருந்து ஆண்டுதோறும் சுமார் 15 லட்சம் பேர் உயர்தர சிகிச்சை பெற தமிழகத்திற்கு வருகை புரிவதற்கும் இவை வழி வகுத்துள்ளன.

✓ இதனால் உயர்தர மருத்துவ சிகிச்சைகளை சிறப்பாக

வழங்கி இந்தியாவின் மருத்துவ தலைநகராக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

✓ மக்களை தேடி மருத்துவம் என்ற முன்னோடி திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்கான ஐநா நாடுகளின் முகமைகளுக்கு இடையிலான விருது என்ற மிகப்பெரிய அங்கீகாரத்தை ஐநா சபை தமிழகத்திற்கு வழங்கி சிறப்பித்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

**பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை – தமிழக சட்டமன்றம்**

- 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கும் குற்றவாளிகளுக்கும் மரண தண்டனையும் தவறான நோக்கத்துடன் பெண்களை பின்தொடர்ந்து சென்றால் ஐந்து ஆண்டு சிறை தண்டனையும் விதிக்க வகை செய்யும் சட்ட திருத்த மசோதாக்கள் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டன.
- பெண்களை வன்புணர்வு செய்தல், கூட்டு வன்புணர்வு, மீண்டும் மீண்டும் குற்றம் அழைக்கும் குற்றவாளிகள், பெண்களைப் பின்தொடர்தல் உட்பட பெண்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பாரதிய நியாய சம்ஹிதா (BNS) பாரதிய நகரிக் சுரக்ஷா சம்ஹிதா (BNSS) ஆகிய சட்டத்தின் கீழ் தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

**கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம் திறப்பு**

- சேலம் மாவட்டம் தலைவாசலில் திறக்கப்பட்டது
- திறந்து வைத்தவர் – தமிழக முதல்வர்
- 1102.03 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆராய்ச்சி நிலையத்தில் நிர்வாக அலுவலகம், விருந்தினர் மாளிகை மற்றும் நுழைவாயில், கால்நடை பண்ணை வளாகத்தில் நாட்டின மாடுகள் பிரிவு, வெள்ளாடுகள் பிரிவு, செம்மறி ஆடுகள் பிரிவு, நாட்டு கோழின பிரிவுகள், நவீனக் குஞ்சு பொறிப்பகம், கோழி தீவன உற்பத்தியாளை ஆகியவை உள்ளன.

சாகித்ய அகாடமி விருது பெற்ற 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு வீடு வழங்கினார் முதல்வர்

- முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 97வது பிறந்த நாளையொட்டி 3.6.2021 –இல் தமிழக அரசால் வெளி யிடப்பட்ட கனவு இல்லம் திட்டத்தின் தொடர்ச்சியாக தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்ய அகாடமிமொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற தமிழகத்தை சேர்ந்த விருந்தாளர்களுக்கு அரசு மூலம் 40 லட்சத்தில் கனவு இல்லம் வழங்கப்படும் என ஆணையிடப்பட்டது.

**நம்ம பள்ளி நம்ம ஊரு திட்டம்**

- தொடக்கம் – 19 டிசம்பர் 2022
- தமிழ்நாட்டில் உள்ள பள்ளியின் தரம் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

**1930**

- இணையவழி மோசடிக்கு 24 மணி நேரமும் கட்டணமில்லா தொலைபேசி எண்.

# 2. தமிழக அகழாய்வு

### 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இரண்டு சிற்பங்களுடன் கூடிய போர் விரர்களின் நடுகல்

- திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே உள்ள பொம்பனப்பட்டியில் கிடைத்துள்ளது
- போரில் வீர மரணம் அடைந்தவர்களின் நினைவாக நடப்படும் கற்களே நடுகல் ஆகும்
- நடுக்கல் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுகிறது

### வெம்பங்கோட்டை அகழாய்வு

- வெம்பங்கோட்டை – விருதுநகர் மாவட்டம்
- சுடுமண் முத்திரை விளக்கு கல்பந்து கல்லாலான சில்வட்டு ஆகியவை கண்டறியப்பட்டன
- இங்கு கண்ணாடி மணிகள் கல்மணிகள் சிகை அலங்காரத்துடன் பெண்ணின் தலைப்பகுதி நாயக்கர் கால செம்பு காசு அணிகலன்கள் சங்கு வளையல்கள் உள்ளிட்ட 450 க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டறியப்பட்டன
- முன்னோர்கள் விலங்குகளை விரட்டுவதற்காக கல்பந்தை பயன்படுத்தியதும் முத்திரை மூலம் வணிகம் செய்து வந்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளது

### 13ம் நூற்றாண்டை சேர்ந்த மாணவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகள் கண்டெடுக்கப் பட்டன

- ராமநாதபுரம் மாவட்டத்தில் கண்டறியப்பட்டது
- இந்த கல்வெட்டில் உள்ள இரண்டு வரிகள் ஒரு கல்வெட்டில் ஸ்ரீ கோமாறபன் மறான திரிபுவன சக்கரவர்த்தி என முதலாம் மாணவர்மன் சுந்தர பாண்டியனை குறிப்பிட்டுள்ளது
- மற்றொரு நான்கு வரிகள் கொண்ட கல்வெட்டில் இக்கோவிலுக்கு தேவதானமாக வழங்கப்பட்ட நிலத்தில் ஐப்பசி குருவை விளையும் களத்துக்கு ஒன்று பாதியும், (சந்தி) விக்கிரகப்பேறு ஆகிய வரிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. திருப்பத்தூர் அருகே 196 ஆண்டுகளுக்கு முந்தைய செக்கு கல்வெட்டு கண்டெடுப்பு.

### வாழப்பட்டு தென்பெண்ணை ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

- இங்கு வட்ட செல்லுதல் சுடுமண் பொம்மை செப்பு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இது கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

### அறச்செயலை எடுத்துரைக்கும் மூன்று கல்வெட்டுகள் கண்டெடுப்பு

- திருவண்ணாமலையை அடுத்த தச்சம்பட்டில் மூன்று கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கிபி 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் முத்திரைத்தாள் ஆவணம் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது

### கோவை அருகே புதிய கற்கால சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

- கோவை அருகே மோளப்பாளையத்தில் உள்ள அகழாய்வுத் தளத்தில் கிடைக்கப்பட்ட பொருட்கள்

1. கற்கோடாரிகள்
2. ஒரு மனித ஈம சின்னம் பானையோடுகள் வளர்ப்பு காட்டு விலங்குகளின் எலும்புகள் மான் கொம்புகள் கல் உருண்டைகள் அறவை கற்கள் கடற் கிளிஞ் சல்கலால் செய்யப்பட்ட மணிகள்
3. பதக்கங்கள் சுடுமண் பொருட்கள் மெருகேற்ற பட்ட கரும்பு சிவப்பு பானை வகைகள் குவாட்ஸ் கற்களால் செய்யப்பட்ட பிளேடுகள் பிறை சந்திர வடிவம் நுண்கருவிகள் கறிந்த சுடுமண் கட்டிகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன

திண்டுக்கல்லில் நான்காயிரம் ஆண்டுகள் பழமையான பெருங்கற்கால நினைவுச் சின்னமும் கல்லாங்குழிகளும் கண்டறியப்பட்டன

### கற்கருவிகளை தீட்டிய கற்குழிகள் கண்டுபிடிப்பு

- திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே பழங்கால மனிதர்கள் கற்கருவிகளை தீட்டிய பாறை கற்குறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன
- இவை நான்காயிரத்திலிருந்து பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்கள்

தங்களின் கருவிகளை தேய்த்து கையடக்கமாகவும், கூர்மையாகவும், முனையுடனும் இருக்கும் வகையில் மாற்றப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### வெம்பக்கோட்டை அகழாய்வில் 6,000 ஆண்டுகள் பழைமையான கற்கள் கண்டுபிடிக்கப் பட்டன

- இடம்: சாத்தூர் வெம்பக்கோட்டை அருகே நடைபெற்றுவரும் 3 –ஆம் கட்ட அகழாய்வில் 6,000 ஆண்டுகளுக்கு முந்தைய அணிகலன்கள் தயாரிக்கப் பயன்படும் ஜாஸ்பர்நுசார்ட் எனப்படும் கற்கள் கண்டறியப்பட்டன.
- 3–ஆம் கட்ட அகழாய்வுப் பணி கடந்த ஜூன் 18–ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது.
- இந்த 3–ஆம் கட்ட அகழாய்வில் இதுவரை தங்க நாணயம், செப்பு காசுகள், உடைந்த நிலையிலுள்ள கடுமண் உருவப் பொம்மை, சதுரங்க ஆட்ட காய்கள், கண்ணாடி மணிகள், வட்ட சில்லு உள்ளிட்ட 2,800–க்கும் மேற்பட்டதொல் பொருள்கள் கண்டறியப்பட்டன.

### 12 ஆம் நூற்றாண்டை சேர்ந்த சோழர் காலத்தூண்

- கடலூரில் உள்ள பழூரில் கண்டுபிடிக்கப்பட்டது
- கி.பி. 1125 ஆம் ஆண்டு செதுக்கப்பட்ட இந்த தூண் கிராம மக்கள் அங்குள்ள சிவன் கோவிலுக்கு நிலங்களை வழங்கியதை குறிக்கிறது
- இது விக்கிரம சோழனின் ஆட்சியின் ஐந்தாவது ஆண்டுடன் தொடர்புடையது

### தமிழக அகழாய்வுகள்

வெம்பங்கோட்டை அகழாய்வில் ஆட்டகாய்கள், சுடுமண் பொம்மைகள் ஆகியவை அதிக அளவில் கிடைத்துள்ளன.

- வெம்பங்கோட்டை விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இங்கு தங்க நாணயம், செப்பு காசுகள், சுடுமண் உருவ பொம்மை, அரிய வகை செவ்வந்திக்கல், மணி சதுரங்க ஆட்டகாய்கள், கண்ணாடி மணிகள் உள்ளிட்ட 2850 க்கும் மேற்பட்ட பழங்கால தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளியில் 600 ஆண்டுகள் பழமையான போர்வீரர்கள் நடுக்கல் கண்டெடுப்பு.

- நடுக்கல் நடுவது பற்றியும் நடுக்கள் பற்றியும் தொல்காப்பியம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நடுக்கலில் வலது புறம் வீரனை இடது புறம் உள்ள வீரன் தன் வலது கையில் கட்டாரி என்ற ஆயுதத்தால் வயிற்றில் குத்தி தாக்குகிறார்.

# 3. தமிழ்நாடு குழுக்கள்

**1. நீதிபதி சந்துரு குழு**

- ஆன்லைன் ரம்மி தடை சட்டம்.
- கல்வி நிறுவனங்களில்நிலவும் சாதி இன வேறுபாடுகளை களைவதற்காக.
- அரசு கூர்நோக்கு இல்லங்களை திறம்பட நிர்வகித்தல்.

**2. அரவிந்த் சாய் ரமணிய குழு**

- மாநிலங்களுக்கு உடனானஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. (IGST) தீர்வு முறையை ஆய்வு செய்வது.

**3. ஜெயரஞ்சன் குழு**

- மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை ஆய்வு செய்யும் குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது.

**4. V. திருப்புகழ் குழு**

- சென்னையில் வெள்ள அபாயத்தை குறைத்தல் மற்றும் தடுத்தல் செய்தல் தொடர்பான ஆலோசனை குழுவை தமிழக அரசு அமைத்திருந்தது.
- 22 அக்டோபர் 2021 இல் தமிழக அரசால் அமைக்கப்பட்டது.

**5. A.K. ராஜன் குழு**

- NEET தேர்வின் தாக்கம் குறித்து ஆராய அமைத்தது.

**6. நீதிபதி முருகேசன் குழு**

- தமிழ்நாடு மாநில கல்விக்கொள்கை உருவாக்குதல்.
- தேசிய கல்விக் கொள்கை தலைவர்: கஸ்தூரி ரங்கன்.

**7. C.P.செல்வம் குழு**

- காவல்துறை – மக்களிடையே உறவுகளை மேம்படுத்துவது.

**8. சுல்தான் அகமது இஸ்மாயில் குழு**

- காவிரி டெல்டாவில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதினால் ஏற்படும் விளைவுகளை ஆராய அமைக்கப்பட்டது.

**9. டேவிதார் குழு**

- தமிழ்நாடு ஸ்மார்ட் சிட்டி (smart city) திட்டம் பற்றி ஆராய.

**10. கலையரசன் குழு**

- அரசு பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ படிப்பில் 7.5% இட ஒதுக்கீடு.

**11. டி.சுந்தர்ராமன் குழு**

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை நெறிமுறைப்படுத்த தமிழக அரசு அமைத்துள்ளது.

**12. சத்திய நாராயணன் குழு**

- மத்திய அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களில் மாநில அளவில் திருத்தங்களை மேற்கொள்ள ஓய்வு பெற்ற நீதிபதி சத்யநாராயணன் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**13. நீதிபதி பி கோகுல்தாஸ் ஆணையம்**

- கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக விசாரிக்க ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதி தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டது

# இந்தியா- குழுக்கள்

**1. T.V. சோம்நாத் குழு.**

- அரசு ஊழியர்களுக்கான தேசிய ஓய்வூதிய முறையை மறு ஆய்வு செய்வது.

**2. ராம்நாத் கோவிந்த் குழு.**

- ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறையை அமலாக்கு வதற்காக சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்டது.
- இந்தக்குழு 2 அக்டோபர் 2023இல் அமைக்கப்பட்டது.

**3. K. விஜயராகவன் குழு**

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) செயல்பாடுகளை மறுஆய்வு செய்தல்.

**4. அமிதாப்காந்த்**

- ரியல் எஸ்டேட் சட்டம் குறித்து ஆராய அமைக்கப்பட்டது.

**5. ரோகிணி ஆணையம்.**

- OBC பல்வேறு சமூகங்களை வகைப்படுத்துவது.

**6. கீதா மிட்டல்.**

- மணிப்பூர் கலவரம் குறித்து ஆராய உச்ச நீதிமன்றம் அமைத்தது.

**7. அஜய் லம்பா குழு.**

- மணிப்பூர் கலவரம் குறித்து ஆராய மத்திய அரசு அமைத்தது.

**8. நீதிபதி ரஞ்சனா தேசாய் குழு**

- உத்தரகாண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்ட மசோதா வரைவை உருவாக்க யாருடைய தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

**9. நீதிபதி ரோகினி ஆணையம்**

- இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் குறித்து ஆராய மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழு.

**K. ராதா கிருஷ்ணன் குழு**

- போட்டித் தேர்வுகளை சீரமைக்கும் நோக்கில் இஸ்ரோ முன்னாள் தலைவர் கே ராதாகிருஷ்ணன் தலைமையில் ஏழு பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது
- ஒரு தலைவர் (1+6)
- 6 உறுப்பினர்கள்

✓ B. J. ராவ்

✓ ரன்தீப் குலேரியா

✓ கே. ராமமூர்த்தி

✓ பங்கஜ் பன்சல்

✓ ஆதித்யா மிட்டல்

✓ கோவிந்த் ஜேய்ஸ்வால்

**மீட்பு இயக்கங்கள் (Operation)**

| மீட்பு இயக்கம் | நோக்கம் |
|---|---|
| ஆப்ரேஷன் அஜய் | இஸ்ரேலில் இருந்து இந்தியர்களை மீட்கும் திட்டம் |
| ஆப்ரேஷன் தோஸ்த் | துருக்கியல் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இந்தியர் களை மீட்கும் திட்டம் |
| ஆப்ரேஷன் காவேரி | சூடானிலிருந்து இந்தியர்களை மீட்கும் திட்டம் |
| ஆப்ரேஷன் கங்கா | உக்ரைனிலிருந்து இந்தியர் களை மீட்கும் திட்டம் |
| ஆப்ரேஷன் தேவி சக்தி | ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியர்களை மீட்கும் திட்டம் |
| ஆப்ரேஷன் சுக்கூன் | இஸ்ரேல் லெபனான் நாட்டிலிருந்து இந்தியர்களை மீட்டு வரும் திட்டம் |
| Operation State home coming | லிபியா நாட்டிலிருந்து இந்தியர்களைமீட்டு வரும் திட்டம் |
| Operation Maitri | நேபாளத்திலிருந்து இந்தியர்களை மீட்டு வரும் திட்டம் |
| Operation Raahat | ஏமன் நாட்டிலிருந்து இந்தியர்களை மீட்டு வரும் திட்டம் |
| Operation Samudra sethu | கரோனா காலத்தில் அயல் நாடுகளில் இருந்த இந்தியர்களை கப்பல் மூலம் இந்தியா அழைத்து வரும் திட்டம் |
| Operation Vande Bharath | கரோனா காலத்தில் அயல் நாடுகளில் இருந்த இந்தியர்களை விமாணம் மூலம் இந்தியா அழைத்து வரும் திட்டம் |
| ஆப்ரேஷன் கருணா | மியாண்மரிலிருந்து இந்தியர்களை மீட்டு வரும் திட்டம் |
| ஆப்ரேஷன் சிந்தூர் | இந்தியா பாக்கிஸ்தான் போர் நடவடிக்கை |

# 4. தமிழக அரசின் திட்டங்கள்

**1.கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்.**

- தொடக்கம் 15 செப்டம்பர் 2023 (காஞ்சிபுரம்)
- கலைஞர் மகளிர் உரிமைத்தொகை (Kalaingar Magalir Urimai Thogai) என்பது தமிழ்நாட்டின் குடும்பத்தலைவிகளுக்கு மாதம் தோறும் உரிமைத் தொகையாக 1000 ரூபாயை அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தும் திட்டமாகும்.

**பிற மாநிலங்கள்**

- 1st – லஷ்மிர் பந்தர் – WEST BENGAL
- 2nd – லட்லி பஹ்னா – MATHYA PRADESH
- 3rd – கலைஞர் மகளிர் உரிமைத்தொகை – TAMIL NADU
- 4th – கருஹ லட்சுமி – கர்நாடகா

**2. பசுமைத் தமிழகம் திட்டம்**

- தொடக்கம் – 24 செப்டம்பர் 2022
- அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தமிழகத்தின் வனப்பரப்பை 33% உயர்த்துவது தொடர்பாக

**3. புன்னகை திட்டம்**

- தொடக்கம் – 9 மார்ச் 2023
- சென்னையில் சுகாதார அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- நோக்கம் – பள்ளி மாணவிகளுக்கு பல் பாதுகாப்புக்கான திட்டம்.

**4. மக்களுடன் முதல்வர் திட்டம்**

- தொடக்கம் – 18 – டிசம்பர், 2023 ( கோவை)
- நோக்கம் : அரசின் சேவைகள் விரைவாக கிடைக்கவும், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் விரைந்து தீர்வு காணவும் 13 துறைகளை உள்ளடக்கிய அமைப்பாகும்.

**5. தகைசால் பள்ளிகள் திட்டம்.**

- தொடக்கம் : செப்டம்பர்.5. 2022 (சென்னை)
- நோக்கம் அரசு பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துதல்.
- 26 தகைசால் பள்ளிகளும் 15 மாதிரி பள்ளிகளும் தொடங்கப்பட்டன.

**6. முதலமைச்சரின் காலை உணவு திட்டம்.**

- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : செப்டம்பர் 15, 2022 (அறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில்).
- திட்டம் தொடங்கப்பட்ட இடம் : மதுரை நெல்பேட்டை அரசு தொடக்கப்பள்ளி.
- பயனாளிகள் : 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர்.
- 25 ஆகஸ்ட் 2023 திருப்புகழையில் விரிவு படுத்தப்பட்டது.

**பள்ளியில் உணவளிக்கும் திட்டம் :**

- சென்னை மாநகராட்சி சர். பிட்டி தியாகராயர் தலைமையில் 1920–ஆம் ஆண்டு செப்டம்பர் 16 – இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இந்தியாவிலேயே முதல் முறையாக, சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1956 இல் காமராஜர் மாநிலம் முழுக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- 1982 இல் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்ட நிலையில், 1989 இல் சத்துணவில் முட்டை கருணாநிதியால் கொண்டு வரப்பட்டது. அதேபோல முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழம் கொடுக்கப்பட்டது.
- 2013 – கலவை சோறு
- 2022 – காலை உணவு திட்டம்

**7. விடியல் பயணத்திட்டம்.**

- தொடக்கம் : 8 மே 2021
- சாதாரண கட்டண அரசுக்கு சொந்தமான பொதுப் பேருந்துகளில் பெண்கள் பயணம் செய்வதற்கான கட்டணத்தை தள்ளுபடி செய்கிறது.
- சக்தி – கர்நாடகா
- மகாலட்சுமி திட்டம் – தெலுங்கானா)

**8. நீலகிரி வரையாடு திட்டம்**

- தொடக்கம் அக்டோபர் 12 , 2023
- நீலகிரி வரையாடுகளை கணக்கெடுத்து, அவற்றின் எண்ணிக்கையை கண்டறிவது முக்கிய நோக்கமாகும்.

- நீலகிரி வரையாடுகள் திட்ட இயக்குநர் எம்.ஜி.கணேசன்.
- இந்த மலை ஆடுகளை "மவுண்டன் மோனார்க்" என்று அழைக்கிறார்கள்.
- நீலகிரி வரையரடு தினம் –அக்டோபர் 7 (E. R. C. டேவிதாரின் பிறந்த தினம்)

### 9. என்னும் எழுத்தும் திட்டம்.

- திட்டம் தொடங்கப்பட்ட நாள்: ஜூன் 13, 2022.
- தொடங்கப்பட்ட இடம்: திருவள்ளூர் மாவட்டம், புகழ் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் , ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி.
- திட்டத்தின் இலக்கு: இத்திட்டத்தின்படி, 2025ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள 8 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளும் (ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை) எழுத்தறிவும், எண்ணறிவும் பெற வேண்டும் என்பது இலக்காக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

### 10. முதல்வரின் முகவரி

- தொடக்கம் 14 நவம்பர் 2021
- நோக்கம் – பொதுமக்களின் மனுக்களுக்கும் கோரிக்கைகளுக்கும் தீர்வு காண்பது.

### 11. நடப்போம் நலன் பெறுவோம்

- தொடக்கம் 4 நவம்பர் 2023 (சென்னை)
- நோக்கம் – நடை பயிற்சியின் அவசியத்தை உணர்த்துதல்

### 12. ஊட்டச்சத்து உறுதி செய் திட்டம்

- தொடக்கம் – 21 மே 2022 (ஸ்டாலின்)
- இடம் –நீலகிரி
- நோக்கம் – ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு ஊட்டச்சத்து திட்டம்.

### 13. உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம்

- அறிவிப்பு – 23 நவம்பர் 2023
- நடைமுறை –31 ஜனவரி 2024
- நோக்கம் – மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர்கள் அனைத்து துறை அலுவலர் உடன் மாவட்டத்தில் உள்ள வருவாய் வட்டங்களில் தங்கி (மாதத்தின் கடைசி புதன்கிழமை) மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணுதல்.

### 14. சிற்பி திட்டம்

- தொடக்கம் 14 செப்டம்பர் 2022 (சென்னை).
- நோக்கம் சிறார் குற்ற செயலுக்கு தீர்வு காணவும் அவர்களை நல்வழிப்படுத்தவும் தொடங்கப்பட்டது.

### 15. நான் முதல்வன் திட்டம்

- தொடக்கம் – 1 மார்ச் 2022 (சென்னை)
- நோக்கம் : மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் திறன் பயிற்சிகள் வழங்குதல்.
- ஆண்டுக்கு 10 லட்சம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்றால், 2026 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தில் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாட்டு வளர்க்க வேண்டும்.
- இத்திட்டத்திற்காக HCL நிறுவனத்திற்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

### 16. நாளைய திறன் திட்டம் :

- நான் முதல்வன் முன் முயற்சியின் கீழ், தமிழ்நாடு அரசு – ஒரு அனுபவம் அடிப்படையிலான கற்றல் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : ஜூன் 7, 2022
- திட்டத்துடன் தொடர்பான துறை : தகவல் தொழில் நுட்பவியல் துறை
- திட்டம் தொடங்க காரணம் : கோவிட் பெருந்தொற்று பரவலால் உலகம் முழுவதும் 2 கோடி பேர் வேலை இழந்தனர். கொரோனாவுக்கு பின் வேலைகிடைப்பதில் சிக்கலாக உள்ளது. திறன் மேம்படுத்துதல், திறன் வளர்த்தல் ஆகியவை வாயிலாக வேலைவாய்ப்புகளை அதிகம் உருவாக்கப்பட வேண்டி உள்ளது.
- திட்டத்தின் கூட்டாளர்கள் : அண்ணா பல்கலைக்கழகம் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் கூட்டாளராகவும், ஐபிஎம் (IBM) தொழில்நுட்பக்கூட்டாளராகவும், ஐசிடி (ICT) அகதமி துணைப்பங்காளராகவும், நாஸ்கம் (NASSCOM) திறன் சான்றிதழ் கூட்டாளராகவும் உள்ளனர்.

### 17. களஆய்வில் முதல்வர்

- தொடக்கம் – 1 பிப்ரவரி 2023 (ஸ்டாலின்)
- இடம் – வேலூர்
- நோக்கம் – துறை சாா்ந்த திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அவற்றின் பயன்கள் பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடைவது.

### 18. நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன் திட்டம்

- தொடக்கம் 19 டிசம்பர் 2022 (சென்னை)
- நோக்கம் : பொதுமக்கள், முன்னால் மாணவர்கள், தொழிலாளர்கள், தன்னார்வ அமைப்புகளிடம் நிதி உதவி பெற்று அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் திட்டம்.
- நல்லெண்ணத்தூதர் – விஸ்வநாதன் ஆனந்த்
- தலைவர் – வேணு சீனிவாசன்

### 19. வானவில் மன்றம்

- தொடக்கம் 28 நவம்பர் 2022 (திருச்சி)
- நோக்கம் – 6 முதல் 8 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் அறிவியல் சிந்தனையை மேம்படுத்துவது.

### 20. இல்லம் தேடி கல்வி

- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : அக்டோபர் 27, 2021
- தொடங்கப்பட்ட இடம்: விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், முதலியார் குப்பம் கிராமம்.
- திட்டத்துடன் தொடர்பான துறை: பள்ளிக் கல்வித்துறை
- திட்டம் தொடங்க காரணம்: கொரோனா பெருந்தொற்றுப் பொது மடக்கக் காலங்களில், பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளைக் குறைத்தல்.

**கல்லூரி கனவு திட்டம்:**

- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : ஜூன் 25, 2022
- திட்டம் தொடங்கப்பட்ட இடம் : சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கம்
- திட்டத்துடன் தொடர்பான துறை : பள்ளிக் கல்வித்துறை
- இலக்கு:
- நான் முதல்வர் திட்டத்தின் கீழ் 12–ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர் கல்விக்கு வழிகாட்டுவது.

### 21. இன்னுயிர் காப்போம் (நம்மை காக்கும் 48)

- திட்டத்தின் வேறு பெயர் : "நம்மைக் காக்கும் 48"
- திட்டம் தொடங்கப்பட்ட நாள்: டிசம்பர் 18, 2021
- தொடங்கப்பட்ட இடம்: செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் ஆதிபரா சக்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

**திட்டத்தின் அம்சங்கள் :**

- நோக்கம் – சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைத்தல்
- இலக்கு – சாலை விபத்து நாள் ஏற்படும் உயிரிழப்புகளை 2030ம் ஆண்டிற்குள் பாதியாக குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- விபத்தில் சிக்கியவர்களின் உயிரிழப்பை தடுக்க வேண்டும் என்றால், "கோல்டன் ஹவர்" என்று சொல்லப்படும் ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்ட ஒரு கருத்தாகும்.
- இத்திட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட 201 அரசு மருத்துவமனைகள் மற்றும் 408 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 609 மருத்துவமனைகள் உரிய தகுதியின் அடிப்படையில் இணைக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சைகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் முக்கிய அங்கமாக, சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணிநேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சை செலவைத் தமிழக அரசே மேற்கொள்ளும்.

### 22. மக்களைத் தேடி மருத்துவம்.

- தொடங்கப்பட்ட நாள் : ஆகஸ்ட் 5, 2021
- தொடங்கப்பட்ட இடம்: கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாமனப்பள்ளி கிராமம்.

**நோக்கம்:**

- இத்திட்டம் "தொற்றாநோய்" நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்,
- தொற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளுதல்,
- தொற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வியல் முறைகளை மாற்றுதல்,

- வயது முதிர்ந்த நபர்களுக்கு சேவை செய்தல்,
- அவர்களுக்கு இயன்முறை சிகிச்சை மற்றும் பயிற்சி அளித்தல்,
- கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி போடுதல்,
- தாய்மார்களுக்கு பிரசவத்திற்கு பிந்தைய பராமரிப்பு போன்ற பல சேவைகளைக் கொண்டுள்ளது.

## 23. வருமுன் காப்போம்

- திட்டத்தின் வேறுபெயர் : நம்மை பாதுகாத்துக் கொள்.
- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : செப்டம்பர் 29, 2021.
- தொடங்கப்பட்ட இடம் : சேலம் மாவட்டம் வாழப்பாடி
- நோக்கம்: நோய்களில் இருந்து மக்களை காக்க வேண்டும் மற்றும் நோய்கள் மக்களை தாக்காதவாறு தடுக்கவேண்டும் என்ற நோக்கத்தின்படி இந்தத் திட்டம் தமிழகத்தில் மீண்டும் அமலுக்கு வந்துள்ளது.

### திட்டத்தின் அம்சங்கள்:

- இந்த முகாம்களில் 16 சிறப்பு மருத்துவர்களால் மக்களுக்கு மருத்துவப்பரிசோதனை செய்யப்பட்டு, கூடுதல் சிகிச்சைக்காக உயர் மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள்.
- இத்திட்டத்தின் கீழ் தமிழக முழுவதும் ஆண்டுதோறும் 1,240 மாபெரும் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.
- இதற்கு முன் மு. கருணாநிதி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி வருமுன் காப்போம் திட்டத்தை பூந்தமல்லி அண்ணா ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார்.

## 24. புதுமைப்பெண் திட்டம்

- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : செப்டம்பர் 5, 2022
- தொடங்கப்பட்ட இடம் : சென்னை ராயபுரத்தில் உள்ள பாரதி மகளிர் கல்லூரி.
- திட்டத்தின் முதன்மை நோக்கம் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கைக்கான எண்ணிக்கையை அதிகரித்தல்.
- திட்டத்துடன் தொடர்பான துறை : சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை.
- இத்திட்டத்தின் வேறுபெயர் : மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதிதிட்டம்.

### பயனாளிகள்:

- அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று மேற்படிப்பில் சேரும் (படிப்பு /பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு ) தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரைக்கும்) அனைத்து மாணவிகளுக்கும், மாதம் ரூ.1000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும்.
- இந்த மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும், இந்தத் திட்டத்தில் கூடுதலாகப் பெறலாம்.

### புதுமைப்பெண் திட்டத்தின் நோக்கம் :

- பெண்களுக்கு உயர்கல்வி அளிப்பதன் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்துதல்.
- குழந்தைத் திருமணத்தை தடுத்தல்
- குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல்.
- பெண் குழந்தைகளின் விருப்ப தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பைத் தொடர ஊக்குவித்தல்.
- உயர் கல்வினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்து துறைகளிலும் பங்கேற்கச் செய்தல்.
- உயர்கல்வி உறுதித் திட்டத்தின்மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல்.
- பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பை உறுதிசெய்தல்.
- இத்திட்டத்தின் மூலம் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்தல்.

### புதுமைப் பெண் திட்டத்தின் தகுதிகள்:

- மாணவிகள் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளில் படித்து தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்வராக இருக்க வேண்டும்.
- தனியார் பள்ளிகளில் கட்டாய கல்வி உரிமைத் திட்டத்தின் கீழ் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயின்ற பின் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்த மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.
- மாணவிகள் 8 (அ) 10 (அ) 12 ஆம் வகுப்புகளில் படித்து பின்னர் முதன் முறையாக உயர்கல்வி

நிறுவனங்களில் சேரும் படிப்புக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

- தொலைத்தூர கல்வி மற்றும் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகளுக்கு இத்திட்டம் பொருந்தாது.

**பெண் கல்வி உதவி எண் :**

- இத்திட்டத்தில் பயன்பெறுவது குறித்த தங்களுக்கு தேவையான தெளிவுரைகள் கூடுதல் விவரங்கள் கட்டணமில்லா தொலைபேசி எண்.14417 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு விவரங்களைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**• தமிழ் புதல்வன் திட்டம்**

- தொடக்கம் 9 ஆகஸ்ட் 2024
- தொடங்கப்பட்ட இடம் கோவை
- நோக்கம் கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் அளிக்கும் தமிழ் புதல்வன் திட்டம்

**• பயனாளிகள்**

1. ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள்.
2. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பத்தாம் வகுப்பு வரை படித்து அதன் பிறகு தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களும் இந்தத் திட்டத்தின் பயன்பெற தகுதி படைத்தவர்கள் ஆவர்.
3. வேறு ஏதேனும் திட்டத்தில் உதவித்தொகை பெற்று வருபவராக இருந்தாலும் தமிழ் புதல்வன் திட்டத்தில் பயன்பெற தகுதி படைத்தவர்கள் ஆவார்.
4. ஒரே குடும்பத்திலிருந்து எத்தனை மாணவர்கள் தகுதி பெற்றிருந்தாலும் அனைவரும் திட்டத்தின் கீழ் பயனடைய விண்ணப்பிக்கலாம்.
5. தொலைநிலை அஞ்சல் வழியிலும் அங்கீகரிக்கப்படாத கல்வி நிறுவனங்களிலும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் ஊக்கத்தொகை பெற இயலாது.

- ஒருங்கிணைக்கப்பட்ட பாடப்பிரிவில் பயிலும் மாணவர்கள் முதல் மூன்று ஆண்டுகள் மட்டுமே திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை பெற இயலும்.

**• விடியல் திட்டம்**

- தமிழ்நாட்டில் அரசு மாநகர பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் திட்டத்தின் பெயர் விடியல் திட்டம்.
- முதலமைச்சரின் காலை உணவு திட்டம்
- தொடக்கம் 15 செப்டம்பர் 2022
- தொடங்கப்பட்ட இடம் மதுரை
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் முதல் முறை விரிவாக்கம் – 28 ஆகஸ்ட் 2023 திருக்குவளை நாகப்பட்டினம் மாவட்டம் (முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த ஊர்).
- இரண்டாம் கட்ட விரிவாக்கம் ஜூலை 15 2024 காமராஜர் பிறந்த நாளான இந்த நாளில் திருவள்ளூர் மாவட்டம் கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குதல்.

### 25. தொழிலணங்கு:

- தொடங்கப்பட்ட நாள் : ஜூன் 18 2022
- தொடங்கப்பட்ட இடம் : மதுரை எல்லீஸ் நகர்
- இதனுடன் தொடர்புடையது: தமிழ்நாடு தொடக்கம் மற்றும் புத்தாக்க இயக்கம்.
- தமிழ்நாடு அரசின் புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மூலம் பெண்கள் தொழில் முனைவுக்கான தொடர் செயல் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பெண்கள் தொழில் முனைவுக்கான திட்டங்கள் தொழிலணங்கு என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 26. மீண்டும் மஞ்சப்பை திட்டம்

- திட்டம் தொடங்கப்பட்ட நாள் : டிசம்பர் 23, 2021
- திட்டம் தொடங்கப்பட்ட இடம் : சென்னை, கலைவாணர்அரங்கம்
- திட்டத்துடன் தொடர்பான துறை சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை
- திட்டத்தின் நோக்கம்: பிளாஸ்டிக் (நெகிழிப்பைகள்) கவர்களை முழுமையாக ஒழித்து துணிப்பைகள் பயன்படுத்துவதை அதிகரிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

**27. மக்கள் ஐடி(ID).**

- தொடக்கம் – 28 டிசம்பர் 2022
- நோக்கம் – தமிழக அரசின் சேவைகளை பயனாளிகளுக்கு விரைவாக எளிதாக வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டது.
- ஆதார் போலவே தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**28. வாழ்ந்து காட்டுவோம் திட்டம்.**

- தொடக்கம் – 7 பிப்ரவரி 2022
- தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. 7 பிப்ரவரி 2022–ல் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- நோக்கம் – ஊரக பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிலையான வருமானத்தைப் பெற செய்தல்.
- நிதி அளவு – உலக வங்கி (70:30)

**29. நடப்போம் நலம் பெறுவோம் திட்டம்.**

- தொடக்கம் – 4 நவம்பர் 2023
- இடம் – சென்னை அடையாறு முத்துலட்சுமி ரெட்டி மருத்துவமனை.
- நோக்கம் நடை பயிற்சியின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவது.

**30. தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்**

- நோக்கம் கடல் அரிப்பை தடுக்கவும் கடல் மாசுபாட்டை குறைக்கவும் கடல் சார் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாப்பது.
- நிதி உதவி – உலக வங்கி

**31. மக்களைதேடி ஆய்வகச் சேவை திட்டம்**

- தொடக்கம் – 5 பிப்ரவரி 2024
- இடம் – கன்னியாகுமரி.

**32. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்**

- நோக்கம் – தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 5 லட்சம் ஏழை குடும்பங்களை மீட்டெடுப்பது.

**33. பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டம்**

- தொடக்கம் – 18 மார்ச் 2022 (வேலூர்)
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரசு தொடக்கப் பள்ளிகள் உட்பட அனைத்து அரசு பள்ளிகளிலும் நவீனமயமாக்கப்பட்ட வகுப்புகள் (Smart Classroom) கூடிய வளர்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

**34. அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம்.**

- நகர்புற (ம)ஊரக பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து, முழுமையான சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது.

**35. அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்.**

- பட்டியல் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த படிக்காத இளைஞர்களை தொழில் முனைவோராக மாற்றுவது.

**36. சமாதான திட்டம்.**

- தொடக்கம் – 16 அக்டோபர் 2023
- சமாதானத் திட்டம் முதலில் தொடங்கப்பட்ட ஆண்டு – 2006
- நோக்கம் – தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள வரிகளை, வணிகர்களை இத்திட்டத்தின் மூலமாக செலுத்த செய்தல்.

**37. விழுதுகள் திட்டம்.**

- தொடக்கம் 9 ஜனவரி 2024
- நோக்கம் – தமிழக அரசு பள்ளிகளை சேர்ந்த முன்னாள் மாணவர்கள் ஓரணியில் திரண்டு அரசு பள்ளிகளை வலுப்படுத்தும் திட்டம்

**• மக்களுடன் முதல்வர் திட்டம்**

- தொடக்கம் – 18 December 2023
- தொடங்கப்பட்ட இடம் கோவை
- பொதுமக்கள் அதிகமாக அணுகும் அரசு துறைகள் மக்களுக்கு சேவை புரிவதற்காக தொடங்கப்பட்டது.
- தமிழக அரசின் மக்கள் உடன் முதல்வர் என்ற திட்டம் நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்பட்டது இன் திட்டம் தற்போது ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்காக பிரிவு படுத்தப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.
- மக்களுடன் முதல்வர் திட்டம் ஊரகப்பகுதிகளில் தொடங்கப்பட்ட நாள் 11 ஜூலை 2024.
- இடம் தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அருகே உள்ள பாளையம் புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி.
- 15 அரசுத்துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு 44 அரசுக்கு திட்டங்களின் சேவைகளுக்கான

விண்ணப்பங்களை முகாம்களின் பொதுமக்கள் அளிக்கலாம்.

**மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்**

- தொடக்கம் – 12. ஜுன் 2024
- இடம் – சென்னை
- தொடங்கி வைத்தவர் தமிழக முதல்வர்
- நோக்கம் – மண்வளத்தை பேணி காக்கவும், மக்கள் நலன் காக்கும் விதமான வேளாண்மையை ஊக்கப்படுத்தவும்.

**திட்டத்தின் பயன்கள்**

- பசுந்தாள் உரவிதை விநியோகம் செய்யப்பட உள்ளது.
- பசுந்தாள் உரப் பயிர்கள் மூலம் மண்வளம் பேணிக் காக்கப்பட்டு, மண்ணில் வாழும் உயிரினங்கள் காக்கப்படும்.
- இதனால் மண்ணின் சத்துக்கள் அதிகரிக்கும்.
- குறைந்த விலையில் விவசாயிகளுக்கு இயந்திரங்கள் வழங்கப்படும் என தமிழக வேளாண் நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம்.
- கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில், முக்கிய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வலுப்படுத்தவும், தரம் உயர்த்தவும் `முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும்.
- Based on the Village Roads Development Plan, the government will implement a new scheme called ``Muthalvar's Village Roads Development Plan'' to strengthen and improve the quality of major panchayat union roads.
- முதல்கட்டமாக 2 ஆண்டுகளில் 10,000 கி.மீ. அளவுக்கு ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ரூ.4,000 கோடி மதிப்பில் தரம் உயர்த்தப்படும்.
- 10,000 km in 2 years in the first phase. Panchayat union roads will be upgraded at a cost of Rs.4,000 crore.
- நிதியுதவி – முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி பிரதமரின் கிராம சாலை திட்டம் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் சாலைகள் மேம்பாட்டு திட்டம்.

**கலைஞரின் கனவு இல்லம் திட்டம்**

- வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தருதல்.
- தமிழகத்தின் குடிசை வீடுகளில் குடியிருப்போருக்கு புதிதாக ஆர்சிசி கூரையுடன் கூடிய வீடுகளை கட்டித் தருவதை இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- இந்த திட்டத்தில், 2024–25 ம் நிதியாண்டில் ஒரு வீட்டிற்கு ரூபாய் 3.10 லட்சம் வீதம் ஒரு லட்சம் வீடுகள் கட்ட ரூபாய் 3100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழமையான திட்டங்கள்**

**1. டாக்டர் S. தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்.**

- தொடக்கம் : 1975
- நோக்கம் : விதவை மறுமணத்தை ஊக்குவிக்கவும் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிப்பது.

**2. ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டம்.**

- தொடக்கம் : 1981–82
- நோக்கம் : மகளின் திருமணத்தை நடத்தி வைப்பதில் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் ஏழை விதவை தாய்மார்களுக்கு, அவர்களின் பெண் குழந்தைகளின் திருமணத்திற்கு நிதியுதவி அளித்து உதவுதல்.

**3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித் திட்டம்.**

- தொடக்கம் : 1984 – 1985
- நோக்கம் : ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவி செய்தல்.

**4. சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்.**

- நோக்கம் : ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மாற்றுத் திறனுடைய பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்குதல்.

**5. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவி திட்டம்.**

- தொடக்கம் : 1989
- நோக்கம் : கலப்பு திருமணங்களை ஊக்கப்படுத்தி பிறப்பு அடிப்படையிலான சாதி இன வேறுபாடுகளை அகற்றி தீண்டாமை எனும் கொடுமையை ஒழித்தல்.

**6. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி திட்டம்:**

- ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் 1989 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் கருணாநிதியால் திருமண உதவித் திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், 10 ஆம் வகுப்பு முடித்த சிறுமிகளுக்கு ரூபாய் 25,000 மும் பட்டப்படிப்பு முடித்தோருக்கு ரூபாய் 50,000 மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்பட்டது.
- புதிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம், முந்தைய திருமண உதவித் திட்டத்தின் சீரமைக்கப்பட்ட பதிப்பாகத் தொடங்கப்படுகிறது.

**7. முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்.**

- தொடக்கம் : 1992

**8. தொட்டி குழந்தை திட்டம்.**

- தொடக்கம் : 1992
- இடம் : சேலம்
- இந்த திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது.

**9. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்.**

- தொடக்கம் : 2006
- நோக்கம் : 5 ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது.

**10. புதுவாழ்வு திட்டம்.**

- தொடக்கம் : 2005
- நோக்கம் : தளர்த்தப்பட முடியாத திட்ட கோட்பாடுகளைக் கொண்டு மக்களாலேயே செயல்படுத்தும் முறையின் மூலம் அவர்களின் தேவையை அவர்களே கண்டறிந்து திட்டமிடுதல்.
- நிதி உதவி – உலக வங்கி

**11. தாய் திட்டம்.**

- தொடக்கம் : 2011
- நோக்கம் : சிறு நீர்ப்பாசன தொட்டிகளின் மேம்பாடுகள் மற்றும் நவீனமயமாகுதல்.
- வாழ்விடத்தை ஒரு மையமாகக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு.

**12. தன்னிறைவு திட்டம்.**

- தொடக்கம் : 2011 – 12
- நோக்கம் : பொதுமக்கள் சுயசார்பினை தன்னுடனே ஊக்குவிப்பதற்கும் மேன்மைப்படுத்துவதற்கும்.

**13. தமிழ்நெட் திட்டம்.**

- தொடக்கம் : 14 ஜூலை 2017

**14. தமிழ்நாடு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம்.**

- நோக்கம் : கோவிட் 19 தொற்றால் வேலை இழந்த நகர்ப்புற ஏழைகளுக்கு வேலை வழங்குதல்.
- ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரங்கராஜன் தலைமையிலான குழு தொற்று நோயை தொடர்ந்து நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்க பரிந்துரைத்துள்ளது.

**15. உழவர் சந்தை திட்டம்.**

- தொடக்கம் : 14 நவம்பர் 1999 (மதுரை)
- உழவன் செயலி 2018
- நோக்கம் : விவசாயிகள் இடைத்தரவுகள் இல்லாமல் நேரடியாக

**16. சமத்துவபுரம்**

- தொடக்கம் : 17 ஆகஸ்ட் 1998
- இடம் : மேலக்கோட்டை (மதுரை)

**17. அன்னைத் தமிழில் அர்ச்சனை திட்டம்**

- தமிழ்நாட்டின் முதல் பெண் ஓதுவார் – சுலோச்சனா

**18. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டம்**

- அறிவிப்பு : 1970
- T.மாரிச்சாமி முதல் நபர்

**19. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டம்.**

- தொடக்கம் : 2 மே 1989 (கலைஞர்)
- வழங்கப்படும் தொகை : 18,000 (TN – 15000, PM-MVY – 3000)

**20. Pm மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY)**

- தொடக்கம் 2010
- PMMVY (2.0) –17 மார்ச் 2023

**8. நமக்கு நாமே திட்டம்.**

- தொடக்கம் : 1 ஏப்ரல் 1999
- நோக்கம் : பொதுமக்களின் சுய ஆதரவு நெறி முறையை மேம்படுத்தவும், சமூக உள்கட்டமைப்புகளை உருவாக்கி பராமரிப்பதும், பொதுமக்களின் பங்கேற்பை ஆதரிக்கவும் தொடங்கப்பட்டது.

**தமிழ் புதல்வன் திட்டம்**

- தொடக்கம் – 8 ஆகஸ்ட் 2024
- தொடங்கப்பட்ட இடம் கோவை
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம் தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தில் ஆறு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் கடந்த ஆண்டு 2022 செப்டம்பர் 5ஆம் தேதி சென்னையில் தொடங்கப்பட்டது.
- தமிழ் புதல்வன் திட்டமானது அரசு பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்க தமிழ் புதல்வன் திட்டம் அறிமுகம் செய்யப்படுகிறது.
- இத்திட்டத்திற்காக தமிழக அரசு 360 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**முதல்வர் மருந்தகம்**

- மத்திய அரசின் மக்கள் மருந்தகம் போன்று குறைந்த விலையில் மருந்துகள் வழங்க முதல்வர் மருந்தகம் எனும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு.
- அரசு மருத்துவமனைகளை நாடிவரும் ஏழைகளுக்கு சிறப்பான சிகிச்சைகளும் தரமான மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன இந்த நிலையில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெரும் நடுத்தர குடும்பங்கள் தங்களுக்கு தேவையான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி உள்ளது.
- நீரிழிவு ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டி உள்ளதால் அவர்களுக்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன இதற்கு தீர்வுக்கான பொதுப்பெயர் வகை மருந்துகளையும் பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்க செய்யும் முதல்வர் மருந்தகம் எனும் புதிய திட்டம் அரசு செயல்படுத்தும்.

**முதல்வர் காக்கும் கரங்கள்**

- முன்னாள் ராணுவ வீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முதல்வரின் காக்கும் கரங்கள் எனும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- முன்னாள் படை வீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழி செய்யப்படும்
- இந்தத் திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 சதவீத மூலதன மானியமும் 3% வட்டி மானியமும் அளிக்கப்படும்.

**அத்திக்கடவு அவிநாசி திட்டம்**

- தொடக்கம் 17 ஆகஸ்ட் 2024
- தொடங்கி வைத்தவர் மு.க. ஸ்டாலின்
- திட்டத்தின் சிறப்பம்சம் – பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ் புறத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 1.50 மீனீநீ உபரிநீர் வினாடிக்கு 250 கன அடி வீதம் 70 நாட்களுக்கு ஆறு நீரேற்று நிலையங்கள் வழியாக 165 கிலோமீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு உபரி நீர் வீணாகாமல் தடுக்கப்படுகிறது.
- பயன்பெறும் மாவட்டங்கள் ஈரோடு திருப்பூர் கோயம்புத்தூர்.
- தமிழகத்தில் விவசாயத்திற்கான முதல் நீரேற்று திட்டம் அத்திக்கடவு அவிநாசி திட்டம் ஆகும்.

**அத்திக்கடவு அவிநாசி திட்டத்தின் வரலாறு**

- 1957 காலகட்டத்தில் அத்திக்கடவு அவினாசி கால்வாய் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது.
- 1967இல் அப்போதைய அவினாசி சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த மாரப்ப கவுண்டர் அந்த திட்டத்தை கொண்டு வர அப்போதைய முதல்வர் காமராஜரிடம் வலியுறுத்தினார்.
- 1972ல் இந்த திட்டத்தை செயல்படுத்த கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.
- 1996 இல் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இந்த

திட்டம் தொடர்பான விரிவாக ஆய்வு மேற்கொள்ள அப்போதைய முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டார்.

- காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் மோகன கிருஷ்ணன் ஆய்வறிக்கையை அப்போதிய அரசிடம் சமர்ப்பித்தார்.

- 2014 இல் முதல்வராக இருந்த ஜெயலலிதா மத்திய அரசு நிதி ஒதுக்கினாலும் ஒதுக்காவிட்டாலும் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார்
- 2018 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி இந்த திட்டத்தை செயல்படுத்த 1652 கோடி நிதி ஒதுக்கினார்
- 2019 பிப்ரவரி 28 இல் திருப்பூர் மாவட்டம் அவினாசி புதுப்பாளையத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது

**வேர்களைத் தேடி திட்டம்**

- தொடக்கம் 27 டிசம்பர் 2023
- அமைச்சகம் புலம்பெயர் தமிழர்கள் நலத்துறை
- தொடங்கப்பட்ட இடம் சிங்கப்பூர்
- புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்களை தமிழ்நாட்டின் கலாச்சார வேர்களுடன் மீண்டும் இணைக்கவும் தமிழ்நாட்டிற்கு உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்த அவர்களுக்கும் இடையிலான கலாச்சார உறவுகளையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.
- பயனாளிகள் வெளிநாட்டுகளில் வாழும் 18 முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள்.
- தகுதிகள் – வெளிநாடுகளில் வாழும் தமிழ் வம்சாவழியினர் மற்றும் 18 வயது முதல் 30 வயது வரை உள்ள தமிழர்கள்.

**நான் முதல்வன் – உயர்வுக்கு படி திட்டம்**

- தமிழக மாநில அரசு ஆனது, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் மாநில வாரிய தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வியை தொடர்வதை உறுதி செய்வதற்காக மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்களை நடத்தி வருகிறது.
- நான் முதல்வன் திட்டத்தின் (உயர்வுக்குப் படி) கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் பள்ளி மாநிலத் திட்ட இயக்குனரகத்தால் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.
- மாநிலத்தில் உள்ள பொறியியல் பல தொழில் நுட்பக் கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர்கல்வி பயில பதிவு செய்ய தவறிய மாணவர்களுக்காக இந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

**பரம்பிக்குளம் ஆழியார் திட்ட ஒப்பந்தம்**

- கையெழுத்தான நாள் – 29 மே 1970
- ஒப்பந்தம் கையெழுத்தான இரு மாநிலங்கள் – தமிழ்நாடு மற்றும் கேரளா
- Pact goverms sharing of waters of the bharatha-puzha, Chalakudy, periyar and implementation of project by the two States பாரதப்புழா, சாலக்குடி, பெரியாறு ஆகிய நதிகளின் நீர் பங்கீடு மற்றும் திட்டத்தை இரு மாநில அரசுகள் செயல்படுத்தும் ஒப்பந்தம்
- நோக்கம் – தமிழ்நாட்டின் கோவை திருப்பூர் ஈரோடு மாவட்டங்களிலும் கேரளாவின் பாலக்காடு மாவட்டத்திலும் உள்ள வறட்சியால் பாதிக்கக்கூடிய நிலையில் உள்ள பகுதிகளின் நிலையை மாற்றுவது.
- இந்த திட்டத்தின் மூலம் மேற்கு நோக்கி பாயும் எட்டு ஆறுகள்– ஆனைமலையில் பாயும் நதிகள் (ஆனைமலை ஆறு, சோலையார், தூணக்கடவு, நீரார், பெருவாரி பள்ளம், மற்றும் பரம்பிக்குளம்) மற்றும் சமவெளியில் பாயும் இரண்டு நதிகள் (ஆழியார் மற்றும் பாலாறு) ஆகியவற்றின் நீர் வழித்தடத்தினை மாற்றி ஒருங்கிணைக்கப்படுகிறது.

**முதல் அமைச்சரின் புத்தாய்வு மாணவர் திட்டம்**

- முதல்வரின் புத்தாய்வு மாணவர் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் 50 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்க மாநில அரசு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கி உள்ளது.
- இந்தத் திட்டமானது அவர்களின் பி.எச்.டி. ஆராய்ச்சிக்கு துணை புரியும்.
- முனைவர் பட்டம் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மட்டுமே இந்த பயனை பெற தகுதி உடையவர்கள் ஆவார்.
- வருமான வரம்பு இல்லை.

**அத்திக்கடவு அவிநாசி திட்டம்**

- பயன்பெறும் மாவட்டங்கள் கோவை திருப்பூர் ஈரோடு.
- நீலகிரி மலைப் பகுதியில் தோன்றி கேரளத்திற்குள் பாய்ந்து மீண்டும் தமிழ்நாட்டின் கோவை மாவட்டத்தில் நுழைந்து ஈரோடு மாவட்டத்தில் பாய்ந்து பவானி

ஆற்றில் காவிரியுடன் கலக்கும் பவானி ஆற்றில் தென்மேற்குப் பருவமழை காலங்களில் மிகையான நீர் பெருக்கெடுக்கிறது.

- அப்படி பெருக்கெடுக்கும் பவானி நீரை பில்லூர் அணையில் இருந்து வரட்சியான பகுதிகளின் வழியாக பாயசெய்தால் குடிநீருக்கும் வேளாண்மைக்கும் உதவியாக இருக்கும் என்ற கருத்து ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலேயே ஏற்பட்டது.
- 1834 ஆம் ஆண்டில் பிரிட்டன் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன் ஆல் இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டது.
- 1957–இல் பவானி திட்டம் என்ற பெயரிலும் , 1972ல் அத்திக்கடவு அவினாசி திட்டம் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டது
- அத்திக்கடவு அவிநாசி திட்டத்தில் இடம் பெற்றுள்ள அத்திக்கடவு என்ற ஊர் கோவை மாவட்டத்தில் பில்லூர் அனைத்து மேற்கில் உள்ள மலை கிராமம் ஆகும்.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- இந்திய நீர் பாசன திட்டங்களின் தந்தை என்று அழைக்கப்பட்ட சர் ஆர்தர் காட்டன் 1834 இந்த திட்டம் தொடர்பாக ஆய்வு செய்திருக்கிறார்.
- தமிழகத்தின் ஆறுகள் அனைத்தும் மேற்கு வடக்கு பகுதியில் இருந்து கிழக்கு நோக்கி சென்று கடலில் கலக்கும் நிலையில் இந்தத் திட்டம் கிழக்குப் பகுதியில் இருந்து நீரை எடுத்து மேற்கு பகுதிக்கு கொண்டு செல்வதற்காக அமைந்துள்ளது.
- கோவை திருப்பூர் ஈரோடு மாவட்டங்களில் ஆயிரத்திற்கும் அதிகமான நீர் நிலைகளை நிரப்பும் நீரேற்று திட்டமாக இருக்கும்.

# 5. இந்தியாவின் முதன்மைகள்

**ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை (UPS) இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மகாராஷ்டிரா மாநிலம் ஏற்பதாக அறிவித்துள்ளது**

- கடந்த 2004 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பிறகு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்திற்கு மத்திய அரசு கடந்த 24 ஆகஸ்ட் 2024 ஒப்புதல் அளித்தது
- பண வீக்கத்தை சரி செய்தல் மற்றும் பிற சலுகைகளுடன் கடைசி 12 மாத சராசரி சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது
- 10 ஆண்டுகளுக்கு குறையாமல் மத்திய அரசில் பணிபுரிந்தவருக்கு இத்திட்ட மூலம் குறைந்தபட்சம் 10,000 ஓய்வூதியமாக கிடைக்கும்

**இந்தியாவில் அதிகமாக சுதந்திர தின உரையை ஆற்றிய பிரதமர்கள்**

- ஜவஹர்லால் நேரு 17 முறை
- இந்திரா காந்தி 16 முறை (தொடர்ச்சியாக 11 முறை)
- நரேந்திர மோடி – 10 முறை
- மன்மோகன் சிங் பத்து முறை (தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி கடந்த பத்து ஆண்டுகளாக சுதந்திர தின உரையாற்றி மன்மோகன் சிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார்
- இந்தியாவில் குடியரசு தினத்தன்று குடியரசுத் தலைவர் கோட்டையில் கொடியேற்றுவார் (சுதந்திர தினத்தன்று பிரதமர் கொடியேற்றுவார்)
- இதேபோன்று மாநிலங்களிலும் குடியரசு தினத்தன்று ஆளுநர் கொடியேற்றுவார்
- நாடு 1947–இல் சுதந்திரம் பெற்ற போதிலும் குடியரசு தினம் சுதந்திர தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களை தேசிய கொடியை ஏற்றுவது வழக்கமாக இருந்தது
- 1969 இல் தமிழக முதல்வராக பதவி ஏற்ற மு. கருணாநிதி மாநிலத்தில் சுய ஆட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார் இதன் தொடர்ச்சியாக சுதந்திர தினத்தில் தேசிய கொடியை ஏற்ற வைக்கும் உரிமையை மாநில முதல்வர்களுக்கு வழங்குமாறு பிரதமர் இந்திரா காந்திக்கு கடிதம் எழுதினார் அவரது கோரிக்கையை இந்திரா காந்தி ஏற்றுக் கொண்டார்
- சுதந்திர தினத்தில் மாநில முதல்வர்களும் குடியரசு தினத்தில் ஆளுநர்களும் கொடியேற்றும் சட்டம் கொண்டுவரப்பட்டது
- 1974 சுதந்திர தினத்தில் தமிழக முதல்வராக தேசிய கொடியை ஏற்றினார் கருணாநிதி

**உலகின் மிகப்பெரிய பசுமை ரயில்வே நெட்வொர்காக இந்திய ரயில்வே உருவெடுத்துள்ளது**

- இந்திய ரயில்வே பாதைகள் 95% மின்மயமாக்கப் பட்டுள்ளது.

**பாரத் பயோடெக் இன் காலரா தடுப்பு மருந்து அறிமுகம்**

- காலரா நோயை தடுக்க ''ஹில்கால்'' என்ற வாய்வழி செலுத்தும் தடுப்பு மருந்தை பாரத் பயோடெக் நிறுவனம் அறிமுகப்படுத்தியது
- இந்த நிறுவனம் ஹைதராபாத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது
- கரோனா காலத்தில் கோவாக்சிங் என்ற தடுப்பூசியை உருவாக்கியது பாரத் பயோடெக் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது

**ஜன் தன் திட்டம்**

- தொடக்கம் 28 ஆகஸ்ட் 2014
- பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) வெற்றிகரமாக 10 ஆண்டுகளை நிறைவேற்றியுள்ளது.

இது ஆகஸ்ட் 28, 2014 அன்று தொடங்கப்பட்டது மற்றும் உலகளவில் மிகப்பெரிய நிதி உள்ளடக்கிய முயற்சிகளில் ஒன்றாக உள்ளது , இது பாதிக்கப்படக்கூடிய மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு மலிவு நிதி சேவைகளை வழங்க நிதி அமைச்சகத்தின் தலைமையில் உள்ளது

**விஞ்ஞான தாரா திட்டம்**

- மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் விஞ்ஞான தாரா என்ற ஒருங்கிணைந்த மத்திய துறை திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- கிராமப்புற வளர்ச்சிக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மனிதர்களின் திறன்களை வளர்ப்பது ஆராய்ச்சி மேம்பாடு புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நடைமுறை ஆகியவற்றை ஊக்குவிப்பதை திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயிர் தொழில்நுட்பத் துறையில் பொருளாதாரம் சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்பை ஊக்கு விப்பதற்கான உயிரை தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான பயோ இ3 திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**தேர்தல் ஆணையத்தின் செயலிகள்**

**• சி– விஜில்**

✓ தேர்தலின் போது வன்முறைகள் நிகழ்வதை தடுக்க இந்த செயலை பயன்படுத்தலாம்.

✓ இந்த செயலை மூலம் வன்முறை நடைபெறும் இடம் நேரம் உள்ளிட்ட விபரங்களுடன் புகைப்படம் மற்றும் வீடியோக்களை பதிவேற்றம் செய்து புகார் அளிக்க முடியும்.

✓ இதன் மூலம் பறக்கும் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும்.

**• சுவிதா**

✓ தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள் மற்றும் வாக்குகளை சேகரிக்க ஊர்வலங்களை நடத்து வதற்கும் ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட வாகனங்களை பயன்படுத்துவதற்கும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்து வதற்கும் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற ஒற்றை சாலர விண்ணப்பம் முறைக்கான வசதிக்காக இந்த செயலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**• வாக்காளர் உதவி செயலி**

✓ வாக்காளர் உதவி செயலி (voter helpline app) இந்த செயலை மூலம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் உள்ளதா என்பதை அறியவும் வாக்காளர் பதிவுக்கான இணைய வழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும் இது பயன்படுகிறது

✓ 1950 என்ற உதவி தேர்தல் பற்றி தொடர்பு கொள்வதற்கான கட்டணம் இல்லா அழைப்பாகும்

**குடியரசு தலைவர் திரௌபதி மும்மு தலைமையில் ஆளுநர்கள் மாநாடு தில்லியில் நடைபெற்றது**

- மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை திறம்பட அமல்படுத்துதல் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் மற்றும் உயர்கல்வியில் சீர்திருத்தங்கள் பழங்குடி யினர் பகுதிகளில் வளர்ச்சி உள்ளிட்டவை குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

**பிரதமரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் மூன்றாம் பாலினத்தவர் சேர்ப்பு**

- ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் மருத்துவ காப்பீட்டு திட்டம்.
- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PM–JAY ; லிட். ‘ பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டம் ‘ , ஆயுஷ்மான் பாரத் PM–JAY லிட். ‘லைவ் லாங் இந்தியா பிரதம மந்திரி மக்கள் நலத் திட்டம்’), இது மோடிகேர் என்றும் அழைக்கப்படுகிறது.
- தொடக்கம் 23 செப்டம்பர் 2018
- மத்திய குடும்ப நல அமைச்சகம்

**சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் மாநாடு**

- நடைபெற்ற இடம் புதுடெல்லி
- இந்த மாநாடு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது
- இந்த மாநாட்டின் 32 வது மாநாடு 65 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவில் நடைபெறுகிறது

**இந்தியாவின் முதல் விண்வெளி தினம்**

- ஆகஸ்ட் 23
- சந்திராயன் 3 திட்டம் நிலவில் வெற்றிகரமாக தரை யிறங்கிய நாளை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேசிய விண்வெளி தினமாக அறிவித்தார் (ஆகஸ்ட் 23)
- சந்திராயன் 3 விண்கலம் நிலவில் தரை இறங்கிய இடத்திற்கு சிவசக்தி என்று பிரதமர் பெயர் வைத்தார்
- சர்வதேச வானியல் ஒன்றியம் சந்திராயன் ஸ்ரீ தரை யிறங்கிய இடத்தை ஸ்டேஷன் சிவசக்தி என்று அங்கீகரித்துள்ளது
- சந்திராயன் 3 திட்ட இயக்குனர் – வீர முத்துவேல்

**கேரளாவின் முதல் மெய்நிகர் நீதிமன்றம் தொடக்கம்**

- கேரளாவில் முதல் மெய்நிகர் நீதிமன்றத்தை கேரள உயர்நீதிமன்றம் கொல்லம் மாவட்டத்தில் தொடங்கியது
- நீதிமன்ற வளாகங்களில் உள்ள இ சேவை மையங்களில் மூலம் மெய்நிகர் நீதிமன்றத்தின் இணையதளத்தில் இருந்து தகவல் பெற முடியும்.

**இந்தியாவின் முதல் காகிதம் இல்லாத தேர்தல்**

- மத்திய பிரதேச மாநிலம் போபாலில் உள்ள பஞ்சாயத்து இடைத்தேர்தலில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் காகிதம் இல்லா வாக்களிப்பை வெற்றிகரமாக நடத்தியது.

**அந்தமான் நிக்கோபார் யூனியன் பிரதேசத்தின் புதிய தலைநகரின் பெயர் மாற்றியமைப்பு**

- அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகராக இருந்த போர்ட் பிளேயர் என்ற பெயரானது தற்போது 'ஸ்ரீ விஜயபுரம்' என மறுப்பெயரிடப்பட்டது.
- ஸ்ரீ விஜயபுரம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வெற்றியையும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தனித்துவமான பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் முதன்முதலில் மூவண்ணக் கொடியை ஏற்றிய இடம் எதுவாகும்.

**விக்கியான் தாரா திட்டம்**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நடத்தும் பல அறிவியல் மேம்பாட்டு திட்டங்களை ஒன்றிணைக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- இத்திட்டத்தின் மூன்று முக்கிய கூறுகள்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவன மற்றும் மனித திறன் மேம்பாடு.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு.
- புத்தாக்கம், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் செயலாக்குதல்.

**படுக்கை வசதியுடன் வந்தே பாரத் ரயில்**

- பெங்களூருவில் உள்ள பாரத் எர்த் மூவ்ஸ் (BML) நிறுவனத்தின் வளாகத்தில் புதிய வந்தே பாரத் ரயில் பெட்டிகள் தயாரிப்பு ஆலைக்கு மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அடிக்கல் நாட்டினார்.
- தற்போது இருக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன இதனைத் தொடர்ந்து படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

**வந்தே பாரத்**

- இந்தியாவின் முதல் வந்தே பாரத் வாரணாசியில் இருந்து புது டெல்லி வரை இயக்கப்பட்டது.
- தென்னிந்தியாவின் முதல் வந்தே பாரத் சென்னை சென்ட்ரல் முதல் மைசூர் வரை.
- தமிழ்நாட்டின் முதல் வந்தே பாரத் சென்னை சென்ட்ரல் முதல் மதுரை வரை.
- தயாரிப்பு – integral coach factory (ICF)

**பிரதான் மந்திரி ஜன் ஜாதிய உன்னத் கிராம் அவியான் (PM –JUGA)**

- தொடக்கம் – 15 நவம்பர் 2023
- நோக்கம் – பழங்குடியின சமூகங்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல்
- இந்தத் திட்டம் 18 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் வசிக்கும் 75 சமூகங்களை உள்ளடக்க இலக்கு கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் இலக்குகள்
- கிராம வுட் கட்டமைப்பை மேம்படுத்துதல்
- பொருளாதார அதிகாரம் அளிப்பை ஊக்குவித்தல்
- நல்ல கல்விக்கான அணுக்களை உலகளாவியதாக்குதல்
- ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் கண்ணியமான முதுமை

**இந்தியாவில் போலியோ**

1. இந்தியாவில் இளம்பிள்ளை வாதம் **(poliomyelitis)** 2011 இல் ஒழிக்கப்பட்டது.
2. இளம்பிள்ளை வாதம் பாதிப்புள்ள நாடுகளில் உலகப் பட்டியலில் இருந்து 2012 இல் இந்தியா விடுதலை பெற்றுவிட்டது
3. இந்தியா இளம்பிள்ளை வாதம் இல்லாத நாடு என்று 2014 இல் உலக சுகாதார நிறுவனமும்அறிவித்து விட்டது.

**78 வது சுதந்திர தின உரை**

- பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் 11 வது சுதந்திர தின உரையாகும்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் "வளர்ந்த பாரதம்" தொடங்கி ஒரே நாடு ஒரே தேர்தல் வரை பல்வேறு அம்சங்களை முன் வைத்து உரையாற்றினார்.
- "வளர்ந்த பாரதம் 2047" என்ற இலக்கை நோக்கி இந்தியா பயணிக்கிறது.
- 2027 ஆம் ஆண்டிற்குள் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரத்தை அடையும்.

- 2036 இல் ஒலிம்பிக் போட்டியை இந்தியா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- 2024 சுதந்திர தின உரையானது பிரதமர் நரேந்திர மோடியின் மிக நீண்ட உரையாகும் (96 நிமிடம்). இந்திய வரலாற்றில் எந்த பிரதமரின் சுதந்திர தின உரையை ஒப்பிட்டாலும் இதுதான் மிக நீண்ட உரையாகும்.
- பிரதமர் நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு முதல்முறையாக டெல்லி செங்கோட்டையில் தேசிய கொடி ஏற்றிய போது 65 நிமிடங்கள் உரையாற்றினார்.
- 2015 – 88 நிமிடங்கள்
- 2016 – 96 நிமிடங்கள்
- 2017– 56 நிமிடங்கள்
- 2018 – 83 நிமிடங்கள்
- 2019 – 92 நிமிடங்கள்
- 2020 – 90 நிமிடங்கள்
- 2021 – 88 நிமிடங்கள்
- 2022 – 74 நிமிடங்கள்
- 2023 – 90 நிமிடங்கள்
- மிக நீண்ட உரையாக இதற்கு முன் இருந்தது.
- ஜவஹர்லால் நேரு 1947 ஆம் ஆண்டு 72 நிமிடங்கள்
- 1997 ஆம் ஆண்டு குஜ்ரால் – 71 நிமிடங்கள்
- மிகக் குறைந்த உரையாக தற்போது உள்ளது
- 1954 – ஜவஹர்லால் நேரு 14 நிமிடங்கள்
- 1966 – இந்திரா காந்தி 14 நிமிடங்கள்
- அதிக முறை தேசிய கொடி ஏற்றிய பிரதமர்கள்
- ஜவஹர்லால் நேரு – 15 ஆகஸ்ட், 1947 முதல் 27 மே 1964 வரை 17 முறை தேசிய கொடி ஏற்றியுள்ளார்.
- இந்திரா காந்தி இரண்டாவது இடம் – 16 முறை
- இந்திரா காந்தி தொடர்ந்து 11 முறை தேசிய கொடியை ஏற்றியுள்ளார்.
- தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து 11 முறை தேசிய கொடி ஏற்றி இந்த பட்டியலில் மூன்றாவதாக உள்ளார்.

**தேசிய கொடியை ஏற்றாத பிரதமர்கள்**

- குல்சாரிலால் நந்தா
- சந்திரசேகர்

**SC பட்டியலில் ஒரு சமூகத்தை சேர்க்கவோ அல்லது நீக்கவோ நாடாளுமன்றத்துக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்று கூறும் அரசமைப்பு சட்டபிரிவு – சட்டப்பிரிவு 342 (2)**

- பட்டியலின மற்றும் பழங்குடியனருக்கான இடஒதுக்கீட்டில் உள்ஒதுக்கீடு வழங்க மாநிலங் களுக்கு அதிகாரம் உள்ளது என்று உச்சநீதிமன்றம் அன்மையில் தீர்ப்பு வழங்கியது குறிப்பிடதக்கது. சென்னை உயர்நீதிமன்றத்தின் 34 வது நீதிபதியாக நியமணம் செய்யப்பட்டவர்

**கே. ஆர். ஸ்ரீராம்**

- சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை – 75
- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

1. விதி – 217
2. நியமணம் – குடியரசுத் தலைவர்
3. பதவிபிராமாணம் – ஆளுநர்
4. பதவிக்காலம் – 62 வயது வரை (உச்சநீதிமன்ற நீதிபதி – 65 வயது வரை)

**இந்தியாவிலேயே முதன் முறையாக எந்த மாநிலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்பட உள்ளது – உத்ரகாண்ட்**

- உத்ரகாண்ட் மாநிலத்தில் சத்ருகன் சிங் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது
- விதி 44 – இந்தியா முழுமைக்கும் ஒரே பொது சிவில் சட்டத்தை பற்றி குறிப்பிடுகிறது
- சுதந்திரத்திற்க்கு முன்னர் முதலே கோவா மாநிலத்தில் இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது

**ஜம்மு காஷ்மீர் சட்டமன்ற தேர்தல**

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள மொத்த சட்டமன்ற தொகுதிகள் 90
- இதில் தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மாநாட்டு கட்சி வென்ற இடங்கள் 42
- ஜம்மு காஷ்மீரின் முதல்வர் ஓமர் அப்துல்லா
- ஜம்மு காஷ்மீரின் துணை முதல்வர் சுரேந்தர் சௌதரி
- ஜம்மு காஷ்மீரின் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்கா
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட நாள் ஐந்து ஆகஸ்ட் 2019

**உலகில் முதல் முறையாக நதிநீர் டால்பின்களின் எண்ணிக்கைகளை கணக்கெடுப்பு நடத்திய நாடு – India**

- இந்தியா உலகில் முதல்முறையாக சிந்து கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆகிய நதிகளில் உள்ள டால்பின்களின் எண்ணிக்கைகளை கணக்கெடுப்பு நடத்தியுள்ளது.
- நன்னீர் ஆறுகள் மற்றும் கடலோர நீர் நிலைகளில் உள்ள டால்பின்களை பாதுகாக்கும் வகையில் டால்பின் திட்டம் மத்திய அரசால் 2020 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- டால்பின் திட்டத்தின் கீழ் உலகின் முதல் நதிநீர் டால்பின்களின் எண்ணிக்கையை இந்தியா கணக்கெடுத்துள்ளது.
- கங்கை மற்றும் சிந்து நதி டால்ஃபின்கள் ஒன்று போல காட்சியளித்தாலும் இரண்டும் சில வேறுபாடுகளைக் கொண்ட தனித்துவமான இனங்கள்.
- சிந்து நதி டால்ஃபின்கள் அதிகம் சிந்து நதியில் மட்டுமே காணப்படுகின்றன.
- டால்பின்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்த நதியின் தூய்மையை மதிப்பிட உதவும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

**ஜம்மு காஷ்மீர்**

- 2019 ஆகஸ்ட் 5ஆம் தேதி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரு யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டது மேலும் ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து பிரிவு 370 ரத்து செய்யப்பட்டது.
- குடியரசுத் தலைவர் ஆட்சியும் அமலில் இருந்தது.
- அண்மையில் ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தேசிய மாநாட்டு கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதை தொடர்ந்து குடியரசுத் தலைவர் ஆட்சி விளக்கிக் கொள்ளப்பட்டது.

**இந்தியாவில் நாட்டு மாடு இனத்தை பாதுகாப்பதற்காக நாட்டு மாடு நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம்**

❖ விடை – மகாராஷ்டிரம்

❖ மகாராஷ்டிர தலைநகர் – மும்பை

❖ முதல்வர் – தேவேந்திர பட்னவீஸ்

**இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில் எந்த இரு நகரங்களுக்கு இடையில் அமைக்கப்பட உள்ளது? ஜிந்த் – சோனிபட்**

✓ ஜிந்த் நகர் ஹரியானாவில் அமைந்துள்ளது.

✓ இந்த ரயிலானது சென்னை ஐசிஎப் இல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

✓ ஹைட்ரஜன் ரயிலானது ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள நாடுகள் – ஜெர்மணி, பிரான்ஸ், ஸ்வீடன், மற்றும் சீனா.

**செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான போக்குவரத்துக் கட்டுப்பாட்டு முறை**

- பெங்களூரில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் அதிக அளவு போக்குவரத்து நெரிசல் கொண்ட நகரமாக பெங்களுரு உள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பெங்களுரு – கர்நாடக மாநிலத்தின் தலைநகரம்.
- இந்தியாவின் மின்னியல் தலைநகரம் – பெங்களுரு.

**இந்தியாவின் முதல் நீருக்கடியிலான மெட்ரோ**

- கொல்கத்தாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மேற்கு வங்காளம் மாநிலத்தின் தலைநகரம் கொல்கத்தா.
- இந்தியாவிலேயே முதல்முறையாக மெட்ரோ ரயில் சேவை 24 அக்டோபர் 1984இல் கொல்கத்தாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியாவில் ஆறாவது நகரமாக சென்னையில் 2015 ஆம் ஆண்டு மெட்ரோ ரயில் சேவை அறிமுகப் படுத்தப்பட்டது.
- இந்தியாவில் தற்போது ஏழு முக்கிய நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை நடைமுறையில் உள்ளது.

**உலக போலியோ தினம்**
**அக்டோபர் 24**

- Theme(2024) & "The road to zero polio in Africa"
- 2014 : மார்ச் 27, 2014 அன்று இந்தியா போலியோ இல்லாத நாடாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

**ஐ. நா சபை நாள் – அக்டோபர் 24**

**ஐக்கிய நாடுகள் சபை (United nation)**

- உருவாக்கம் – 24 அக்டோபர் 1945

- உருவாக்கப்பட்ட இடம் – San Francisco, California (அமெரிக்கா)
- தலைமையிடம் – New York
- உறுப்பு நாடுகள் –– 193

**பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சி ( மன் கீ பாத்)**

- தொடக்கம் – 3 அக்டோபர் 2014
- ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வானொலி வா யிலாக நாட்டு மக்களிடையே உரையாற்றும் நிகழ்ச்சி.
- இந்திய அனிமேஷன் தொடர் சர்வதேச அளவில் பிரபலமடைந்து வருவது குறித்து பிரதமர் மோடி கூறியுள்ளார்.
- இந்திய தொலைக்காட்சிகளில் தொடங்கப்பட்ட சோட்டா பீம் நமது நாட்டில் மட்டுமல்ல பிற நாடுகளின் குழந்தைகளையும் மிகவும் கவர்ந்திருக்கிறது.
- நமது பிற அனிமேஷன் தொடர்களான கிருஷ்ணா அனுமன் மோடு பத்லூ போன்றவை விரும்புவோர் உலகெங்கிலும் இருக்கிறார்கள்.

**கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி முறையாக செலுத்தப்படுவதை பதிவு செய்யஅண்மையில் தொடங்கப்பட்ட இணையதளம் – U – win**

- கருணா காலத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டதை பதிவு செய்ய தொடங்கப்பட்ட கோ வின் இணையதளத்தை முன்மாதிரியாக கொண்டு இந்த தடுப்பூசி பதிவு செய்யும் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

## eRaktkosh

- ❖ இந்தியாவில் ரத்ததானதைதை கண்கானிப்பதுஇ இரத்த விநியோகம் செய்வது போன்ற இரத்த தானம் தொடர்பாக மத்திய அரசால் தொடங்கப்பட்ட இரத்த மேலாண்மை வங்கியின் பெயர்.
- ❖ இது மத்திய சுகாதாரம் மற்றம் குடும்பநல அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது
- ❖ தொடங்கப்பட்ட ஆண்டு – 7 ஏப்ரல் 2016
- ❖ தன்னார்வ ரத்த தான தினம் – அக்டோபர் 1

**மாதவ் காட்கில் குழு (கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவு சம்பவம் குறித்து ஆராய்வது)**

**மாதவ் காட்கில்**

- ❖ மாதவ் தனஞ்சய காட்கில்
- ❖ இந்திய பிரதமரின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் முன்னாள் உறுப்பினர்.
- ❖ சூழியலாளர்
- ❖ தேசிய பேரிடர் மேலாண்மை சட்டம் – 2005

**ஆர்த்தி சரின்**

- இந்திய இராணுவ மருத்துவ சேவைகளின் முதல் பெண் தலைமை தளபதியும் மருத்துவருமான ஆர்த்தி சரின் பெறுப்பேற்றார்.
- இவர் இராணுவ மருத்துவச் சேவைகளின் 46 ஆவது இயக்குநர் ஆவார்.
- இப்பதவியை வகிக்கும் முதல் பெண் ஆவார்.
- முப்படைகளிலும் பணியாற்றிய அனுபவம் கொண்டவரான ஆர்த்தியின் சேவைக்கான அதிவிஷஸ்ட் சேவை, விஷிஸ்ட் சேவை உள்ளிட்ட பதக்கங்களும் படைத் தளபதிகளின் பாராட்டு விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன.

**பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு 'தர்தி ஆபா பழங்குடியினர் கிராம வளர்ச்சித் திட்டம்"**

**அசாரிபாக்**

- ✓ அசாரிபாக் ஜார்கன்ட் மாநிலத்தில் அமைந்துள்ளது.
- ✓ தொடங்கி வைத்தவர் – பிரதமர் நரேந்திர மோடி
- ✓ ஜார்கண்ட் முதல்வர் – ஹேமந்த் சோரன்
- ✓ ஆளுநர் – சந்தோஷ் கன்வர்

**SATHI**

இந்தியாவில் தரமான வித்துகள் சரியான நேரத்தில் மாநிலங்களுக்கு கிடைப்பதற்காக மத்திய அரசால் தொடங்கப்படவுள்ள வலைதளம்.

**பிரதமரின் கரிண்ப் கல்யான் அன்ன யோஜனா (PMGKAY)**

- ❖ தொடக்கம் – ஏப்ரல் 2020
- ❖ அமைச்சகம் – Ministry of consumer affaires, food and public Distribution
- ❖ நோக்கம்
- ✓ ஏழை மக்களிடையே ரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை குறைக்கும் நோக்கில் செயல்படுத்தப்பட உள்ளது.
- ✓ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் வழிகாட்டு நடைமுறையின்

அடிப்படையில் இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம், விட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்டச் சத்துக்கள் அரிசியில் செறிவூட்டப்பட்ட ஏழை மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

✓ இந்த திட்டம் 2024 ஜூலை முதல் 2028 ஆண்டு டிசம்பர் வரை தொடரும்.

✓ இந்த திட்டம் உலகளாவிய பொதுவழங்கள் முறையின் (PDS); கீழ் செயல்படுகிறது.

**லோத்தல் (குஜராத்) பாரம்பரிய வளாகத்தை (NMHC) அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

❖ இது பண்டைய சிந்து சமவெளி நாகரிகமான லோத்தல் ஆகும்.

❖ இங்கு கப்பல்கட்டும் தளம் மற்றும் செப்பனிடும் தளம் கிடைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**PM கதி சக்தி திட்டம்**

❖ கதி சக்தி என்பது, இந்தியாவில் தளவாடச் செலவுகளைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய மாஸ்டர் பிளான் ஆகும்.

❖ கதி சக்தி என்பது இந்திய அரசாங்கத்தின் 16 அமைச்சகங்கள் மற்றும் துறைகளை ஒன்றிணைக்கும் ஒரு டிஜிட்டல் தளமாகும், மேலும் அதில் ரயில்வே மற்றும் சாலைவழிகளும் அடங்கும்.

**வந்தே பாரத் ரயில் திட்டம் இந்தியாவில் 2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.**

- தென்னிந்தியாவின் முதல் வந்தே பாரத் சென்னை – மைசூர் இடையே இயக்கப்பட்டது.
- தமிழ்நாட்டின் முதல் வந்தே பாரத் ரயில் சென்னை கோவை இடையே இயக்கப்பட்டது.
- ஆரம்பத்தில் வந்தே பாரத் அறையில் அமர்ந்து பயணம் செய்யும் வசதி மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தற்போது தூங்கும் வசதியுடன் கூடிய வந்தே மாத துறையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- இந்த ரயிலை பெங்களூருவில் உள்ள பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது.

**வத்சல்யா திட்டம்**

- மத்தியநிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தேசிய ஓய்வூதிய திட்டத்தின் (NPS) ஒரு பகுதியாக NPS வத்சல்யா திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- இது பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகள் சிறு வயதில் இருக்கும்போதே நீண்டகால நிதித் திட்டமிடல் செய்ய உதவுகிறது.
- இது அவர்களின் குழந்தையின் எதிர்காலத்திற்காக, குறிப்பாக ஓய்வூதியத்திற்காக முன்கூட்டியே சேமிக்க உதவுகிறது.
- அனைத்து இந்தியக் குடிமக்களும், அநிவாசி இந்தியர்கள் (NRI) உட்பட, NPS வத்சல்யா கணக்கைத் தொடங்கலாம். சிறார் (18 வயதுக்குட்பட்டவர்) சார்பாக சட்டப்பூர்வ பாதுகாவலரால் வங்கி கணக்கு திறக்கப்படுகிறது. குழந்தை 18 வயதைஅடையும்போது, வங்கி கணக்கை வழக்கமான NPS கணக்காக மாற்றலாம்.

**NPS வத்சல்யாவின் முக்கிய அம்சங்கள்**

- முன்கூட்டியே சேமிக்கத் தொடங்குங்கள்: பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் குழந்தைப் பருவத்திலிருந்தே எதிர்காலத்திற்காக சேமிக்கத்தொடங்கலாம்.
- குறைந்தபட்ச பங்களிப்பு: ஆண்டுக்கு `1,000 குறைந்தபட்ச முதலீடு, எவ்வளவு பங்களிக்கலாம் என்பதில் உச்சவரம்பு இல்லை.

**சர்வதேச தொலைதொடர்பு சங்கத்தின் "உலக தொலைத்தொடர்பு தரநிலைப்படுத்துதல் மாநாடு" மற்றும் "இந்திய மொபைல் காங்கிரஸ் அமைப்பின் எட்டாவது சர்வதேச மாநாடு கண்காட்சி"**

- இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் டெல்லியில் தொடங்கி வைத்தார்

**பிரதமரின் விஸ்வகர்மா யோஜனா திட்டம்**

- தொடக்கம் – 17 செப்டம்பர் 2023
- 18 விதமான கைவினை கலைஞர்களுக்காக தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- நடப்பு நிதி ஆண்டில் பட்ஜெட்டில் 13,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் International Day for Eradication of Poverty – அக்டோபர் 17**

- இந்த தினமானது ஐக்கிய நாடுகள் சபையால் 1992 ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது
- Theme – "Ending Social and Institutional Maltreatment Acting together for just, peaceful and inclusive societies".

**அரசு மருத்துவமனைகளில் இலவச டயாலிசிஸ் சிகிச்சை**

- ஹரியானாவில் தொடங்கப்பட்டது
- ஹரியானாவில் மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்த ஹரியானா மாநிலத்தின் முதல்வர் நாயப் சிங் சைனி இந்த திட்டத்தை அறிவித்தார்

**நாட்டின் முதல் தனியார் ராணுவ விமான தயாரிப்பு ஆலை**

- தொடக்கம் – வதோதரா ( குஜராத்)
- தொடங்கிவைத்தவர் – பிரதமர் நரேந்திர மோடி
- டாட்டா குழுமம் அமைத்துள்ள இந்த ஆலையில் ஏர்பஸ் விமானங்கள் தயாரிப்பு நிறுவனத்துடன்இணைந்து சி –295 ராணுவ பயன்பாட்டு விமானங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட உள்ளன.
- இந்திய விமானப்படையின் பழைய அவ்ரோ –748 விமானங்களுக்கு பதிலாக 56, சி – 295 விமானங்களை வாங்குவதற்கு ஏர்பஸ் நிறுவனத்துடன் 21,000 கோடி மதிப்பீட்டில் கடந்த 2021 ஆம் ஆண்டு இந்தியா ஒப்பந்தம் செய்தது.
- நாட்டின் முதல் தனியார் ராணுவ விமானம் 2026 ஆம் ஆண்டு வெளியாகும் என்று தெரிவிப்பு.
- இந்தியாவின் இந்த விமானங்களை தயாரிக்கும் பணி tata குழுமத்தை சேர்ந்த டாட்டா அட்வான்ஸ் சிஸ்டம்ஸ் நிறுவனத்திடம் 2022 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**சோராய் ஓவியம்**

1. ஜார்க்கண்ட் மாநிலத்தின் பாரம்பரிய சோராய் ஓவியம் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிற்கு பிரதமர் நரேந்திர மோடி பரிசளித்தார்.
2. இந்த வகை ஓவியங்கள் மிகவும் நேர்த்தியாகவும் கலை நயத்துடனும் திட்டமிடப்படுகின்றன
3. வைக்கோல் அல்லது விரல்களையே தூரிகையாகக் கொண்டு இந்த ஓவியங்கள் வரையப்படுகின்றன
4. இந்த ஓவியங்களில் வழக்கமாக விலங்குகள் பறவைகள் இயற்கை காட்சிகள் என ஒரு விவசாயியின் வாழ்க்கையை விளக்கும் காட்சிகள் இடம் பெறும்
5. ஜார்க்கண்ட் உள்ளூர் பழங்குடியின மக்களின் வாழ்க்கை பற்றிய காட்சிகளும் அந்த ஓவியங்களில் இடம் பெற்று இருக்கும்
6. இந்த ஓவியத்திற்கு 2014 ஆம் ஆண்டு புவிசார் குறியீடு அங்கீகாரம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது

**இந்தியாவின் மிக உயரமான ரயில்வே மேம்பாலம்**

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தொடங்கப்பட்டது.
- இந்த ரயில்வே மேம்பாலானது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் அமைந்துள்ளது.
- செனாப் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
- இந்த ரயில்வே மேம்பாலத்தின் உயரம்– 359 meters (1,178 ft)

**“டனா” புயல்**

- கத்தார் நாடு பெயர் வைத்தது.
- வங்கக் கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்க எட்டு நாடுகள் தங்களது பெயர்களை வழங்கும்.

**இந்திய உயிர் சக்தி வேளாண்மை மாநாடு Biodynamic association of india**

- நடைபெற்ற இடம் – பெங்களூரு
- கர்நாடக மாநிலத்தின் தலைநகரம்

**புதிய செம்மொழிகள்**

- மராட்டியம், வங்காளம், பாலி, பிராகிருதம் மற்றும் அசாமியம் ஆகிய புதிய ஐந்து மொழிகளுக்கும் செம்மொழி அந்தஸ்து வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம் செம்மொழி அந்தஸ்து பெற்ற மொழிகளின் எண்ணிக்கையானது ஆறிலிருந்து பதினொன்றாக உயர்ந்துள்ளது.
- இதற்கு முன் செம்மொழி அந்தஸ்து பெற்ற மொழிகள்.
- 2004 தமிழ்
- 2005 சமஸ்கிருதம்
- தெலுங்கு
- கன்னடம்
- மலையாளம்
- 2014 ஒடியா

**மத்திய அரசின் ஒரே பதவிக்கு ஒரே ஓய்வூதியம் திட்டம்**

- தொடக்கம் – 7 நவம்பர் 2024

1. ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு ஒரே பதவிக்கு ஒரே ஓய்வூதியம் அமல்படுத்துவது என்பது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

2. ஓர் அரசாணியை பிறப்பித்து ஒரே பதவிக்கு ஒரே ஒய்வூதியம் திட்டத்தை அமல்படுத்துவது என்று நரேந்திர மோடி அரசு கடந்த 2015 நவம்பர் 7ஆம் தேதி முடிவு செய்தது குறிப்பிடத்தக்கது

**இந்தியாவின் முதல் தனியார் ராணுவ விமான தயாரிப்பு ஆலை – குஜராத்**

- டாட்டா குழுமம் மற்றும் ஏர்பஸ் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்டது
- world Tsunami day உலக சுனாமி தினம் – நவம்பர் 5

**ஆசிஷ் பாஷா vs மத்திய அரசு வழக்கு – 1967** ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு அரசின் நிதி உதவியுடன் மத்திய பல்கலைக்கழகமாக அளிக்கார் முஸ்லிம் பல்கலைக்கழகம் செயல்பட்டு வரும் நிலையில் சிறுபான்மை கல்வி நிறுவன அந்தஸ்தை கோர முடியாது என்று தீர்ப்பளித்தது. இதனால் சிறுபான்மை நிறுவன அந்தஸ்து ரத்தானது

- இந்த நிலையில் 1981 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழக திருத்த சட்டத்தின் மூலம் இந்த பல்கலைக்கழகம் மீண்டும் சிறுபான்மை கல்வி நிறுவன அந்தஸ்தை பெற்றது.
- 2006 ஆம் ஆண்டு அலகாபாத் உயர்நீதிமன்றம் சிறுபான்மை அந்தஸ்தை ரத்து செய்தது.
- தற்போது வழங்கப்பட்ட தீர்ப்பில் ஒரு கல்வி நிறுவனம் சிறுபான்மையினரால் தொடங்கப்படவில்லை என்பதால் சிறுபான்மை கல்வி நிறுவன அந்தஸ்தை கூற முடியாது என்று உச்ச நீதிமன்றம் 1967–ல் அளித்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட கருத்து ஏற்புடையதல்ல. நிறுவனம் சிறுபான்மையினரின் நலனுக்காக செயல்படுகிறதா என்பது தான் முக்கியம் நாடாளுமன்ற சட்டத்தால் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனம் என்பதற்காக சிறுபான்மை அந்தஸ்தை மறுக்க முடியாது.
- சிறுபான்மையினரின் அமைப்பு ஒரு கல்வி நிறுவனத்தை தொடங்க வேண்டும் எனில் அந்த அமைப்பு அரசியலமைப்பு சட்டப்பிரிவு 30வின் கீழ் அந்த நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான உரிமையை கோரி இருக்க வேண்டும்.
- சட்டப்பிரிவு 30 – சிறுபான்மையினர் ஒரு கல்வி நிறுவனத்தை தொடங்கவும் நிர்வகிப்பதற்குமான உரிமையை இந்த சட்டப்பிரிவு வழங்கியது.

**முப்படைகளின் படைக்கல பிரிவு தலைவராக கமடோர் சுரேஷ் பொறுப்பேற்பு**

- சென்னையை தலைமையிடமாகக் கொண்ட பாதுகாப்பு அமைச்சக முப்படைகளின் படைக்கல பிரிவு தலைவராக கமடோர் ஜே.சுரேஷ் பொறுப்பேற்றார்.

**மத்திய அரசின் பாதுகாப்புத்துறை செயலாளர் ராஜேஷ் குமார் சிங்**

- இவருக்கு முன் இந்த பதவியில் இருந்தவர் கிரிதர் அரமனே

**யு – வின் தளம்**

- இந்தியா முழுவதும் உள்ள அனைத்து கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளின் தடுப்பூசி நிலையை மின்னணு முறையில் பதிவு செய்து கண்காணித்தல் இத் தளத்தின் நோக்கம் ஆகும்.
- இது முக்கியமாக குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்காக தொடங்கப்பட்டது.
- U & Win – யூனிவர்சல் இம்யூனைசேஷன் புரோகிராம்.
- U & win app – கர்ப்பிணி பெண்கள் தடுப்பூசியை பதிவு செய்ய தொடங்கப்பட்ட செயலி
- இந்த செயலி அல்லது தளத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்களுக்கான முக்கியமான தடுப்பூசிகளின் கால அளவு உள்ளிட்டவற்றை கண்காணிக்க முடியும்.
- பிரசவத்திற்கு பிந்தைய நிலைகளை பதிவு செய்யலாம் புதிதாக பிறந்த குழந்தையின் தடுப்பூசி விவரங்களை பதிவு செய்து அவர்களுக்கு செலுத்த வேண்டிய தடுப்பூசி அட்டவணையை பராமரித்து முறையாக தடுப்பூசி நடைமுறைகளை தொடங்கலாம்.
- குழந்தைகளுக்கு 16 வயதாகும் வரை இந்த அட்டவணை திட்ட மேலாளர்கள் கண்காணிக்க முடியும்.
- தற்போது U & win தளம் பதினோரு மொழிகளில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
- Covid –19 தொற்றின் போது இந்தியாவின் தடுப்பூசி திட்டத்தின் தொழில்நுட்ப முதுகெலும்பாக கோ – வின் தளம் செயல்பட்டது.

**பிரதமரின் வித்யாலக்ஷ்மி திட்டம்**

- தரமான உயர்கல்வியை பெறுவதில் மாணவர்களுக்கு பணப்பிரச்சனை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கில் ரூபாய் 3600 கோடி மதிப்பீட்டில் இந்த புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

- இந்தத் திட்டத்தின் கீழ் நாட்டில் தலை சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்கள் எந்த ஒரு பிணையையோ உத்தரவாத கையப்பமோ இல்லாமல் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் கல்வி கடன் பெற முடியும்.
- பிரதமரின் வித்யா லட்சுமி திட்டம் தேசிய கல்விக் கொள்கை 2020ன் கீழ் மற்றொரு முக்கிய முயற்சியாகும்.
- ரூ. 7.5 லட்சம் வரையிலான கடனுக்கு 75% உத்தரவாதத்தை மத்திய அரசு அளிக்கும்.
- 8 லட்சம் வரையிலான ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் மற்றும் வேறு எந்த உதவித்தொகை அல்லது வட்டி மானிய திட்டங்களின் கீழ் பலனடையாத மாணவர்கள் 10 லட்சம் வரையிலான கல்வி கடனுக்கு மூன்று சதவீத வட்டி மானியம் பெறலாம்.
- இந்த வட்டி மானியம் ஆண்டுக்கு ஒரு லட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- குடும்ப ஆண்டு வருமானம் 4.5 லட்சத்திற்குள் இருக்கும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு பிரதமரின் உயர்கல்வி ஊக்கத் தொகை (பிரதமரின் உச்சத்தர் சிக் ஷா புரோத்சாஹன் – PMUSP) திட்டத்தின் கீழ் 10 லட்சம் வரையிலான கடனுக்கு படிப்பை முடிக்கும் வரை முழு வட்டி மானியம் வழங்கப்படும்.
- தற்போதைய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான்.

### மொத்த கருவுறுதல் விகிதம் (TFR)

- TFR என்பது "ஒரு பெண் தனது இனப்பெருக்க ஆண்டுகளில் பிரசவிக்கும் சராசரி குழந்தைகளின் எண்ணிக்கையை மதிப்பிடும் மக்கள்தொகை குறிகாட்டி" ஆகும். மாற்றீட்டு நிலை TFR 2.1 ஆகும்.

### 'ஒரே நாடு ஒரே சந்தா திட்டம்,

- வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை எட்ட புதிய கல்விக் கொள்கையின் பரிந்துரையின்படி பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆய்வகங்கள் உள்ளிட்டவற்றில் ஆய்வை மேம்படுத்துவதற்காக தொடங்கப்பட்ட அணுசந்தன் தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாக இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இளைஞர்களுக்கு தரமான உயர்கல்வி வழங்கப்படுவது உறுதி செய்யப்படவுள்ளது.

### இயற்கை வேளாண் இயக்கம்

- நாடு முழுவதும் 7.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து 1 கோடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேசிய இயற்கை வேளாண் இயக்கம் தொடங்கப்படவுள்ளது.
- இந்த திட்டத்துக்கு ரூ.2,481 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தில் இணைய விரும்பும் ஊராட்சிகளை தேர்ந்தெடுத்து 15,000 வேளாண் குழுக்களை மேம்படுத்தவும் மற்றும் தேவைக்கேற்ப 10,000 இயற்கை உள்ளீட வளங்கள் மையம் அமைக்கவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்த மையங்களில் இயற்கை வளங்கை விநியோகிப்பதுடன் ரூ.1 லட்சம் வரை மூலதன உதவியும் வழங்கப்படவுள்ளது

### பிமா சகி யோஜனா

- பிரதமர் நரேந்திரமோடி இந்தியா முழுவதும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் "பிமா சகி யோஜனா" திட்டத்தை பானிபட்டில் தொடங்கி வைக்க உள்ளார்.
- "பிமாசகி யோஜனா" பெண்களின் நிதி பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது, இது பெண்களுக்கான காப்பீட்டு பாதுகாப்பை ஊக்குவிக்கிறது.
- இந்த திட்டம் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கிறது. இது பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்த முயல்கிறது.

### திட்டத்தின் பலன்கள்

- இத்திட்டம் பெண்களுக்கான நிதி உதவி, காப்பீட்டு திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுகான பயிற்சி வழங்கும்.

### முதல் பசுமைஹைட்ரஜன் எரிபொருள் நிலையம்

- இந்தியா சமீபத்தில் லடாக்கின் லேவில் தனது முதல் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் நிலையத்தை திறந்துள்ளது, இது பசுமை இயக்க துறையில் ஒரு மைல்கல் ஆகும்.
- இந்தத் திட்டம் NTPC லிமிடெட்டுக்காக அமராராஜா இன்ஃப்ராவால் நிறைவு செய்யப்பட்டது,

### ஹரியாணாவில் அரசியல் சாசன அருங்காட்சியகம்

- ஹரியாணா மாநிலத்தில் உள்ள ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகத்தில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் அரசியல்

சாசன அருங்காட்சியகத்தை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா திறந்து வைக்கவுள்ளார்.

இந்த அருங்காட்சியகத்துக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு உதவுவதற்காக சென்னை ஐஐடி மாணவர் குழுவினர் உருவாக்கியுள்ளஅதிநவீன வழிகாட்டி ரோபோ சென்னையில் அறிமுகப்படுத்தப் பட்டது.

**முதல் செயற்கை நுண்ணறிவு (AI) தரவு வங்கி**

- இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் நாட்டின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) தரவு வங்கியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது புத்தாக்கத்தை ஊக்குவிப்பதையும், தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த தரவு வங்கி ஆராய்ச்சியாளர்கள், ஸ்டார்ட் அப்கள் மற்றும் மென்பொருள் உருவாக்குநர்களுக்கு AI தீர்வுகளுக்கான அத்தியாவசிய தரவுத்தொகுப்புகளை வழங்கும். AI தரவு வங்கி 7வது ASSOCHAM AI தலைமை சந்திப்பு 2024இல் தொடங்கப்பட்டது.

**அடல் புத்தாக்க திட்டம் 2.0**

- மார்ச் 31, 2028 வரை செயல்படும் அடல் புத்தாக்க திட்டம் 2.0–க்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் இலக்கு அதிக வேலைவாய்ப்புகளையும் புதுமையான தயாரிப்புகளையும் உருவாக்குவதாகும் இது இந்தியாவின் உலகளாவிய போட்டித்திறனை அதிகரிக்கும்.

**அடல் புத்தாக்க திட்டம் 2.0–ன் நோக்கங்கள்**

- புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில் முனைவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஸ்டார்ட் அப்களின் வெற்றி விகிதத்தை மேம்படுத்த முயல்கிறது.

**அடல் புத்தாக்க திட்டம் 2.0–ன் கீழ் உள்ள முக்கிய திட்டங்கள்**

- புத்தாக்க சூழல் அமைப்பில் பங்கேற்பை விரிவுபடுத்த இரண்டு முக்கிய திட்டங்கள் உள்ளன. மொழி உள்ளடக்க புத்தாக்கத் திட்டம் (LIPI) 22 அலுவல் மொழிகளில் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு ஆதரவளிக்கும்.

**பால் விவாஹ் முக்த் பாரத்**

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் "பால் விவாஹ் முக்த் பாரத்" என்ற தேசிய திட்டத்தை புது டெல்லியில் தொடங்கியது. குழந்தை திருமணத்தை ஒழிப்பதற்கும், பெண்களை மேம்படுத்துவதற்கும் இந்த திட்டம் 2047–ல் வளர்ச்சியடைந்த இந்தியா (விக்சித் பாரத்) என்ற தொலைநோக்குப் பார்வையுடன் இணைகிறது.
- இது குழந்தை திருமணம் இல்லாதபாரத் தகவல் தள சட்டம், 2006–ன் அமலாக்கத்திற்கான புதுமையான கருவியாகும்.
- திட்டம் தொடக்கம் மற்றும் நோக்கங்கள்:

  நோக்கம்: குழந்தை திருமணத்தை ஒழித்து, பெண்களுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் குழந்தை திருமண தடைச் சட்டம் 2006 உடன் இணைகிறது.

**"அபயா பிளஸ்" என்ற பெயரிலான சிறுமிகளுக்கான தற்காப்பு கலை பயிற்சி**

- மேற்கு வங்காளம் மாநிலத்தில் தொடங்கப்பட்டது
- மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் ஆர்.ஜிகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இளம் பெண் பயிற்சி மருத்துவரான அபாயா என்பவர் பாலியல் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து அவருடைய பெயரில் இந்த தற்காப்பு பயிற்சி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

குழந்தை திருமணத்திற்கு எதிராக பிர்ஹோர் பழங்குடி யினர்.

ஜார்க்கண்டின் கிரிடிஹ் பகுதியில் குழந்தை திருமணத்திற்கு எதிரான இயக்கத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பழங்குடி குழுவான (PVTG) பிர்ஹோர் பழங்குடியினர் இணைந்துள்ளனர். ஜஸ்ட்ரைட்ஸ் ஃபார்சில்ட்ரன் அலயன்ஸ் (JRC) தன்னார்வ தொண்டு நிறுவனம் இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

**மத்தியப் பிரதேசத்தின் புலிகள் இடமாற்றம்**

விலங்கு பரிமாற்ற திட்டத்தின் ஒரு பகுதியாக மத்தியப் பிரதேசம் 14 புலிகளை ராஜஸ்தான், ஒடிசா மற்றும் சத்தீஸ் கருக்கு இடமாற்றம் செய்யும். பந்தவ்கர், பன்னா, கன்ஹா மற்றும் பெஞ்ச் போன்ற காப்பகங்களிலிருந்து நான்கு புலிகள் ராஜஸ்தானுக்கும், இரண்டு புலிகள் ஒடிசாவுக்கும், எட்டு புலிகள் சத்தீஸ்கருக்கும் செல்லும்

**ஆந்திரப் பிரதேச விளையாட்டு ஆணையம் (SAAP) அறிமுகப்படுத்தியுள்ளது.**

விளையாட்டு மேலாண்மையை ஒழுங்குபடுத்த, விளையாட்டு ஒதுக்கீட்டு சான்றிதழ்களில் முறைகேடுகளை அகற்ற,

வீரர் பதிவு, செயல்திறன் கண்காணிப்பு, போட்டி விண்ணப்பங்கள் மற்றும் உபகரணங்கள் விநியோகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இதுஇலக்கு கொண்டுள்ளது.

### செல்வராணி Vs உச்ச நீதிமன்றம் வழக்கு

- பிறப்பால் கிறிஸ்தவரான புதுச்சேரியை சேர்ந்த செல்வராணி இந்து மதத்தை தழுவியதாக கூறி பட்டியலிடப்பட்ட சாதியினர் சமூக சான்றிதழை வழங்குமாறு கோரினார்.
- உச்சநீதிமன்ற தீர்ப்பு – எந்த ஓர் உண்மையான சமய நம்பிக்கையும் இல்லாமல், பெரும்பாலும் ஒதுக்கிட்டு பலன்களை பெறுவதை நோக்கமாகக் கொண்ட மதமாற்றமானது இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் சமூக நெறிமுறைகளை வீழ்த்துவதற்கு சமம்.

### "Teacher" mobile app

1. கல்வியில் தரத்தை உயர்த்தும் முயற்சியாக மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
2. படிப்பு திட்டங்கள், ஒளிப்பட காட்சிகள், எண்ணிம ஒலி வடிவ ஒலிபரப்புகள், இணையம் சார்ந்த கருத்தரங்கங்கள், வினாடி வினாக்கள் மற்றும் பலவற்றை நன்கு உள்ளடக்கிய 260 மணி நேர உயர்தர உள்ளடக்கத்தை வழங்குகிறது.
3. இது கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் மாணவர் ஈடுபாட்டை நன்கு அதிகரித்தல் ஆகியவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டது.

### இந்திய அரசியலமைப்பின் முகவுரை

- இந்திய அரசியலமைப்பு சட்ட ஆவணத்தின் முகப்புரையில் சமதர்மம் மற்றும் மதச்சார்பற்ற தன்மை போன்ற சொற்கள் சேர்க்கப்பட்டதன் செல்லுபடி தன்மையை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது
- இந்த சொற்கள் 42 வது திருத்த சட்டம் 1976 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டன
- 2020ல் டாக்டர் பல்ராம் சிங் என்ற உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையில் சமதர்மம் மற்றும் மதசார்பற்றது போன்ற சொற்களை சேர்ப்பதை எதிர்த்து மனு தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

### ஜாவாரா பழங்குடியினர்

- இவர்கள் அந்தமான் நிக்கோபாரை சேர்ந்தவர்கள்
- இவர்கள் வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரிப்பதை தொழிலாக கொண்டவர்கள்
- 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இவர்கள் மொத்தம் 380 பேர்
- இவர்களில் 19 உறுப்பினர்கள் தற்போது வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

### பால் விவாஹ் முக்த் பாரத் பிரச்சாரம்

- குழந்தை திருமணத்திற்கு எதிரான தொடங்கப்பட்ட பிரச்சாரம் ஆகும்.
- 2029 ஆம் ஆண்டிற்குள் குழந்தை திருமணங்களின் எண்ணிக்கையை சுமார் ஐந்து சதவீதத்திற்கும் குறைவாக குறைப்பதே இதன் நோக்கமாகும்.

### ரயில்வே திருத்த மசோதா 2024

- இந்த மசோதா 1905 ஆம் ஆண்டு இந்திய ரயில்வே வாரிய சட்டத்தின் முன்மொழிவுகளை 1989 ஆம் ஆண்டு ரயில்வே சட்டத்தில் இணைப்பதன் மூலம் சட்ட ரீதியிலான கட்டமைப்பை எளிதாக முன்மொழிகிறது

### 129 ஆவது திருத்த மசோதா

- மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்காக "ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா" மக்களவையில் அறிமுகப் படுத்தப்பட்டது
- மக்களவையில் மசோதாவை அறிமுகப்படுத்தியவர் மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால்.
- 82A என்ற புதிய சரத்து சேர்க்கப்பட்டது – மக்களவை மற்றும் அனைத்து மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்
- சரத்து 83 ல் திருத்தம் – பாராளுமன்ற அவைகளின் செயல்பாட்டுக் காலம்
- சரத்து 172ல் திருத்தம் – மாநில சட்டமன்றங்களின் செயல்பாட்டு காலம்
- சரத்து 327 இல் திருத்தம் – சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான விதிமுறைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம்
- மின்னணு வாக்குப்பதிவு முறையில் (மசோதாவிற்கு வாக்கெடுப்பு நடக்குதல்) அறிமுகப்படுத்தப்பட்ட முதல் மசோதா இதுவே

### பிஸ்வநாத் கோல்டர் குழு

- உறுப்பினர்கள் 1+25
- 2011–12 ஆண்டிற்கு பதிலாக 2022–23 ஆம் ஆண்டை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (புனுP) தொகுப்பிற்கான அடிப்படை ஆண்டாக மாற்றுவதற்கு

மத்திய அரசு முடிவு செய்துள்ளது

- தேசிய வருமானத்தின் முதல் அதிகாரப்பூர்வ மதிப்பீடுகள் ஆனது, மத்திய புள்ளியல் அமைப்பினால் 1948–49 ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு அடிப்படை ஆண்டு விலையில் தயாரிக்கப்பட்டது.

**இந்தியா**

பாகிஸ்தான் நாட்டில் லாகூரில் பகத்சிங் கண்காட்சி அரங்கு திறக்கப்பட்டது.

- பாகிஸ்தான் நாட்டின் தலைநகர் லாகூரில் அமைந்துள்ள பூஞ்ச் மாளிகையில் பகத்சிங் கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த பூஞ்ச் மாளிகையில் தான் பகத்சிங்கின் தேச துரோக வழக்கின் விசாரணை நடைபெற்றது.
- 1931 மார்ச் 23இல் தனது 23 வது வயதில் பகத்சிங் தூக்கிலிடப்பட்டார்.

**பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது**

- மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் பிரதமரின் ஃபசல் பீமா யோஜனா திட்டம் 2025–26 வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்.
- நாட்டின் மிகப்பெரிய பயிர் காப்பீட்டு திட்டமாக பிரதமரின் ஃபசல் பீமா யோஜனா விளங்குகிறது

**பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா**

- தொடக்கம் – 18 பிப்ரவரி 2016
- நோக்கம்: விவசாயிகளின் வருமானத்தை நிலைப் படுத்தி, பயிர் சேதத்தால் ஏற்படும் நிதி இழப்பை ஈடு செய்ய உதவுதல்.

**பாதுகாப்புத்துறை சீர்திருத்த ஆண்டு-2025**

- முப்படைகளையும் தொழில்நுட்ப ரீதியாகமேம்பட்ட போருக்கு தயாராக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் வகையில் 2025 ஆம் ஆண்டு சீர்திருத்த ஆண்டாக கடைபிடிக்கப்படும் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவிப்பு
- முப்படைகளையும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட போருக்கு தயாராக உள்ள படைகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த சீர்திருத்தம் இருக்கும்.
- தற்போது தரைப்படை கடற்படை விமானப்படை ஆகியவற்றிற்கு தனித்தனி கட்டளைகள் உள்ளன.

**தேசிய அத்தியாவசிய நோய் அறிதல் பட்டியல்**

- வெளியீடு – இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ICMR
- நீரிழிவு, மலேரியா, காசநோய், எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் போன்ற ஒன்பது வகையான நோய் அறிதல் சோதனைகள் கிராம அளவிலான கிடைக்க சுகாதார மையங்களில் கிடைக்க வேண்டும்
- ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் இந்த ஒன்பது சோதனைகளுடன் கூடுதலாக ஹெபடைடிஸ்– பிசோதனைகளையும் வழங்க வேண்டும்.
- இந்தப் பட்டியல் முதல் முதலாக 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

உத்தரகாண்டில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப் பட்டது.

- சுதந்திர இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முதல் மாநிலம் உத்தரகாண்ட்.
- திருமணம் விவாகரத்து, தத்தெடுத்தல் வாரிசுரிமை ஆகிய விவகாரங்களில் ஒவ்வொரு மதத்திலும் தனித்தனி சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்துவது குறித்து ஆராய முன்னாள் தலைமைச் செயலாளர் சத்ருஹன் சின் தலைமையில் நிபுணர் குழு அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**சட்டத்தின் அம்சங்கள்**

- பழங்குடியினர் இந்த சட்டத்தில் சேர்க்கப்படவில்லை.
- இந்த சட்டத்தின்படி திருமண பதிவு மட்டும் இன்றி திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்பவரும் அரசிடம் முறையாக பதிவு செய்து கொள்வது கட்டாயமாகும்.
- விவாகரத்துக்கான காரணங்கள் மறுமணம் ஜீவனாம்சம் தொடர்பாக பொது விதிமுறைகளை உறுதி செய்யும் சட்டம் பலதாரமணம் மற்றும் ஹலாலா நடைமுறையை தடை செய்கிறது.
- பாலின சமத்துவத்தை முக்கிய அம்சமாகக் கொண்ட இச்சட்டம் ஆண்கள் பெண்களுக்கு ஒரே போன்ற குறைந்தபட்ச திருமண வயது ஆண் பெண் குழந்தைகளுக்கு சமமான சொத்துரிமையை உறுதி செய்கிறது.

**மோசடி அழைப்புகளை தடுக்க விரைவில் சோதனை திட்டம்**

✓ பொதுமக்களின் கைபேசிக்கு வரும் மோசடி அழைப்புகளை தடுப்பதற்கான சோதனை

திட்டத்தை விரைவில் தொடங்க உள்ளதாக இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்காற்று ஆணையம் (டிராய்) தெரிவித்துள்ளது.

✓ பல்வேறு பகுதிகள் அல்லது இடங்களில் இணைய தரவுகளை சேகரிப்பது அல்லது பதிவு செய்வதே டிஸ்டிரிபியூடெட் லெட்ஜர் தொழில்நுட்பம் (DLT) எனப்படுகிறது. பணப்பதிவர்த்தனைகள் உட்படபல்வேறுதரவுகள் இதில் சேகரிக்கப்படுகின்றன.

**வெளிநாடுகளில் பதுங்கிய குற்றவாளிகளை கண்டறிய இணையதளம் தொடக்கம்**

- இந்தியாவில் குற்றம் புரிந்து விட்டு வெளிநாடுகளில் பதுங்கும் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்காக “பாரத் போல்” இணையத்தளம் தொடக்கம்
- புதுடில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்
- தற்போது மத்திய மாநில அரசுகளின் புலனாய்வு முகமைகள், இன்டர் போலுக்கு சிபிஐமை அணுகாமல் நேரடியாக இன்டர்போல் அமைப்பை தொடர்பு கொள்ளும் விதமாக ஒரு மையப்படுத்தப்பட்ட பாரத் போல் அமைப்பை மத்திய உள்துறை அமைச்சகம் உருவாக்கியுள்ளது
- மத்திய மாநில புலனாய்வு அமைப்புகள் இன்டர் போலின் 195 உறுப்பு நாடுகளிலும் இருந்து தங்கள் வழக்குகள் குறித்த தகவல்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் குற்றங்களை குறைக்க முடியும்.

**குடியரசு தின விழா சிறப்பு விருந்தினர் 2025**

✓ இந்தோனேசியாவின் அதிபர் – பிரபோவோ சுபியான்தோ கலந்து கொண்டார்.

✓ கடந்த ஆண்டு பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் பங்கேற்றார்.

✓ 1995 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா பங்கேற்றார்.

**இந்தியாவில் மஞ்சள் உற்பத்தி இரட்டைப்பாகும் என்று அறிவிப்பு**

- தங்க மசாலா என்று அழைக்கப்படும் மஞ்சள் இந்திய விவசாயத்திற்கு இன்றியமையாததாகும்.
- உலகின் மிகப்பெரிய மஞ்சள் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் மற்றும் ஏற்றுமதியாளராக இந்தியா உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் ஏற்றுமதியை ஒரு பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்துவதை இந்த தேசிய மஞ்சள் வாரியம் நோக்கமாகக் கொண்டது.
- தேசிய மஞ்சள் வாரியம் அமைந்துள்ள இடம் – Nizamabad, Telangana

**ஸ்வமித்வ திட்டம்**

✓ கிராமப்புறத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் சொத்து அட்டைகள் வழங்குதல்

✓ கிராமப்புற மக்கள் தங்களின் குடியிருப்பு சொத்துகளை ஆவணப்படுத்தும் உரிமையை வழங்குவதோடு சொத்துக்களை பொருளாதார ரீதியில் பயன்படுத்த உதவும் நோக்கில் மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் இத்திட்டம் 2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**உலகப் பொருளாதார மன்ற கூட்டம்**

- நடைபெற்ற இடம் ஸ்விட்சர்லாந்து நாடு டாவோஸ் நகர்.
- இதில் தமிழகத்திலிருந்து தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்பு.

**யாழ்ப்பாணம் கலாச்சார மையத்திற்கு திருவள்ளுவர் பெயர்**

✓ இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள கலாச்சார மையத்திற்கு தமிழ் புலவர் திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

✓ 12 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்ட இந்த கலாச்சார மையத்திற்கு பிரதமர் மோடி கடந்த 2015இல் இலங்கை பயணத்தின் போது அடிக்கல் நாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்திய எரிசக்திவாரம் 2025**

1. நடைபெற்ற இடம் புதுடெல்லி
2. அடுத்த ஐந்து ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை எட்டுவதற்கு ஏற்ப நாட்டின் எரிசக்தி துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன என்று பிரதமர் அறிவிப்பு
3. 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி உற்பத்தி திறன் இந்திய ரயில்வேயில் கரியமில வாயு உமிழ்வு இல்லாத நிலையை அடைதல் ஆண்டுதோறும் 50 லட்சம் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி உள்ளிட்ட இலக்குகள் எட்டப்படும்
4. நாட்டின் வண்டல் படுக்கைகளில் ஏராளமான ஹைட்ரோ கார்பன் வளங்கள் உள்ளன.

**இந்திய மாநில ஆய்வுத்துறை**

- தற்போது 150ஆவது நிறுவன தினத்தை கொண்டாடியது. (14. ஜனவரி 2025)

- 1864 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் பேரழிவு, அடுத்தடுத்து ஏற்பட்ட (1866 மற்றும் 1871 ) பருவ மழை தோல்விகளுக்கு பின்னர், 1875 ஆம் ஆண்டில் இந்திய வானிலை ஆய்வு துறை தொடங்கப்பட்டது. (14 ஜனவரி 1875)

**மிஷன் மௌசம்**

- நாட்டை வானிலை சூழலுக்கு தயாராகவும், பருவ நிலைக்கு உகந்த நாடாக மாற்றும் நோக்கத்துடன் 'மிஷன் மௌசம்' (வானிலை இயக்கம்) திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார்
- வானிலை மாற்றங்களுக்கு எதிரான தாங்குத்திறன் மற்றும் பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைத்தல் குறித்த இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தொலைநோக்கு 2047 ஆவணத்தையும் பிரதமர் வெளியிட்டார்
- மிஷன் மௌசம் என்பது அதிநவீன வானிலை கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் அமைப்புகளை உருவாக்குவதற்கான இயக்கம்.

**எட்டாவது ஊதிய குழு அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம் ஓய்வூதிய தாரர்களுக்கான படிநிலை மாற்றியமைப்பதற்காக எட்டாவது ஊதிய குழு அமைக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது.
- ஏழாவது ஊதியக்குழு 2016 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது அதன் பதவிக்காலம் 2026 இல் முடிவடைய உள்ள நிலையில் இந்த முடிவை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.
- உலக அளவில் புத்தாக்க நிறுவனங்களுக்கு உகந்த சூழல் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது.
- நாட்டில் புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான வலுவான சூழலை கட்டமைக்கும் நோக்கில் ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் கடந்த 2016 ஜனவரி 16ஆம் தேதி தொடங்கப்பட்டது.
- திருப்புமுனி திட்டமான ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் தொழில் முனைவு மற்றும் முன்னேற்றத்தை மறு வரையறை செய்திருக்கிறது.
- கடந்த 9 ஆண்டுகளில் இத்திட்டத்தால் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எண்ணற்ற இளைஞர்கள் புதுமையான சிந்தனைகள், புத்தாக்க நிறுவனங்களாக உருபெற்றுள்ளன.

**சமீபத்திய உச்ச நீதிமன்ற தீர்ப்புகள்**

மத்திய அரசின் அதிகாரிகள் மீது வழக்குப் பதிய சிபிஐக்கு மாநில அரசின் அனுமதி தேவையில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- மாநில அரசு அதிகார வரம்பினுள் இயங்கும் பல்வேறு துறைகளில் நியமிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசு அதிகாரிகள் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய மாநில அரசின் முன் அனுமதியை சிபிஐ (மத்திய குற்றப் புலனாய்வு பிரிவு) பெறத் தேவை யில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது
- குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர்கள் மத்திய அரசு ஊழியர்கள் என்பதோடு அவர்கள் புரிந்து குற்றம் மத்திய சட்டத்தின் கீழ் வரும் நிலையில் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய மாநில அரசின் அனுமதி சிபிஐ பெற அவசியம் இல்லை.

  கல்வி நிறுவனங்களில் ஜாதிய பாகுபாடு தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உச்ச நீதிமன்றம் அறிவிப்பு.

- IIT உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தற்கொலை தொடர்கதை ஆகி வருகிறது.
- தமிழகத்தில் கல்வி நிறுவனங்களில் ஏற்படும் ஜாதிய பாகுபாடு குறித்து ஆய்வு செய்ய நீதிபதி சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.
- சட்டப்பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக பாகுபாடு காட்டுவதைத் தடை செய்கிறது.

வயதான காலத்தில் பிள்ளைகள் கவனிக்காவிட்டால் பெற்றோர் வழங்கிய சொத்துக்கள் மீதான தான பத்திரத்தை ரத்து செய்யலாம் என உச்ச நீதிமன்றம் அறிவிப்பு.

★ மத்திய பிரதேசம் மாநிலத்தை சேர்ந்த பெண் ஒருவர் தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது.

★ பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு சட்டம் (Maintenance and Welfare of Parents and Senior Citizens Act, 2007) என்பது இந்திய நாடாளுமன்றத்தால் 2007–ல் இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

# 6. நியமனங்கள்

**தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக முருகானந்தம் பொறுப்பேற்றார்**

- இவர் தமிழ்நாட்டின் 50வது தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 49 வது தலைமை செயலாளர் சிவ்தாஸ்மீனா.

**ராணுவ மருத்துவ சேவைகள் பிரிவின் முதல் பெண் தலைமை இயக்குனராக சாதனா சக்சேனா பதவியேற்பு**

- ராணுவ மருத்துவ சேவைகள் பிரிவின் முதல் பெண் தலைமை இயக்குனராக லெப்டினன்ட் ஜெனரல் சாதனா சக்சேனா நாயர் பதவியேற்றார்.

**எல்லை பாதுகாப்பு படையின் புதிய தலைமை இயக்குனராக தல்ஜித் சிங் சௌதரி நியமனம்**

- முன்னாள் எல்லை பாதுகாப்பு படையின் டி.ஜி நிதின் அகர்வால் தனது பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டவை தொடர்ந்து இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**மத்திய எல்லை பாதுகாப்பு படை**

- 1 December 1965 உருவாக்கப்பட்டது
- உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய ஆயுதமேந்திய காவல்துறை ஆகும்.
- பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷுடனான இந்தியாவின் எல்லைகளை பாதுகாக்கும் பொறுப்பு இது.

**மத்திய அமைச்சரவை செயலராக டிவி சோமநாதன் பொறுப்பேற்பு**

- இவருக்கு முன் இந்த பதவியில் இருந்தவர் – ராஜீவ் கௌபா.

**CISF (Central Industrial Security Force) மத்திய தொழில் பாதுகாப்பு படையின் தலைமை இயக்குனராக – ராஜ்விந்தர் சிங் பட்டீ நியமனம்**

**CISF பற்றி**

- 1983 ஜூன் 15ல் துவக்கப்பட்டது
- தலைமையிடம் டெல்லி
- இந்திய அரசின் மத்திய காவல் ஆயுதப் படைகளில் ஒன்றாகும்.
- இது இந்தியாவின் முக்கிய தொழில் நிலையங்களை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட துணை இராணுவப்படையாகும்.

**புதுச்சேரியில் 33வது துணை நிலைய ஆளுநராக கைலாஷ் நாதன் பதவி ஏற்பு**

- புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து 1962 ஆம் ஆண்டு இந்தியாவுடன் இணைந்தது
- பதவிப்பிரமாணம் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
- நியமனம் குடியரசுத் தலைவர்

**அமெரிக்காவுக்கான இந்திய தூதராக வினய் குவாத்ரா பொறுப்பேற்பு**

- இவருக்கு முன் இந்தப் பதவியில் இருந்த தரன்ஜித் சிங் சாந்து இருந்தார்

**ஆர்த்தி சரின் குழு**

- நாடு முழுவதும் மருத்துவர்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை வகுக்க பத்து பேர் கொண்ட குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது
- மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதுநிலைப் பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இந்த குழு அமைக்கப்பட்டது
- இந்தக் குழுவில் மொத்தம் 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் (1 தலைவர் + 9 உறுப்பினர்கள்)

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் புதிய தலைவராக எஸ் கே பிரபாகர் பொறுப்பேற்றார்**

**ICC தலைவராக ஜெய்ஷா தேர்வு**

- ஐ சி சி வரலாற்றிலேயே அதன் இளம் தலைவராக பொறுப்பேற்றார் ஜெய்ஷா (35 வயது)
- இவர் ஏற்கனவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (BCCI) செயலராக உள்ளார்
- ஐ சி சி தலைவர் பொறுப்பிற்கு வரும் ஐந்தாவது இந்தியர் ஆவார்.

1. ஜக்மோகன் டால்மியா
2. சரத் பவார்

3. என் ஸ்ரீனிவாசன்
4. சஷாங்க் மனோகர்

**ICC பற்றி (Indian cricket council)**

- இது 1909 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா பிரதிநிதிகளால் இம்பீரியல் கிரிக்கெட் மாநாட்டாக நிறுவப்பட்டது.
- 1965 இல், அமைப்பு சர்வதேச கிரிக்கெட் மாநாடு என மறுபெயரிடப்பட்டது மற்றும் 1987 இல் அதன் தற்போதைய பெயரை ஏற்றுக்கொண்டது.
- ஐசிசி அதன் தலைமையகம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துபாயில் உள்ளது.

**I.G. பவானிஸ்வரி குழு**

- பள்ளி மாணவிகள் பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை விரைவுப்படுத்த சிறப்பு புலனாய்வு குழுவை தமிழக அரசு அமைத்தது.
- கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளியை போன்று மேலும் சில பள்ளிகள் கல்லூரிகளில் போலி பயிற்றுநர்களை கொண்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன அங்கும் பாலியல் அத்துமீறல்கள் நடந்துள்ளனவா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

**மதிய உள்துறை செயலராக கோவிந்த் மோகன் பொறுப்பேற்பு**

- இதற்கு முன் இந்த பதவியில் அஜய்குமார் பல்லா இருந்தார்.

**உலக அளவில் மிகவும் கடினமான விளையாட்டுப் போட்டியாக கருதப்படும் சர்வதேச “அயர்ன்மேன்டிரையத்லான்” சவாலை எல்லை பாதுகாப்பு படை (BSF) வீரர் ஹரிஷ் கல்ஜா வெற்றி கரமாக நிறைவு செய்தார்.**

- இதன் மூலம் இந்த சாதனையை படைத்த முதல் மத்திய ஆயுத காவல் படை வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

  இந்திய விமானப்படையின் 28 வது தலைமை தளபதியாக அமர் பரித் சிங் பதவியேற்றார்

- இவர் இதற்கு முன்பு இந்திய விமானப்படையின் துணைத் தலைவராக இருந்தார்.
- இவருக்கு முன் 27வது விமானப்படையின் தலைமை தளபதியாக இருந்தவர் ஏர் மார்ஷல் விவேக் ராம் சவுத்ரி.

  சென்னை உயர் நீதிமன்றத்தின் 53 வது தலைமை நீதிபதியாக கே ஆர் ஸ்ரீராம் பதவியேற்றார்

- 43 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு தமிழ் பேசும் தலைமை நீதிபதி வந்துள்ளார்.
- நியமனம் – குடியரசு தலைவர்
- பதவி பிரமாணம் மற்றும் ரகசிய காப்பு பிரமாணம் – ஆளுநர்

**23 வது சட்ட ஆணையம்**

- பதவிக்காலம் – மூன்று ஆண்டுகள் (2027 ஆகஸ்ட் 31 வரை)
- இந்த ஆணையத்தில் ஒரு தலைவர் மற்றும் ஒரு உறுப்பினர் செயலாளர் உட்பட நான்கு முழு நேர உறுப்பினர்களும் இருப்பர்.
- இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளாக அல்லது பிறநிலையில் பணியாற்றும் நபர்களாக இருக்கலாம்.
- பொதுவாக இந்த ஆணையத்தின் தலைவராக ஒய்வு பெற்ற நீதிபதியே நியமிக்கப்படுவார்.
- 22 ஆவது சட்ட ஆணையத்தின் தலைவர் – ரிது ராஜ் அவஸ்தி.
- 23 ஆவது சட்ட ஆணையத்தின் தலைவர் – Dinesh mageshwari
- சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட ஆணையத்தின் தலைவராக எம்.சி. செடல்வாட் (M.C. Setalvad) இருந்தார்.
- அவர் இந்தியாவின் முதல் அட்டர்னி ஜெனரலாகவும் இருந்தார். சட்ட ஆணையம் 1955 இல் நிறுவப்பட்டது.

**இலங்கையின் புதிய அதிபராக – அனுரா குமார திசநாயகே தேர்வு செய்யப்பட்டார்**

- இலங்கைத் தலைநகர் – கொழும்பு
- இலங்கை பிரதமர் – Harini Amarasuriya

**ICC தலைவராக ஜெய்ஷா நியமனம்**

- இவர் BCCI தலைவராக உள்ளார்
- இளம் வயதிலேயே மிசிசிதலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

**பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக – மைக்கேல் பாரனியர் நியமனம்**

- பிரான்ஸ் நாட்டின் அதிபர் – இம்மானுவேல் மேக்ரான்.

இந்தியத் தொல்லியல் துறை இயக்குனராக – அமர்நாத் ராமகிருஷ்ணா நியமனம்.

இந்தியாவின் புதிய நிதிச் செயலாளர் – துஹின் காந்தா பாண்டே

**ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலின் தலைவர் – ரந்தீர் சிங்**

- இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதல் இந்தியர் இவரே.

அல்ஜீரியா நாட்டின் அதிபர் – அப்தெல் மடஜித் டேபிபோர்ன்.

ரயில்வே வாரியத்தின் தற்போதைய தலைவர் – சதீஷ் குமார் நியமனம்.

- இதன் மூலம் ரயில்வே வாரிய தலைவராக நியமிக்கப்பட்ட முதல் பட்டியலினத்தவர் என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

**பொதுத்துறை நிறுவனமான பரோடா வங்கியின் வளம்பரத் தூதராக சச்சின் டெண்டுல்கர் நியமணம்**

- தேர்தல் ஆணையத்தின் விளம்பர தூதுர் – சச்சின் டெண்டுல்கர்.
- தேர்தல் ஆணையத்தின் விளம்பர தூதர் (பெண்) – ஷீத்தல் தேவி (மாற்றுத்திறனாளி வில்வித்தை வீராங்கனை)

தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையரான மிருத்யுஞ்சய் குமார் நாராயணனின் பதவிக்காலம் எந்த ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது? 2026

- இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
- இதன்படி தேசிய மக்கள் தொகை பதிவேடு புதுப்பிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு 2020 செப்டம்பரில் தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது.
- ஆனால் கரோனா பெருந்துட்டின் காரணமாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.
- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பானது – பதினைந்தாவது மக்கள் தொகை கணக்கெடுப்பாகும்.
- தற்போது 16 வது மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கான பணி நடைபெற்று வருகிறது.

எஸ்சி., எஸ்டி. மாநில ஆணைய தலைவர் நியமனம் நீதிபதி தமிழ்வாணன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் தலைவராக ஒய்வு பெற்ற நீதிபதி எஸ்.தமிழ்வாணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- அவர் 3 ஆண்டுகளுக்கு தலைவராகச் செயல்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடலோரக் காவல் படை தலைமை இயக்குநராக டி.ஜி.பரமேஷ் சிவமணி பொறுப்பேற்பு**

- இந்திய கடலோரக் காவல்படையின் 26–ஆவது தலைமை இயக்குநராக டி.ஜி.பரமேஷ் சிவமணி பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது கட்டுப்பாட்டில் கடலோர ரோந்துக் கப்பல்கள் 'சமர்' மற்றும் 'விஸ்வாஸ்த்' உள்ளிட்ட அனைத்து முக்கிய கப்பல்களும் இடம்பெற்றுள்ளன.

**மகளிர் ஆணைய தலைவராக விஜயா கிஷோர் நியமனம் தேசிய மகளிர் ஆணைய சட்டத்தின் 3வது பிரிவின் கீழ் இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.**

- விஜயா கிஷோர் ராஹத்கர் 3 ஆண்டு காலம் அல்லது 65 வயது இதில் எது முன்போ அதுவரைபதவியில் இருப்பார்.
- விஜயாராஹ்த்கர் இதற்கு முன் மகராஷ்டிரா மாநில மகளிர் ஆணையத்தின் தலைவராகவும், அவுரங்காபாத் மேயராகவும் பதவி வகித்துள்ளார்.
- விஜயா கிஷோர்ர ஹத்கர் தேசிய மகளிர் ஆணையத்தின் (NCW) ஒன்பதாவது தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய மகளிர் ஆணையச் சட்டம், 1990ன்பிரிவு 3ன் கீழ் செய்யப்பட்ட இந்த நியமனம் மூன்று ஆண்டுகளுக்கு அல்லது அவர் 65 வயதை எட்டும் வரை, இதில் எது முந்தையதோ அது வரை இருக்கும்.
- NCW என்பது ஒரு சட்டபூர்வ அமைப்பாகும், இது பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக பணியாற்ற அதிகாரம் பெற்றுள்ளது. பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு மற்றும் சட்ட பாதுகாப்புகளை மதிப்பாய்வு செய்வது இதன் பணிகளில் அடங்கும்.

**இந்திய கடலோரக் காவல் படையின் 26 ஆவது தலைமை இயக்குனநர் – டி ஜி பரமேஷ் சிவமணி**

- 25 ஆவது கடலோர காவல் படை தலைமை இயக்குனராக இருந்தவர் ராகேஷ் பால்.
- இந்திய கடலோர காவல்படை (ICG) என்பது இந்தியாவின் கடல்சார் சட்ட அமலாக்க மற்றும் தேடல் மற்றும் மீட்பு நிறுவனம் ஆகும்.

- இது 1 பிப்ரவரி 1977 இல் தொடங்கப்பட்டது மற்றும் 18 ஆகஸ்ட் 1978 அன்று இந்திய நாடாளுமன்றத்தின் கடலோர காவல்படை சட்டம், 1978 மூலம் முறையாக நிறுவப்பட்டது .
- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- இந்திய கடலோர காவல் படையின் முதல் தலைமை இயக்குனர் – Vice Admiral V. A. Kamath

**ஹரியானா மாநிலத்தின் முதல்வர் – நாயப் சிங் சைனி**

- ஹரியானா மாநிலத்தில் உள்ள மொத்த சட்டமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை 90
- இவர் இரண்டாவது முறையாக மாநில முதல்வராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்
- ஹரியானா மாநிலத்தின் ஆளுநர் – Bandaru Dattatreya

**இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மைய தேசிய தூதராக ராஸ்மிகா மந்தனா நியமணம்**

- நியமனம் – மத்திய உள்துறை அமைச்சகம்.

**இந்தோனேசியாவின் அதிபராக பொறுப்பேற்றவர் – பிரபுவோ சுபியாந்தோ**

- இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தா
- உலகில் அதிகம் முஸ்லிம்களைக் கொண்ட நாடு இந்தோனேசியா

**தேசிய சட்ட உதவி ஆணைய செயல் தலைவராக நீதிபதி பி ஆர் கவாய் நியமனம் செய்யப்பட்டுள்ளார்**

- தேசிய சட்ட உதவி ஆணையத்தின் புரவலர் – தலைவர் பதவியை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வகிக்கும் நிலையில் அதன் செயல் தலைவராக தலைமை நீதிபதிக்கு அடுத்து உள்ள மூத்த நீதிபதி நியமிக்கப்படுவார்
- அதன்படி தற்போது அதன் புரவலர் – தலைவராக தலைமை நீதிபதி ஜி. சீ. சந்திர சூட் இருக்கிறார்
- செயல் தலைவராக சஞ்சீவ் கண்ணா உள்ளார்
- தற்போது தேசிய சட்ட உதவி ஆணையத்தின் புரவலர் – தலைவர் – சஞ்சீவ் கண்ணா
- தேசிய சட்ட உதவி ஆணையத்தின் தற்போதைய செயல் தலைவர் பி ஆர் கவாய்
- சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதை தேசிய சட்ட உதவி ஆணையம் தனது பணியாக கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தென்னாப்பிரிக்காவின் புதிய அதிபர் – டுமா போகா

**கே.ஜி. பாலகிருஷ்ணன் (உச்ச நீதிமன்றத்தின் முதல் பட்டியலின தலைமை நீதிபதி)**

- இந்த ஆணையம் 2022 அக்டோபர் ஆறாம் தேதி அமைக்கப்பட்டது
- இந்த ஆணையத்தின் பதவிக்காலம் மேலும் ஓர் ஆண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது
- சீக்கிய மதம் புத்த மதங்களைத் தவிர பிற மதங்களுக்கு மாறிய நபர்களுக்கான உரிமைகள் சமூக நீதி குறித்தும் அவர்களுக்கு பட்டியல் இனத்தவர் அங்கீகாரம் வழங்குவது குறித்தும் இந்த ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது
- கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களின் பட்டியல் இனத்தவர் பிரிவில் சேர்க்கப்படாதவருக்கு இந்த அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக சமூகவியலாளர்கள் வரலாற்றாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் மதம் மாறியதால் சாதி அடிப்படையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஆணையம் கேட்டு அறிந்து வருகிறது

**தமிழ்நாட்டின் தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமனம் – அர்ச்சனா பட்நாயக்**

- ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர்.
- தமிழகத்தின் முதல் பெண் தலைமை தேர்தல் அதிகாரி ஆவார்.
- 1948 ஆம் ஆண்டு தலைமை தேர்தல் அதிகாரி பொறுப்பு உருவாக்கப்பட்டது.
- மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரியை நியமனம் செய்பவர் – ஆளுநர்.
- இந்தியாவில் உள்ள மாநில தேர்தல் ஆணையம், நகராட்சிகள் , மாநகராட்சிகள் , பஞ்சாயத்துகள் போன்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட பிற தேர்தல்களுக்குப் பொறுப்பாகும்.
- பதவியின் சுயாட்சியை உறுதி செய்வதற்காக மாநில தேர்தல் ஆணையரை பதவியில் இருந்து நீக்க முடியாது.
- தமிழ்நாட்டின் முதல் தலைமை தேர்தல் அதிகாரி – S. வெங்கடேஸ்வரன்.

**தேசிய சட்ட உதவிகள் ஆணையத்தின் தலைவராக நீதிபதி பி.ஆர்.கவாய் நியமனம்**

**நீதிபதி பி ஆர் கவாய்**

- தேசிய சட்ட உதவி ஆணையத்தின் புரவலர் – தலைவர் பதவியை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வகிக்கும் நிலையில் அதன் செயல் தலைவராக தலைமை நீதிபதிக்கு அடுத்து உள்ள மூத்த நீதிபதி நியமிக்கப்படுவார்.
- அதன்படி தற்போது அதன் புரவலர் – தலைவராக தலைமை நீதிபதி T. Y. சந்திர சூட் இருக்கிறார்.
- செயல் தலைவராக சஞ்சீவ் கண்ணா உள்ளார்.
- தற்போது தேசிய சட்ட உதவி ஆணையத்தின் புரவலர் – தலைவர் – சஞ்சீவ் கண்ணா.
- தேசிய சட்ட உதவி ஆணையத்தின் தற்போதைய செயல் தலைவர் பி ஆர் கவாய்.
- சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதை தேசிய சட்ட உதவி ஆணையம் தனது பணியாக கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**இந்திய உச்சநீதிமன்றத்தின் 51வது தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா நியமனம்**

- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமிப்பவர் – குடியரசுத் தலைவர்
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பதவிப்பிரமாணம் மற்றும் ரகசிய காப்பு பிரமாணம் செய்து வைப்பவர் – குடியரசு தலைவர்
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஓய்வு பெறும் வயது 65
- உச்ச நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை தலைமை நீதிபதி உட்பட 35
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 124வது பிரிவு இந்திய உச்ச நீதிமன்றத்தை நிறுவி, அதில் இந்தியாவின் தலைமை நீதிபதியும் இருக்க வேண்டும் என்று கூறுகிறது
- இவர் தனது ராஜினாமா கடிதத்தை குடியரசு தலைவரிடம் வழங்குவார்

**கே.இராதாகிருஷ்ணன் குழு**

1. ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற சாத்தியக்கூறுகளை ஆராய இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது
2. தேசிய கல்விக் கொள்கை 2020 உருவாக்க கஸ்தூரி ரங்கன் தலைமையில் குழு அமைக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.
3. ரங்கராஜன் கமிட்டி என்பது 2012 இல் இந்திய அரசால் நாட்டில் வறுமை எவ்வாறு அளவிடப்படுகிறது என்பதை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிபுணர் குழுவாகும்.

அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்களாக இருவர் நியமனம் மூத்த வழக்குரைஞர்களான கே.சந்திரமோகன், எம்.சுரேஷ்குமார் ஆகியோர் சென்னை உயர்நீதி மன்றத்தின் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, கே.சஞ்சய் மூர்த்தியை இந்தியாவின் புதிய தலைமைக் கணக்குத் தணிக்கையாளராக (CAG) நியமித்துள்ளார். 1989ஆம் ஆண்டு பேட்ச் ஐஏஎஸ் அதிகாரியான மூர்த்தி, தற்போது உயர்கல்வித்துறையின் செயலாளராக உள்ளார்.
- இவர் ஆந்திரப் பிரதேச கேடரைச் சேர்ந்தவர்.கே சஞ்சய் மூர்த்தி CAG பாத்திரத்தை ஏற்கிறார்
- அவர் பதவியேற்ற நாளிலிருந்து. கிரிஷ் சந்திர முர்முவுக்குப் பதிலாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஹேமந்த் சோரன் ஜார்கண்ட் மாநில முதல்வராக நியமிக்கப்பட்டார்**

- ஹேமந்த் சோரன் ஜார்கண்டின் தமது நான்காவது முறை முதல்வராகப் பொறுப்பேற்றார்,
- தலைநகர் ராஞ்சியில் ஆளுநர் சந்தோஷ் குமார் கங்காவரால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**கிழக்கு ஐரோப்பாவை சேர்ந்த மாள்டோவில் அதிபராக மாயா சந்து தேர்வு**

- நான்கு புறமும் நிலத்தால் சூழப்பட்ட மால்கோவா நாடு முன்னாள் சோவியத் யூனியனின் உறுப்பு நாடுகளில் ஒன்று.

**அமெரிக்காவின் 47 வது அதிபராக டொனால்ட் டிரம்ப் தேர்வு**

- இவர் குடியரசு கட்சியை சேர்ந்தவர்.
- அமெரிக்காவில் இரட்டை கட்சி ஆட்சி முறை நடைமுறையில் உள்ளது.
- அமெரிக்காவில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அமெரிக்க அதிபருக்கான தேர்தல் நடைபெறும்.
- அதிபராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் இருமுறை மட்டுமே அதிபராக முடியும்.

- அமெரிக்காவில் 46 ஆவது அதிபராக இருந்தவர் ஜோ பைடன்.
- அமெரிக்காவின் மிகவும் வயதான அதிபர் டொனால்ட் டிரம்ப்.
- அமெரிக்காவின் தற்போதைய துணை அதிபர் ஜே.டி.வேன்ஸ்.
- அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு முதல் பெண் தலைமைச் செயலாளராக சூசன் வைல்ஸ் ஐ அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**மகாராஷ்டிரா முதல்வராக பட்னாவிஸ் பதவியேற்பு**

- மகாராஷ்டிராவில் உள்ள மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை 288.
- மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன்.
- துணை முதல்வர்கள் – அஜித் பவார், ஏக்னாத் ஷிண்டே.

**பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் அமைப்பின் தலைவர்**

டாக்டர் ஜெய்தீர்த் ராகவேந்திர ஜோஷி சமீபத்தில் பிரம்மோஸ் வான்வெளி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார், இது உலகின் மிக வுயர்ந்த மிகவேகச் சொதுக்கு ஏவுகணை அமைப்பிற்கு பெயர் பெற்றது. இவரது நியமனம் இந்தியாவின் பாதுகாப்பு தொழில்நுட்ப துறையில் ஒரு முக்கிய நகர்வாகும் டாக்டர் ஜோஷிக்கு ஏவுகணை தொழில்நுட்பத்தில் 30 வருடங்கள் அனுபவம் உள்ளது.

**இஸ்ரோவின் 11 வது தலைவர் நியமனம்**

- இஸ்ரோ அமைப்பின் பதினோராவது தலைவராக வி. நாராயணன் நியமிக்கப்பட்டார்.
- இவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்.
- இஸ்ரோவின் பத்தாவது தலைவர் சோம்நாத்.
- இவர் இந்திய அரசாங்கத்தின் செயலாளராகவும், இந்தியப் பிரதமருக்கு நேரடியாகத் கருத்து தெரிவிக்கும் விண்வெளித் துறையின் (DoS) நிர்வாகியாகவும் உள்ளார்.
- விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்தியத் தேசியக் குழு (INCOSPAR) 1962–ல் அணு சக்தித்துறையின் (DAE) கீழ் நிறுவப்பட்டது.
- இதன் தலைவராக விக்ரம் சாராபாய் ஆவார். பின்னர்
- 1969–ல் இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் என மாற்றப்பட்டது.
- 1972ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம் விண்வெளி ஆணையம் மற்றும் விண்வெளித் துறையினை அமைத்து விண்வெளித் துறையின் கீழ் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தினைக் கொண்டு வந்தது

**ஆளுநர்கள் பதவியேற்பு**

- மணிப்பூரின் 19 ஆவது ஆளுநராக – அஜய் குமார் பல்லா பதவியேற்றார்.
- ஒடிசா மாநிலத்தின் ஆளுநராக ஹரிபாபு கம்பம்பட்டி பதவியேற்றார்.
- ஆளுநர்களை நியமிப்பவர் – குடியரசு தலைவர்.
- பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் – உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி.

  உச்ச நீதிமன்ற உச்ச நீதிமன்ற நீதிபதியாக கே. வினோத் சந்திரன் பதவியேற்பு.
- இவருக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.
- உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் தற்போதைய எண்ணிக்கை 33 (அனுமதிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 34).

**CRPF தலைமை இயக்குனராக ஞானேந்திர பிரதாப் சிங் நியமனம்**

❖ மத்திய ரிசர்வ் காவல் படையின் தலைமை இயக்குனராக அசாம் காவல் துறை தலைவர் யார் என்ற பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

**அமெரிக்காவின் 47வது அதிபராக டொனால்ட் டிரம்ப பதவியேற்பு**

- துணை அதிபராக ஜே டி வான்சூம் பதவியேற்றார்.
- அமெரிக்காவின் 46வது அதிபர் ஜோ பிரைடல்.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

**விண்வெளியில் முளைத்த காராமணி விதைகள்**

- விண்வெளிக்கு அனுப்பப்பட்ட காராமணி விதைகள் முளைத்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தெரிவித்தது.
- 30 டிசம்பர் 2024 ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஸ்பேடெக்ஸ் ஏ.பி. விண்கலன்களை பிஎஸ்எல்வி சி–30 ராக்கெட் மூலம் இஸ்ரோ ஏவியது
- இந்த விண்கலம் புவி வட்ட பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது
- ராக்கெட்டில் இடம்பெற்றுள்ள பிஎஸ்எல்வி புவி வட்ட பரிசோதனை அலகு–4 மூலம் விண்வெளிக்கு எட்டு காராமணி விதைகளை இஸ்ரோ அனுப்பி வைத்தது.

# 7. புவியியல் சார்ந்த நடப்பு நிகழ்வுகள்

ஒரிசா மாநிலத்தில் தங்க படிமங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

- ஒடிசாவின் பல்வேறு மாவட்டங்களில் தங்க படிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக ஒடிசாவின் உருக்கு மற்றும் சுரங்க துறை அமைச்சர் பிபூதி பூசன் தெரிவிப்பு.

**அம்ருத் சரோவர் திட்டம்**

- நோக்கம் – நாடு முழுவதும் சுமார் 60 ஆயிரம் புதிய நீர்நிலைகள் கட்டமைப்பது.

  அடல் புஜல், ஜல் சக்தி அபியான், catch the rain போன்ற நீர் பாதுகாப்பு மக்கள் இயக்கமாக மாறி வருகிறது.

**நீர் சேமிப்பு மக்களின் பங்கேற்பு திட்டம்**

- குஜராத் மாநிலத்தில் தொடங்கப்பட்டது.
- நீர் சேமிப்பு மக்களின் பங்கேற்பு என்ற திட்டம் பிரதமர் மோடி துவங்கி வைத்தார்.
- உலகின் நன்னீர் ஆதாரங்களில் வெறும் நான்கு சதவீதம் மட்டுமே இந்தியாவில் உள்ளது. எனவே பயன்பாடு குறைப்பு மறு பயன்பாடு புதுப்பிப்பு மறுசுழற்சி என்ற தாரக மந்திரத்தை மக்கள் ஏற்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

**ஜல்ஜீவன் திட்டம்**

- நோக்கம் – அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் சுகாதாரமான குடிநீர் வழங்கும் திட்டம்

ஃபெஞ்சல் புயல் பாதிப்பு தீவிர இயற்கை பேரிடராக தமிழக அரசு அறிவிப்பு

- வங்க கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் காரணமாக விழுப்புரம் திருவண்ணாமலை கள்ளக்குறிச்சி கிருஷ்ணகிரி தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் அதிக கன மழை பெய்தது.
- தமிழக அரசு தீவிர இயற்கை பேரிடராக அறி வித்ததால் பேரிடர் நிதி மட்டுமல்லாமல் மற்ற நிதிகளையும் சீரமைப்பு பணிகளுக்காக பயன்படுத்த முடியும்.

# 8. பொருளாதாரம்

இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி – 8.2

- 2024–ம் நிதி ஆண்டின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP)

8. முதலிடம் தெலுங்கானா (9.2)
9. இரண்டாம் இடம் தமிழ்நாடு (8.2) (தமிழ்நாட்டில் அதிக பங்களிப்பை கொண்ட துறை சேவை துறை 52%)
10. மூன்றாம் இடம் ராஜஸ்தான்

**சாதக வரி "பூஜ்ஜியம்" எனக் குறைத்துள்ளது மத்திய அரசு**

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீதான சாதக வரியை டன்னுக்கு பூஜ்ஜியம் என குறைத்துள்ளது
- இந்த வரி சிறப்பு கூடுதல் கலால் வரி வடிவில் விதிக்கப்படுகிறது மற்றும் இரண்டு வாரங்களில் சராசரி எண்ணை விலைகளின் அடிப்படையில் இரு வாரங்களுக்கு ஒரு முறை அறிவிக்கப்படுகிறது.
- சாதக வரி இந்தியாவில் முதன்முதலாக ஜூலை 1.2022 அன்று சாதக லாப வரிகளை விதித்தது.

**இந்தியாவின் வளர்ச்சி 7% – உலக வங்கி கணிப்பு**

11. நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என உலக வங்கி கணித்துள்ளது.
12. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.2% இருக்கும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**அந்நிய நேரடி முதலீடுகளை கவரும் மாநில வரிசை**

- முதலிடம் – மகாராஷ்டிரா (70,795 கோடி)
- இரண்டாவது – கர்நாடகா
- மூன்றாவது – டெல்லி
- நான்காவது தெலுங்கானா
- ஐந்தாவது குஜராத்
- ஆறாவது தமிழ்நாடு

உலகளவில் 2030 ஆம் ஆண்டிற்குள் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாற உள்ளது – S & B நிறுவனம் கணிப்பு

- தற்போது உலக அளவில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- உலக அளவில் முதல் இடத்தில் உள்ள நாடு அமெரிக்கா.

**புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியில் அகில இந்திய அளவில் தர வரிசை**

- முதலிடம் – கர்நாடகா
- இரண்டாமிடம் – தமிழ்நாடு

**இந்திய கோடீஸ்வரர்கள் பட்டியல்**

13. வெளியீடு – போர்ப்ஸ் Forbes (அமெரிக்கா)
14. முதலிடம் – முகேஷ் அம்பானி
15. இரண்டாம் இடம் – கௌதம் அதானி
16. மூன்றாமிடம் – சாவித்திரி ஜின்டால்

முத்ரா திட்டத்தின் கடன் வரம்பு 20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**முத்ரா திட்டம் (Micro Units Development & Refinance Agency Ltd)**

- தொடக்கம் – 8 ஏப்ரல் 2015
- அமைச்சகம் – நிதி அமைச்சகம்
- நோக்கம் – பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவின் (PMMY) முதன்மை நோக்கம் நிதி மற்றும் பிற ஆதரவை வழங்குவதன் மூலம் இந்தியாவின் குறு நிறுவனத் துறையை மேம்படுத்துவதாகும்
- 2024–25 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இல் அறிவிக்கப்பட்டது
- இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள்
- சிஷு – ரூ.50 ஆயிரம் வரை
- கிஷோர் – ரூ. 50,000 முதல் ஐந்து லட்சம் வரை
- தருண் – ரூ. 10 இலட்சம்

நடப்பு நிதியாண்டில் இந்தியா 7% வளர்ச்சி அடையும் – பன்னாட்டு நிதி நிறுவனம் – நடப்பு நிதியாண்டில் (மார்ச் 31, 2025 வரை) இந்தியா 7% வளர்ச்சி அடையும் என்றும், அடுத்த நிதியாண்டில் (2025–26) 6.5% வளர்ச்சி அடையும் என்றும் பன்னாட்டு நிதி நிறுவனம் எதிர்பார்க்கிறது.

- 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளில் உலக உற்பத்தி 3.2% வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது
- 2023ல் இந்தியாவின் 8.2% வளர்ச்சியிலிருந்து இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா இந்த ஆண்டு 2.8% மற்றும் அடுத்த ஆண்டு 2.2% வளர்ச்சி அடையும் என கணிக்கப்பட்டுள்ளது

**தமிழ்நாட்டின் GSDP 2023-23**

- 2022–23 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஆனது முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 14.16% அதிகரித்துள்ளது.
- இது முதன்மையாக தொழில்துறை மற்றும் சேவை துறைகளால் ஏற்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி யானது தேசிய சராசரியை விட 56% அதிகமாக இருந்தது.

# 9. பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி

**உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது அணு உலை உற்பத்தியை தொடங்கியது**

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது 700 மெகாவாட் அணு உலை குஜராத் மாநிலத்தில் உள்ள கர்பார் அணுமின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் அணு உலை – அப்சரா.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் அணு உலை அப்சரா ஆகும்.
- அப்சரா உலை ஆகஸ்ட் 1956 இல் கட்டப்பட்டது.
- அப்சரா உலைக்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு பெயரிட்டார்.
- இது மிகவும் பல்துறை நீச்சல் குளம் வகை உலை.
- இது அணுக்கரு இயற்பியலில் அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப் பட்டது.
- அப்சரா ஆசியாவின் பழமையான ஆராய்ச்சி உலை ஆகும்.
- 2009 இல் அப்சரா மறுசீரமைப்புக்காக மூடப்பட்டது.
- அப்சரா –மேம்படுத்தப்பட்ட (அப்சரா–யு) என்பது அபசரா உலையின் புதிய பதிப்பு.
- ஆயுதப் படையினருக்கு ஜிபிஎஸ் வசதியுடன் பிரத்தியேக காலனி
- இந்தூர் ஐஐடி உருவாக்கியது
- ஆயுதப் படை வீரர்களின் பாதுகாப்பு மற்றும் செயல் திறனை அதிகரிக்கும் கண்டுபிடிப்புக்காக மின்சாரம் தயாரிக்கும் மற்றும் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்துடன் பிரத்தேக காலணிகளை இந்துர் ஐஐடி வடிவமைத்துள்ளது
- இந்தக் காலணிகளை அணிந்திருப்பவரின் இருப்பிடத்தை நிகழ் நேரத்தில் கண்டறிய முடியும் என்று கண்டுபிடிப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
- DRDO விற்க்கு இந்த காலணிகளை இந்தூர் ஐஐடி வழங்கியுள்ளது •

**உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கையில் எடுத்துச் செல்லக்கூடிய – டாங்ஸ் எதிர்ப்பு ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது**

- எதிரிகளின் டாங்ஸ் மற்றும் கவச வாகனங்களை தகர்ப்பதற்கு, கையில் எடுத்து செல்லக்கூடிய ஏவுகணை லாஞ்சரை ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கியது •
- இதை எளிதாக கையில் தூக்கி சென்று தோள் பட்டையில் வைத்து எதிரிகளின் டாங்ஸ் மற்றும் கவச வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தலாம்•

**இந்தியாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்**

- இந்தியாவின் இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் மிழிஷி அரிகாட்நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- நாட்டிற்கு அர்ப்பணித்தவர் – ராஜ்நாத் சிங் (மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்).
- தயாரிக்கப்பட்ட இடம் – விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளம்.
- இது 750 கிலோமீட்டர் தூரம் சென்று தாக்கும் K–15 ஏவுகணையைக் கொண்டது.

- 112 மீட்டர் நீளமும் 6 ஆயிரம் டன் எடையும் கொண்டது.
- இந்தியாவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் ஐஎன்எஸ் அரிஹந்த் (INS Arihant).

**அக்னி-4 ஏவுகணை சோதனை**

- சோதனை செய்யப்பட்ட இடம் – ஒடிசாவில் உள்ள சந்திப்பூர்.
- தயாரிப்பு – DRDO.
- கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி –4, ஏவுகணை அணு ஆயுதங்களை சுமந்து சென்று நான்காயிரம் கிலோ மீட்டர் தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. மூன்று போர்க்கப்பலை பிரதமர் மோடி நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- INS சூரத், INS நீலகிரி, INS வாஷீர் ஆகிய மூன்று போர்க்கப்பலை பிரதமர் மோடி நாட்டிற்கு அர்பணித்தார்.
- இந்தியாவின் முன்னெடுப்பின் கீழ் இந்திய பெருங்கடலில் ஆழ்கடல் மலைகளுக்கு ராஜராஜ சோழன், அசோகர், ஹர்ஷவர்தன், சந்திரகுப்தர் போன்ற பேரரசர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.
- INS சூரத், உலகின் மிகப்பெரிய மற்றும் அதிநவீன தாக்குதல் போர்க்கப்பல்களில் ஒன்றாகும்.
- Project 17A திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட முதல் கப்பல் INS நீலகிரி.

**பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி**

**“நாக் மாக்2” ஏவுகணை சோதனை**

- ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் சோதனை நடைபெற்றது.
- தயாரிப்பு – பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO).
- முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டது.
- பீரங்கியிலிருந்து ஏவப்பட்டு எதிரி நாட்டு பீரங்கியை பின்தொடர்ந்து சென்று துல்லியமாக தாக்கும் திறன் கொண்ட முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட “நாக்“ என்ற மூன்றாம் தலைமுறை ஏவுகணையின் இறுதி கட்ட சோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.
- இந்த ஏவுகணையின் ஒட்டுமொத்த தொகுப்பும், ராணுவ பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்வதற்கு தயார் நிலையை எட்டி உள்ளது. மூன்று கடற்படை போர்க்கப்பல் நாட்டிற்கு அர்பணிக்கப்பட்டது
- INS சூரத், INS நீலகிரி, INS வாக் ஷீர் ஆகிய மூன்று முன்னணி போர்க்கப்பல்களை நாட்டிற்கு பிரதமர் மோடிஅர்ப்பணித்தார்.
- இவை மும்பையில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் திறக்கப்பட்டது
- B15B ஏவுகணை அழைப்புப்போர் கப்பல் திட்டத்தின் நான்காவது மற்றும் இறுதிக் கப்பலான INS சூரத், உலகின் மிகப்பெரிய மற்றும் அதிநவீன அழிக்கும் திறன் கொண்ட போர்க்கப்பல்களில் ஒன்றாகும்.
- இந்த கப்பல் 75% உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது
- பி75 ஸ்கார்பீன் திட்டத்தின் ஆறாவது மற்றும் இறுதியுமான நீர்மூழ்கி கப்பலான INS வாக் ஷீர், பிரான்ஸ்கடற்படையுடன் இணைந்து கட்டப்பட்டது.
- இது நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் நிபுணத்துவத்தை பிரதிபலிக்கிறது.

**இரு தனியார் நிலவு ஆய்வு கலன்களை விண்ணில் செலுத்தியது ஸ்பேஸ் எக்ஸ்**

- நிலவில் இறங்கி ஆய்வு செய்வதற்காக இரு தனியார் விண்கலன்களை அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர் எலான் மஸ்கிர்க்கு சொந்தமான விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் விண்ணில் செலுத்தியது.
- நிலவில் இறங்கி ஆய்வு மேற்கொள்ளும் ஜப்பானிய ஐஸ்பேஸ் நிறுவனத்தின் இரண்டாவது முயற்சி இது.
- ஏற்கனவே அந்த நிறுவனம் நிலவில் இரு ஆண்டுகளுக்கு முன்னர் தரையிறக்கமுயன்ற ஆய்வுக்கலும் விழுந்து நொறுங்கியது நினைவு கூறத்தக்கது.

**ஸ்ரீஹரிகோட்டாவில் மூன்றாவது ஏவுத்தளம்**

- ✓ ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் மூன்றாவது ராக்கெட் ஏவுத்தளத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையம் தற்போது இரண்டு ராக்கெட் ஏவுதலங்கள் உள்ளன.
- ✓ முதல் ஏவு தளம் 1990களின் ஆரம்பத்தில் கட்டப்பட்டது. 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் தேதி முதல் ராக்கெட் ஏவப்பட்டது.
- ✓ இரண்டாவது ஏவு தளம் 2005ல் செயல்பாட்டுக்கு வந்தது.

விண்வெளியில் ஆய்வு மையத்தை அமைப்பதற்கான முன்னோட்ட முயற்சியாக அனுப்பப்பட்ட ஸ்பேடெக்ஸ் இரட்டை விண்கலன்களை வெற்றிகரமாக விண்ணில் ஒருங்கிணைத்து புதிய மயில்கள் சாதனையை இஸ்ரோ படைத்துள்ளது.

- ✓ இதன்மூலம் அமெரிக்கா சீனா ரஷ்யாவை தொடர்ந்து விண்கலன் ஒருங்கிணைப்பை முன்னெடுத்த நான்காவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
